விவேக போதினி.

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 1 } 1908-ஞு நவம்பர் மீ { பகுதி 5

ஸநாதன தர்மம்

SANATANA DHARMA

இங்கிலீஷ் படிப்பும், உலகத்திலுள்ள மதங்கள் இவ்வாறு இருக்கின்றன என்ற அறிவும், இல்லாத நமது சாஸ்திரவித்வான்களை, "உமது மதம் என்ன" என்று கேட்டால் தகுதியான மறுமொழி சொல்லமுடியாமல் தத்தளிப்பார்கள். கச்சேரி விஷயமான பத்திரங்களில், இவர்கள் தம்மை வைஷ்ணவரென்றோ, சைவரென்றோ சொல்லிக்கொள்வது வழக்கம். ஆனால் வைஷ்ணவமும் சைவமும் ஹிந்துமதத்தில் சில கூட்டத்தார் கடவுளை விஷ்ணுரூபமாகவாவது சிவரூபமாகவாவது வழிபட்டு உய்ய ஏற்படுத்திய சிறிய பாகங்களே தவிர வேறில்லை. ஆகவே நாம் இவற்றுளொன்றை 'நமது மதம்' என்று எடுத்துரைத்தல் பொருந்தாது. முன்சொன்ன வித்வான்களுடைய குழப்பத்திற்குக் காரணம் தங்கள் மதத்தின் உண்மையை அறியாதிருத்தலே என்று சிலர் சொல்லுகிறார்கள். உண்மையான காரணம் அதுவல்ல. தங்களுடைய மதக்கோட்பாடுகளை, ஏற்படுத்தினவர்களுடைய கௌரவத்தை நோக்கி மூடத்தனமாக நம்பும் வழக்கம் இல்லாதிருப்பதும், உண்மையை உள்ளபடி உண வேண்டுமென்ற ஆவலும், ஆகிய இவைகளே முன்சொன்ன குழப்பத்திற்கு உண்மையா காரணம். வரவர இவர்கள் மனோதர்மத் விருத்தி யடைந்துகொண்டு, மேன்மேலும் ரச் செல்லுகிறார்கள். போகப்போக ம விரிதலால் மேலான உண்மைகள் அதில் தே றுகின்றன. ஆகவே கீழான நிலையில் ஒ போல் உதவிய கொள்கைகளைப் பழிக்க களுக்கு மனம் துணியாது. ஆனால் தாழ்ந்த கொள்கைகளே உண்மைய மேலான உண்மை இல்லவே இல்லை சொல்வதற்கு வேண்டிய பிடிவாதம் க்கு வர இடமே இல்லை. இவர்கள் எ கங்களால் இப்பொழுது இருக்கும் நி திருக்கிறார்களோ, அவைகளை எல்ல மதம் என்று சொல்லவேண்டியதாய் றது. ஏனெனில், அவர்கள் தமக்கு உப மாய் இருந்த பல கொள்கைகளையும் பழ இப்பொழுது தாம் இருக்கும் நிலை தமது மதம் என்று சொல்ல எப்படி துணிவார்கள்? ஒரு காலத்திலும் இ சொல்லத் துணியவேமாட்டார்கள். யால் தமது மதம் இன்னதென்று சொல்ல அவர்கள் மிகவுந் தத்தளிப்பார்கள்.

உண்மையை உணர்ந்து மௌனமாய் இருக்கும் அவர்களை, "தங்கள் மதம் இன்னதென்று சொல்லத்தான் வேண்டு" மென்று வற்புறுத்தினால் அவர்களுக்கு வேறொன்றும் சொல்லமுடியாமல், தமது மதம் 'உண்மைமதம்' என்று சொல்ல வேண்டியதாக வரும். ஆனால் இந்தப் பெயர் நன்றாகவும் ஒழுங்காகவும் இருப்பதாகத் தோற்றவில்லை. இப்பொழுது பெரும்பாலரா
லும் அங்கிகரிக்கப்பட்டு, நமது மதத்திற்கு
ஸனாதன தர்மம் என்ற பெயர் வழங்கிவர ஆரம்பிக்கிறது. இனி நாமும் இந்தப் பெயரை நமது மதத்திற்கிட்டு வியவகரிப்போம்.

நமது மதத்திற்கு இப்பொழுது ஹிந்து
... என்ற பெயர் இருக்க, இப்புதிய பெயரை
நாம் ஏன் அங்கிகரிக்கவேண்டும் என்ற சங்
கை சிலரது மனதில் உதிக்கலாம். ஹிந்து
...தம் என்றபெயர் நமது மதத்திற்கு அவ்
வளவு நல்ல பெயர் அன்று. முதலாவது இந்தப்
...யர் தேவபாஷையாகிய வடமொழிப் பெயர்
...ன்று. முன்காலத்தில் யவனர் நமது தேசத்
...து வந்தபொழுது, சிந்துநதிக்கரையில்
...முன்னோர்கள் இருந்ததைக் கண்டு, அவ
...ஹிந்துக்கள் என்று பெயரிட்டு அழைத்
...ர். இரண்டாவது ஹிந்துமதம் என்ற
...தைக்கு சிந்துநதிக்கரையி லிருப்பவர்க
...ப மதம் என்ற பொருளேயொழிய வே
... ஆகையால் ஒருவிதமாய் உற்று நோக்
... இப்பெயரில் அதிவ்யாப்தீதோஷம்
...து. (குறிப்பிடப்படாததில் குறிப்பி
...க்ஷணம் இருப்பதே இந்த தோஷத்தின்
...ரூபம்.) ஏனெனில், சிந்துநதிக்கரையில்
...காலத்தில் மஹம்மதியர் கிறிஸ்தவர் முதலிய
...மதஸ்தர்கள் இருக்கிறார்கள், அவர்களையும்
...பெயர் உள்ளடக்கி விடுகிறது. இவர்களது
...தை ஹிந்துமதம் என்று சொல்வது பொ
...து. வேறொருவிதமாய் நோக்குங்கால்
...ப்பெயரில் அவ்வியாப்தீதோஷமும் இருக்
... (இலக்ஷணமானது குறிப்பிட்டதின்
... பாகத்திலிருந்து மற்றொருபாகத்தில்
இல்லாதிருப்பதுதான் இந்த தோஷத்தின் ஸ்வரூபம்). ஏனெனில் இம்மதஸ்தர்கள் இப்பொழுது நமது இந்தியாதேசம் முழுவதும் பரவி இருப்பதினால் அவர்களெல்லாரையும் இப்பெயர் உள்ளடக்கிக் கொள்ளவில்லை. மூன்றாவது, இந்தப்பெயர் இம்மதத்துள் அடங்கியவிஷயங்களையாவது, இம்மதத்தைக் கண்டுபிடித்தவர் (அப்படி ஒருவர் இருந்தால் அவருடைய) பெயரையாவது உணர்த்தவில்லை. கண்டு பிடித்தவர் ஸம்பந்தமான பெயர்கள் இதர மதங்களுக்குத் தக்கபடி அமைந்திருக்கின்றன. ஆகவே ஹிந்து மதம் என்ற பெயரைத் தள்ளிவிட்டு வேறுபெயரை அங்கீகரிப்பது அதிக அவசியம்.

ஸனாதன தர்மம் என்ற பெயரோ முன்சொன்ன தோஷங்கள் ஒன்றும் இல்லாததாய் இருக்கிறது. இதுவே நமது மதத்திற்குத் தகுந்த பெயர். இப் பெயரில் அடங்கிய இரண்டு பதங்களும் வடமொழிப் பதங்கள். வடமொழியில் எப்பொழுதும் என்று பொருள்படும் சதா என்ற தாது திரிந்து, இருத்தல் என்று பொருள்படும் தன என்ற தாதுவோடு சேர்ந்து, ஸனாதன என்ற பதம் உண்டாய் இருக்கிறது. ஆகவே ஸனாதன என்ற பதத்திற்கு எப்பொழுதும் மாறாதிருக்கும் ... பொருள். தர்மம் என்ற சொல்லானது தாங்கும் என்று பொருள்படும், த்ரு என்ற வடமொழித் தாதுவிலிருந்துண்டானது; தாங்கல் அல்லது ஊன்றுகோல் என்று பொருள்படும். ஒருவன் அவசியம் செய்யவேண்டிய காரியம் அவனுக்கு ஊன்றுகோலுக்கு ஸமானமாதலின், தர்மம் என்ற சொல்லுக்கு அவசியம் செய்யவேண்டிய காரியம் என்ற பொருள் உண்டாயிற்று. கடவுள் வழிபாடும், அதற்கனுகூலமாக ஏற்பட்டுள்ள மதக்கோட்பாடுகளின்படி நடத்தலுமே ஒருவன் செய்யவேண்டிய அவசியமானவைகளாதலின், தர்மம் என்ற சொல் கடைசியாய் மதம் என்று பொருள்பட்டது. இந்த மூன்றாவது பொருளிலேதான் இங்கே இந்தச் சொல் உபயோகப்படுத்தப்பெற்றிருக்கின்றது.

ஆகையினாலே ஸனாதன தர்மம் என்ற பதத்திற்கு நித்யமதம் அதாவது நித்யவஸ்துவைப் பற்றிச் சொல்லும் மதம் என்றும், எக்காலத்திலும் ஸ்திரமாய் நிற்கும் மதம் என்றும் அர்த்தம். ஆகையால் இப்பெயர் நமது மதத்திற்கு நன்றாகப் பொருந்தும்.

ஸனாதன தர்மம் என்பது எந்நாளும் மாறாத உண்மையாய் இருப்பவைகளைச் சொல்லுமானால், அதில் அடங்கிய பாகங்களெல்லாம் இம்மாதிரியான உண்மைகளைச் சொல்லவேண்டும் என்பது அவசியமில்லையா? ஆனால் முன்சொன்ன ஞானஸோபானத்தில் தாழ்ந்தபடியில் இருக்கும் மதமானது மேன்மையான உண்மையை ஒருவாறு காட்ட இந்த உண்மையைப்பற்றிய எண்ணம் மேன்மேலும் விருத்தி யடைந்துகொண்டு வருகிறது, என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தக் கீழ்ப்படியில் இருக்கும் மதத்திற்கு ஸனாதன தர்மம் என்ற பெயர் எப்படிப் பொருந்தும்? என்ற சங்கை உண்டாகலாம். அரை குறையாய் அறிந்த ஒருவன் ஸனாதன தர்மத்தின் உண்மையைப்பற்றி ஒருவிதமான எண்ணங்கொண்டால் ஸனாதன தர்மத்தின் உண்மைக்குக் குறைவொன்றுமில்லை. கண்நோய்க்காரனுக்கு சூரியன் மிகவும் களங்கமும் மங்கலும் உடையதாய்த் தோன்றினபோதிலும், உண்மையில் சூரியன் எப்படி நிஷ்களங்கமும் பிரகாசமும் உடையதாய் இருக்கிறதோ, அப்படியே ஸனாதனதர்மத்தின் உண்மையும் நிஷ்களங்கமும் பரிசுத்தமும் உடையதாய் இருக்கும். கண்நோய்க்காரன் அது நீங்கிவிட்டபின்பு, சூரியன் உண்மையில் எவ்வாறு இருக்கிறதோ, அவ்வாறே அறிவான். இதுபோல அரைகுறை அறிந்தவனுக்கும் மனது சுத்தமானதும் ஸனாதன தர்மத்தின் உண்மை உள்ளபடி விளங்கும். முதலில் விளங்காமைக்குக் காரணம் அவனது மனதில் உள்ள களங்கமே. மேலும் ஒரு மனிதன் சூரியனைநோக்கிப் புறப்பட்டு, போய்ச் சேருமளவும் ஒவ்வொரு இடத்திலும் சூரியனைப் படம் எடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் படப்பெட்டியை எடுத்துக்கொண்டு போவதாக வைத்துக் கொள்வோம். ஒரு இடத்தில் எடுத்த படத்திற்கும் மற்றொரு இடத்தில் எடுத்த படத்திற்கும் அதிக பேதம் காணப்படும். அவன் திரும்பி வரும்பொழுது பல்லாயிரம் விசித்திர படங்களோடு வருவான். அந்தப் படங்கள் வெவ்வேறுவிதமாய் இருந்தபோதிலும், ஒரே சூரியன் அநேக விடங்களில் தோன்றும் விதத்தால் இவ்வாறு ஆயின என்று நமக்கு நன்றாய்த் தெரியும். இப் படங்கள் போலவே ஸனாதன தர்மத்திலுள்ள மதங்களும் பற்பல பேதமாகக் காணப்படுகின்றன. உயர்ந்தனவும் தணிந்தனவுமான, தத்துவங்கள் மூலமாகவாவது, கொள்கைகள் மூலமாகவாவது, கர்மங்கள் மூலமாகவாவது, நுட்பமும் ஸ்தூலமுமான இருவகைக் கதைகள் மூலமாகவாவது, ஸனாதன தர்மத்தின் பாகங்களாகிய மதங்களெல்லாம் ஒரே உண்மைப்பொருளைத் தெரிவிக்கின்றன. ஆகையால் இம்மதங்கள் எல்லாவற்றிற்கும் ஸனாதன தர்மம் என்ற பெயர் பொருந்தும்.

மேலும் ஸனாதன தர்மம் தன்னைப் பின்பற்றி இருக்கும் ஒவ்வொருவனையும் அவனவனுக்கு தகுந்த மார்க்கங்கள் மூலமாக படிப் படியாய் அவனறியாத வண்ணமே அவனைத் திடமாக மேலான நிலைக்குக் கொண்டு வந்து பிழைக்கும்படி செய்கின்றது. இம்மாதிரியான சீர்திருத்தும் வழியை நமது மதம் மாத்திரம் சிறப்பாக உடைத்தாயிருத்தலால் இதற்கு எக்காலத்திலும் மாறாது ஸ்திரமாக நிற்கும் சக்தி உண்டாயிருக்கின்றது. இக்காரணம் பற்றியும் நமது மதத்திற்கு ஸனாதன தர்மம் என்ற பெயர் பொருந்தும். நமது மதத்தில் வாய்ந்திருக்கும் இந்த அற்புதமான சீர்திருத்தும் சக்தியைப்பற்றி அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன், B.A., L.T.

சார்சு - அக்லோ - போப், துரை சரிதம் கிரிஸ்தவ போதகர், ஜனனம். கி. பி. 1820, மரணம் 1908.

THE REVD - GEORGE UGLOW POPE, D. D.

இந்தத் துரையவர்கள் தமிழில் வல்லவர், அநேக நூல்களை இயற்றியுள்ளர், அறிவில் சிறந்தவர், அவர் இறந்து இன்னும் ஒருவருஷங் கூட ஆகவில்லை, ஆதலால் அவர் நம் காலத்தைச் சேர்ந்தவர். ஆகையால் இச்சிரியர் சரித்திரம் நாம் உவந்து அப்பிபவிக்க யோக்கியமானது.

அமெரிக்கா கண்டத்துக் கடுத்த புதிய ஸ்காத்லண்ட் என்று பொருள்படும், பெயரை உடைய (Nova Scotia) நோவோ ஸ்கோஷியாத் தீவே இவர் பிறந்த விடம். பின்னர் இங்கிலண்ட் சீமையில் (Hocton College) ஆக்டன் காலேஜில் கல்விகற்று, (Wesley) வேஸ்லி போதகாசிரியர் இனத்தில் சேர்ந்து, இந்தியாவுக்கு வர நினைத்திருந்தார். அப்படிச் செய்ய முடியாது, இவர் (Church of England) இங்கலண்ட் சர்ச்சுப்போதகர்கள் கூட்டத்தில் சேர்ந்தனர். இந்தியாவுக்கு வரும் முன்னமேயே இங்லண்டில், தமிழையும், தெலுங்கையும், கற்றூர். இந்தியாவுக்குவரக் கப்பலில் '-மாத காலம் அடைபட்டிருந்த பொழுதும், கப்பலில் தமிழ்ப்புத்தகங்களைப் இவர் படித்துவந்தார். அக்காலத்தில் ஆப்பிரிக்காவைச் சுற்றி வரவேண்டி இருந்ததால் இப்பொழுது 18-நாளில் முடிவாகும் பிராயாணத்திற்கு அப்பொழுது 6-மாதம் வேண்டியதா யிருந்தது. மதிராவில் இறங்கியபின், இவர் தமிழ்மாத்திரமே அன்றி, தெலுங்கும், இந்துஸ்தானியும் படித்தார். முதல் முதலில் திருநெல்வேலி ஜில்லாவில் சாயர்புரத்துக் கிரிஸ்தவ தேவஸ்தானத்து அத்தியக்ஷராய் அமர்ந்தார். அவ்விடத்தில் கிரிஸ்தவர் கூட்டம் பல்மானது, இவர் வேலையில் சேர்ந்தபின், விசேஷம் பேர் மேன்மேலும் சேர்ந்தனர், திருக்கூட்டம் வலிவுபெற்று, கூட்டத்தினர் சிலர்களாயினர். இன்றைக்கும் சாயர்புரம் சிறந்த கிரிஸ்தவத் திருக்கூட்டத்தலம். அவ்விடத்தில் தாம் உத்தியோகவேலைக்காக உழைத்ததுமல்லாமல், பாடசாலை நடத்தித் தமிழ்படிப்பில் மென்மேலும் தாம் தேர்ச்சிபெற்றனர். இவ்வளவு உழைத்தபடியினுல் உடல் நோய்பட்டு இவர் சீமைக்குப் போய் ஒய்வு உற்றுச் சிகிச்சை செய்துகொள்ளும்படி நேரிட்டது. இச்சமயத்தில், ஆக்ஸ்போர்டில் Oxford (Bishop Wilberfoce, F. D. Maurice, Professor Selwyn) வில்பர்போர்ஸுக் குரு, எப்-டி-மாரிஸ், ஸெலீவின் பண்டிதர், இவர்களுடைய நண்பினராக இவருடைய புலமையை அப்பெரியோர்கள் நன்குமதித்தனர். இந்தியாவுக்கு இவர் திரும்பியும் வந்தபொழுது, தஞ்சாவூர்ப் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயராய் நியமிக்கப்பட்டனர். இப்பள்ளிக்கூடமே, பிற்காலங்களில் மார்ஷ்துரை, (Dr. Marsh) (Mr. Blake) ப்ளேக் துரை இவர்களால், உயர்தரப் பாடசாலையாக ஆக்கப்பட, அநேகர் ஆண்டுதோறும் பி. ஏ. பட்டப் பரீக்ஷை தவறுது கொடுத்து வந்தனர். இந்தகாலேஜ் கொஞ்சகாலேக்குமுன்பாகத்தான் நிர்வாகக்குறைவால் முடப்பட்டது. போப் துரை இந்தப் பள்ளிக்கூடத்தை நடத்திய காலங்களில், படிப்புஇலாகா என்று வேறுய் பிரிவுகள் ஏற்படவேண்டும், அங்கங்கே தேசபாஷைகள், இங்லிஷ் நூல்கள், கணிதம், சாஸ்திரங்கள், இவைகளில் படிப்பு சொல்வதற்குப் பாடசாலைகள் துரைத்தனத்தார் ஆதரவிலே ஏற்படவேண்டும், என (Sir Charles Wood's Educational Despatch,) சீமையிலிருந்து உத்தரவு வந்தது. பாடம்சொல்லப் புத்தகங்கள் சரியானவை தமிழில் கிடையாமைபற்றி, போப் துரை மேல் அதிகாரியாயும், இந்தியப்படிப்பாளிகளில் அனேகர் துணையாயும், கொண்டு துரைத்தனத்தார் ஒருஸங்கம் ஏற்படுத்தவே, தமிழ் இலக்கணப்புத்தகங்கள், மேல், இடை கீழ்த்தாரமாக-மூன்று இவரால் எழுதப்பட்டுப் பிரசுரமாயின. இம்மூன்றையும் (Madras School Book Society) மதிராஸ் பாடசாலைக் கிரந்த சபையார்—வாங்கித் தமது ஆதீனத்தில் பதிப்பித்தனர். செய்யுட்கலம்பகம் என்னும்

பன்னூற்றிரட்டு ஒன்றும் நன்னூலும், போப் துரை போட வெகுநாள் பள்ளிக்கூடங்களில் அவை பாடமாக வைக்கப்பட்டு விசேஷமாய் விலையாகி (Church Missionary Society)—சர்ச்சு மிஷன் கூட்டத்தாருக்குத் திரண்ட பொருள் வரும்படி செய்தன.

இதன்மேல் உடற்சுகத்துக்காக உதகமண்டலத்துக்கு இவர் மாற்றலாக அனுப்பப்பட்டு, அவிடத்தில் துரைமார் பிள்ளைகளில் மிகச் சிறுவர்களுக்கு கிராமர்ஸ்கூல் (Grammar School) ஒன்றும், முதிர்ந்த பிள்ளைகளுக்கு பாண்டித்தியப் பாடசாலை (College) ஒன்றும், ஸ்தாபிக்க முயன்றனர். அவிடத்தில், ஊர்வாசிப்பு மடம் (Public Library) ஒன்றும், ஸேண்ட் (Thomas's Church) தாமஸ் கோவில் ஒன்றும், இவரால் உருவாக்கப்பட்டன. பின்னர் இவர் பங்களூரில் (Bishop Cotton's School) பிஷப் காடன் பள்ளிக்கூடத்துக்கு, (Warden) மேலதிகாரியாய் இருந்து 10-வருஷகாலம் வேலைபார்த்து வந்தனர். வயதானதின்மேல் இங்கலண்ட் தேசத்தில் தம் விருத்தாப்ய காலத்தை கழிக்க நிச்சயித்து இவர் சீமைக்குச் சென்றனர்.

இவர் விசேஷப் பொருள்படைத்தவரல்லர் விவாகம் செய்துகொள்ளவில்லை என்று நினைக்கிறோம், இவர் சீமை சென்று ஆக்ஸ்போர்ட்டில் அமர்ந்தனர். அங்கு (Balliol) பாலியல் காலிஜுக்குசமய ஆசிரியராயும், (Civil Service Examination) கலெக்டர் உத்தியோக பரிக்ஷையில் தேறினோர்க்குத் தமிழ் தெலுங்கு பாடம் சொல்லும் உபாத்தியாயராயும் நியமிக்கப்பட அதிலிருந்து வந்த வரும்படியினால் ஜீவனம் செய்துவந்தனர்.

இங்கிலாந்திலிருக்குங்கால் துரைமார் தமிழ் கற்றுக்கொள்ள இவரால் எழுதி வெளியிடப்பட்ட தமிழ்வாசகப் புத்தகம் அநேகம் இப்பொழுதும் நம்மூர் புத்தகசாலைகளில் விற்கப்பட்டு வருகின்றன.

இங்கிலண்டில் பலர் சிபார்சியின் பேரில் 1901-ம் ௵ முதல் இந்திய துரைத்தனத்தார் கௌரவச் சம்பளம் மீ 1-க்கு சுமார் ரூ 150 இவருக்கு அளித்துவந்தனர்.

ஆக்ஸ்போர்டில் (Oxford) M. A. பட்டமும், சிறந்தகுரு என்னும் டி. டி. D.D. ப்பட்டமும் இவருக்குக்கிடைத்தன. (Royal Asiatic Society) ராயல் ஏஷீயாடிக் ஸொஸைடியாரால் வித்வத் சம்பாவனையாக தங்கப்பதக்கமும் இவர் (Medal) பெற்றார்.

ஆக்ஸ்போர்டில் இவர் வாழ்ந்த காலத்தில் தமிழில் முக்கியமாகிய பொதுநூலாம், நாலடியார், குறள், சமயநூலாம் திருவாசகம், இவற்றை தமிழ் அச்சுவார்ப்பித்து விசேஷவுரைகளுடன் இங்லீஷில் பாஷாந்தரப் படுத்திப் பிரசுரம் செய்திருக்கிறார். திருவாசகப் பதிப்பில் சைவசித்தாந்தத்தைத் இங்கிலீஷில் மொழிபெயர்த்து தெளிவுற எடுத்துக் காட்டியிருக்கின்றார். அதனைப்படிக்க, இவரது தமிழ்ப் புலமை விளங்கும், இவர் சைவசமயத்தில் மனப்பற்று உடையவர் எனத்தெரிய வரும்.

மொழிகளுக்கு பிறப்பு, பொருள், பிரயோகம் இங்லீஷில் காட்டும் அகராதிகளைப்போல, தமிழிலும் அகாரதி இல்லாமையைக்கண்டு அப்பேர்ப்பட்டத் தமிழ் அகராதி ஒன்றை எழுதி வெளியிட இவர் விடாமல் முயன்றார் இதற்குப் பொருள் உதவி செய்ய மதிராஸ் துரைத்தனத்தார் இணங்கினர், சுமாராய் வேலையும் முடிந்திருக்கிறதாம், இனிமேல் புஸ்தகம் (Clarenden Press) கிளரண்டன் அச்சுக்கூடத்தாரால் கூடிய சீக்கிரத்தில் வெளியாகலாம்.

1908-ம் ௵ துவக்கத்தில் இவர் உடல்பிரிய, உடனே பெருமை தங்கிய கவர்னர் அவர்கள் பாலவனத்தம் ஜமீன்தார் துரையவர்கள், இன்னும் பலர், சேர்ந்து செய்த, திரவிய சகாயத்தின் பேரில் தோட்டக்காடு ம-ா-ா-ஸ்ரீ ராமகிருஷ்ணபிள்ளையவர்கள், நமது கலாசாலைச்சங்கத்தில் இவர்பேரில் தமிழில் பரிசு அளிக்கும்படி ரூ 1,000 இப்பொழுதுதான் அநுப்பியுளர். இதிலிருந்து கிடைக்கும் வருமனத்தைக்கொண்டு சிறந்த தமிழ்நூல்களை அச்சிடுவோருக்கும் அவைகள் விஷயமாகத் தக்க ஆராய்ச்சி முதலியன செய்வோர்க்கும் தகுதியான பரிசு அளிக்க யோசனை நடந்துவருகிறது.

தாம் பதிப்பித்திருக்கும்திருக்குறள் முகவுரையில் இவர் கிறிஸ்தவச் சமயத்தினர், ஸஹவாஸத்தால் ஆதியில் தமிழர் விக்ரக ஆராதனம் பயனற்றதெனத்தெரிந்து கொண்டதாக அபிப்பிரா

யப்படுகிறார். இந்த அபிப்பிராயம் யுக்திக்குப் பொருந்தினதாகக் காணப்படவில்லை. இவர் கிறஸ்தவராதலால் இவ்வாறு அபிப்பிராயப்பட்டார். ஆயினும் இவருடைய மனது சிறந்த தமிழ் நூற்பயிற்சியால் சைவஸித்தாந்தத்தின் சிறப்பிற்கு ஈடுபட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது.

The world takes nothing away, and nothing can give;
It has but the seeming—'t is in God that we live

வாழ்வினால் சிவத்துக்குப்பழுது இல்லை, ஆவது மில்லை,
வாழ்வாவது மாயம், சிவமே வாழ்வினுக்கு உயிராம்.

இவ்வாறு எழுதியவர் ஸதா நமது பரதகண்டத்தைப் பற்றி எண்ணிக்கொண்டே இருந்திருக்க வேண்டும் என்றும், அவர் இறந்தகாலத்தும் நமது சீரிய நாட்டைப்பற்றிய எண்ணம் அவர் மனதை விட்டு அகலாதிருந்திருக்க வேண்டும் என்றும் எமக்குத் தோன்றுகிறது. நமது தேசக்ஷேமத்திற்கு அவர் பட்ட பாட்டிற்கு நாம்போதுமான மட்டும் கைம்மாறு செய்ய முடியாதென்பது எளிதில் விளங்கும்.

போப்துரை சரித்திரத்தை ரங்கூன் Mr. சாமவேல் அவர்கள் தாம் எழுதியுள்ள புத்தகம் ஒன்றில் பின் வருமாறு சுருக்கிச் சொல்லியிருக்கிறார்:—

'தயாதாக்ஷிண்ணிய தைரிய சௌரியாதி சகல கல்யாண குணபரிபூரண காருண்ணிய சாக்ஷாத் ஜெகதீசன் பாதாரவிந்தத்தை யனுதினமும் தியானித்து ஞான நிஷ்டையிலிருந்து வரும், அருள்பெற்ற பேர்க்கெல்லாம் ஒளிபெறச்செய்யும் வேதநீதி சாஸ்திரோபதேசம் பீடமாகிய சர்வகலாசாலைகளை இந்தியாவின் பற்பல இடங்களிலுமமைத்து நம்பாலியர்க்கு ஞானாமிர்தத்தை யூட்டிக் கீர்த்திநிரம்பப் பெற்றவரும், சீமையிலிருந்து தென்னிந்தியாவுக்குக் கலெக்டராகவரும் ஐரோப்பியருக்குத் தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளைக் கற்பித்ததேயன்றித் தக்ஷிண நாட்டவர்களின் சன்மார்க்க பக்தி வைராக்கிய சற்குணங்களை வெகுவாய்ப் பிரசுரஞ் செய்து ஆங்கிலேயர் மனதில் நம் நாட்டவரைப்பற்றி நல்லெண்ணம் புகச்செய்து வந்தவரும், சைவசித்தாந்தம் என்னப்பட்ட, இந்து வேதாகம தத்துவநூலின் சமயக் கொள்கைகளை எடுத்து விவரிக்கும் அரியநூல்களையும், மாணிக்க வாசக சுவாமிகள், திருவள்ளுவ நாயனார் முதலிய மகாத்துமாக்களின் திவ்ய சரித்திரங்களையும், இன்னும் திருவாசகம், திருக்குறள், நாலடியார், தனிப்பாசுரத்தொகை, இலக்கண சூத்திர முதலிய அரிய நூல்களையும் ஆங்கிலேய பாஷையில் தமதன்போடு பாடி அச்சிட்டவருமாகிய மகாமகத்துவந் தங்கியவர், இப்போப் துரையவர்கள்.'

டி. ஆர். ராமநாதய்யர். B. A., L. T.

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE



11-எரிமலைகளின் இயற்கை

VOLCANOES—A DESCRIPTION

எரிமலைகள் நமது சிகரம் முதலிய இடங்களிலிருந்து நெருப்புக் கக்கும் மலைகள். இம்மாதிரியான ஒரு மலையில், அது ஓய்ந்திருக்குங் காலங்களில், எரி நெருப்பு வரும் இடத்தை நோக்கினால் அது அகன்ற குழியாகக் காணப்படும். அதற்கு எரிமலைவாய் என்று பெயர். அதிலிருந்து ஒரு குழாய் கீழே பூமியின் உட்பாகத்தை நோக்கிப்போகும். எரிமலைவாயையும் அதிலிருந்து கீழேபோகும் குழலையும் நோக்கினால் அவை ஒருபெரிய பெய்குழலைப் போலக் காணப்படும். அதன் வழியாகத்தான் மலை அக்கினியைக் கக்குகின்றது. சிற்சில மலைகளைப் பரிசோதிக்குங்கால் ஒரே பெரியவாயுள் அநேக சிறியவாய்களும், மலைச்சாரலில் ஏராளமான வெடிப்புகளும் காணப்படும். இவைகளின் வழியாகவும் நெருப்பு வழிவது உண்டு. உலகத்தில் பெரும்பாலும் எரிமலைகள் அதிக உயரமாகக் காணப்படவில்லை. அமெரிக்கா தேசத்திலுள்ள கோடபாக்ஸி

முதலிய இரண்டொரு எரிமலைகளும், கீழ் இந்திய தீவுக் கூட்டங்களில் உள்ள இரண்டொரு எரிமலைகளுமே அதிக உயரமானவை. கொடபாக்ஸி முதலிய எரிமலைகளின் வாய் மிகப் பெரிதாயும் ஸாதாரணமாக மற்றைய எரிமலைகளின் வாய் சிறிதாயும் இருக்கும். எரிமலைக்ளிலிருந்து நல்ல கந்தகம் வெளிவருவதுண்டு, எரிமலைவாயுள்ளும் அது காணப்படும். அதை எடுக்க அநேகர் எரிமலைக்குழாயுள் இறங்குவதுண்டு. அமெரிக்கா தேசத்தில் ஒரு எரிமலைக்குழாயுள் சில வேலைக்காரர்கள் ஒருக்கால் கந்தகம் எடுக்க இறங்கினராம். அங்கு குழாயின் அடிப்பாகத்தில் அக்கினிகுளம் ஸதா கொதித்துக்கொண்டிருந்ததை அவர்கள் கண்டு அது வீசும் அனலையும் ஒளியையும் பொறுக்கமுடியாது, நரக தர்சனம் கண்டாற்போல வெருண்டு வெளியே முதலில் ஓடிவந்து விட்டனராம். இம்மாதிரி பயங்கரமான வாயும் குழலுமே எரிமலையின் முக்கியமான பாகம். இது ஸாதாரணமான மலைகளில் இருப்பதில்லை.

உலகில் எரிமலைகள் அமைந்திருக்கும் ஒழுங்கை உற்றுநோக்குவோம். உலகில் உள்ள எரிமலைகள் யாவும் ஸமுத்திரக் கரையோரமாகவே அமைந்திருக்கின்றன. இவற்றுள் பெரும்பாலும் பஸிபிக் மஹா சமுத்திரத்தைச் சுற்றியே உள்ளன. அமெரிக்கா கண்டத்தின் மேல் கரை ஓரமாக உள்ள மலைத்தொடர்களிலே தான் உலகில் உள்ள அதிக உயரமான எரிமலைகள் காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவைகள் பயங்கரமான கோடபாக்ஸி, சிம்பரோஸோ, ஓரிஸாபா, போபோகாட்பீடல் முதலியன. இவைகளே பஸிபிக் மகா சமுத்திரத்தின் கீழ்க்கரையில் காணப்படும் எரிமலைகளுள் முக்கியமானவை. அமெரிக்கா கண்டத்தின் வடமேற்பாகத்திலுள்ள தீவுகளின் வழியாக ஆசியா கண்டத்தின் கீழ்கரைக்கு வரும்வழியில் அநேக எரிமலைகள் வரிசையாக உண்டு. பின்பு ஆசியாவின் கீழ்கரையும் பஸிபிக் மகா சமுத்திரத்தின் மேல்கரையும் இருக்கிற பாகத்தின் வழியாக தெற்கே வந்தால் வழியிலுள்ள ஜபான் தீவுகள், பார்மோஸா, பிலிபைபின் தீவுகள், கீழ் இந்தியத் தீவுக்கூட்டங்கள் முதலியவைகளிலும் எரிமலைகள் அமைந்திருக்கின்றன. இறுதியில் கூறிய தீவுக் கூட்டங்களுள் சேர்ந்துள்ள ஜாவா என்னும் ஒரு சிறுதீவில் சற்றேறக்குறைய 40 எரிமலைகள் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் இவைகளை ஸம்ஹாரக்கடவுளாகிய சிவபெருமானது வெளிப்படைத்தோற்றம் என்றும், இவைகள் அவரது இருப்பிடம் என்றும் கொண்டு அவைகளுக்கு வந்தனைவழிபாடுகள் செய்கின்றனராம். பஸிபிக் மஹாஸமுத்திரத்தின் மத்தியில் உள்ள தீவுகளில் பெரும்பாலும் ஒவ்வொன்றில் ஒவ்வொரு எரிமலை இருக்கலாம். அவற்றுள் ஸாண்ட்விச்தீவில் ஸதா எரிந்துகொண்டும் கொதித்துக்கொண்டும் இருக்கும் உருகிய மண்கற்கள் நிறைந்த குளம் ஒன்றிருக்கிறது. இவ்வாறு பஸிபிக் மஹா ஸமுத்திரத்தைச் சுற்றியுள்ள எரிமலை ஒழுங்கிற்கே எரிமலைச்சக்கிரம் என்று பெயர். இதில் உள்ளவைபோக உலகிற் சிற்சில இடங்களிலும் எரிமலைகள் காணப்படும். அவையாவன ஐரோப்பாகண்டத்தின் வடபாகத்தில் இருக்கும் ஐஸ்லெண்டுத் தீவிலுள்ள ஹேக்ளா, அக்கண்டத்தின் தென்பாகத்தில் உள்ள ஸிஸிலித்தீவி லிருக்கும் எட்னா, அதன் அருகாமையில் உள்ள தீவிலிருக்கும் ஸ்டார்ம்போலி, தீபகல்பமாகிய இடலி என்ற தேசத்தில் நேபல்ஸ் என்ற நகரத்தின் அருகாமையில் உள்ள விஸூவியஸ் ஆகிய இவைகளே. நமது சென்னைக்கருகில் ஸமுத்திரத்தில் $7\frac{1}{2}$ மைலுக்கப்பால் ஒரு எரிமலை மூழ்கிக் கிடக்கிறதாம். ஐரோப்பாவில் பிரான்ஸ் தேசத்தில் எரிமலைபோன்ற வாயையுடைய சிறுகுன்றுகள் காணப்படுகின்றன. ஆகவே உலகிலுள்ள எரிமலைகள் எங்கிருப்பினும் கடலோரமாகவே ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு அமைந்துள்ள இவ்வற்புத மலைகள் மூன்று விதமாகக் காணப்படுகின்றன. ஸ்டார்ம்பொலியைப் போன்ற சில மலைகள்

எப்பொழுதும் விடாது எரிந்துகொண்டிருக்கின்றன. இம்மாதிரி மலைகளுக்கு எரியும் எரிமலை என்று பெயர். உலகில் இம்மாதிரியான மலைகள் 270 இருக்கின்றன. இவற்றுள் பஸிபிக் மஹாசமுத்திர எரிமலைச் சக்கிரத்துள் 190 அடங்கி இருக்கின்றன. முற்கூறிய ஸ்டார்ம்பொலி ஐரோப்பாவின் தெற்கிலுள்ள பூமத்யக் கடலின் நடுவில் இருக்கின்றது. அந்தக் கடலுள் கப்பல்கள் பிரவேசித்துவிட்டால் இரவில் ஸ்டார்ம்பொலியின் ஒளியைக் கண்டுகொண்டேயிருக்கலாம். ஆகையால் அதற்கு பூமத்யக் கடலின் தீபஸ்தம்பம் என்று பெயர் வந்திருக்கின்றது. வேறு சில எரிமலைகள் இப்பொழுது எரிந்துகொண்டிராமல் முற்காலத்தில் அநேகந் தரம் எரிந்திருப்பதைக் குறிப்பிக்கும் அடையாளங்களை உடைத்தாய் இருக்கின்றன. அவை பிற்காலத்தில் எந்த ஸமயத்தில் எரிந்தாலும் எரியலாம். இம்மாதிரி மலைகளுக்கு அடங்கி இருக்கும் எரிமலை என்று பெயர். கொடபாக்ஸி, விஸூவியஸ், எட்னு, ஹெக்ளா, பட்டணத்தருகில் உள்ள எரிமலை ஆகிய இவைகள், அடங்கியிருக்கும் எரிமலைகளே. பிற்காலத்தில் எப்பொழுதாவது திடீரென்று இவை எரியத்தொடங்கலாம். மற்றுஞ் சிலமலைகள் பார்வைக்கு எரிமலைபோன்ற வாய்களை உடையனவாய் இருக்கும். இதுவரை எரிந்ததாக ஊகித்தறிதற்குவேண்டிய அடையாளங்கள் இவைகளில் காணப்படுவதில்லை. இவைகளுக்கே அவிந்த எரிமலைகள் என்றுபெயர். பிரான்ஸ் தேசத்தின் மத்தியபாகங்களில் காணப்படும் மலைகளில் அநேகம் அவிந்த எரிமலைகளே.

எரிமலைகள் எரிந்துகொண்டு அக்கினி கக்கும் தொழிலாகிய உற்பேதம் என்ற தோற்றத்தைச் சற்று விவரிப்போம். எரிமலைகளில் உற்பேதம் தொடங்குவதற்குமுன் தூரத்தில் முழங்கும் இடிபோன்ற சப்தமும், பூகம்பமும் உண்டாகும். வரவர இவைகள் அதிகரிக்கும். பின்பு எரிமலை குழலில் அடிக்கடி பீரங்கிபோட்டாற் போன்ற சப்தம் உண்டாகும். உடனே எரிமலை வாயிலிருந்து ஸங்கமான தூசிக் குவியல்களும், நீராவியணுக்களும் வெகுவேகமாக ஆகாயத்தில் எறியப்பட்டு வெகு உயரம் கிளம்பும். இந் நீராவி உயரப்போய் மழையாக மாறி எரிமலைமேல் இறங்கும். அப்பொழுது இடி, மின்னல்கள் உண்டாகும். எரிமலைவாயின் வழியாக வரும் தூசிக்குவியல் ஸூரியன்ஒளியைத் தடுக்க, மலையைச்சுற்றிலுமுள்ள காதவழி தூரம் இருண்டுபோகும். இப்பொழுது விவரித்தவை யாவும் விஸூவியஸ் உற்பேதத்தில் ஸாதாரணமாக உண்டாவன. இதற்கு மேலாயும் கொடபாக்ஸி முதலிய அமெரிக்கா எரிமலைகளில் பயங்கரமான தோற்றங்கள் உண்டாகும். அதிக உஷ்ணமான மிகப்பெரிய கற்கள் எரிமலை வாயிலிருந்து வேகமாகப் பெரிய சப்தத்தோடு கிளம்பி ஒன்றோடொன்று அடிபட்டுச் சிதறி வெகு தூரம்போய் விழும். இவைகள் விழுந்த விடங்களில் உள்ள ஊர்கள் தடையின்றி அழிந்துவிட வேண்டியதுதான். இரவில் இந்த குழப்பம் தொடங்கிவிட்டால் இக் கற்களிலிருந்து உண்டாகும் நெருப்பு முதலியன மிகப் பயங்கரமாக இருக்கும். கொடபாக்ஸி சிற்சில ஸமயங்களில் உற்பேத பலத்தால் 7-யானை கனமுள்ள பெரிய கற்பாறைகளை ஒன்பது மைல் ஏறும்படி எறியுமாம். அமெரிக்காவில் உள்ள வேறொரு எரிமலை 36 மைல் உயரம் ஏறும்படி கற்கள் எறியுமாம். இவ்வாறு உற்பேத ஆரம்பத்தில் வெளியாகி மிகுந்த உயரம் கிளம்பும் லகுவான வஸ்துக்களாகிய தூசி முதலியன ஆகாயத்தின் மேற்பக்கத்திலுள்ள காற்றோட்டங்களால் தள்ளப்பட்டு ஆயிரக் கணக்கான மைல்தூரம் போய். அங்குள்ள ஊர்களின்மேல் விழுமாம். சிற்சில ஊர்களில் சில காலங்களில் உண்டாகும் ரக்தமழை மண்மாரி முதலியவற்றிற்கு இம்மாதிரியாகக் காற்றால் தள்ளப்பட்ட எரிமலைத் தூசியே காரணமாய் இருக்கலாம். ஸுமார் 35 வருஷங்களுக்கு முன்பாக ஜாவாத்தீவிலுள்ள 40 எரிமலைகளில் ஏககாலத்தில் உண்டான உற்பேதங்களால்

எழுப்பப்பட்ட தூசி, புகை முதலியவைகளால் நம் பரதகண்டத்தில் ஸூர்யன் மூன்று நாள் நீலமாக இருந்ததாம். சில எரிமலைகளில் உற்பேதத் தொடக்கத்தில் அநேக அடி உயரம் அக்னிஜ்வாலை தோன்றுவதுமுண்டு.

இவ்வாறு பூகம்பம், இடிமுழக்கம், மழை, மண்மாரி, இருள், கல் எறிதல், அக்கினிஜ்வாலை முதலியவைகளால் எரிமலைச் சுற்றுப்பிரதேசங்கள் கொஞ்சகாலம் அல்லோலகல்லோலப் பட்டபின் எரிமலை உற்பேதமாகிய அக்கினி கக்குதல் தொடங்கும். அப்பொழுது வரவர சப்தம் குறைய நிச்சப்தமாக உருகின மண்கற்கள் பூமியுள்ளிருந்து எரிமலைக்குழாய் வாய்சாரலில் உள்ளவெடிப்பு முதலியவற்றின் வழியாக வழியத் தொடங்கும். இந்த உருகிய மண்கற்களுக்கே அக்கினிக்குழம்பு என்றுபெயர். இது தொடங்கியதும் ஆரம்பக்குழப்பம் அடங்கிக் கொண்டுவரும். அப்பொழுது வெளிவரும் அக்கினிக்குழம்பு வைதரணீ நதி (யமனுலகில் உள்ள அக்கினியாறு) போல தகதகாயமானமாக மிகக்குரூரத்தோடு எரிமலையிலிருந்து ஓடிவரும். இது ஆரம்பத்தில் அதிகவேகமாக ஓடத்தொடங்கி வரவர வேகம் குறைந்து முடிவில் அசையாது நின்றுவிடும். இதுவழிந்து ஓடித் தாக்கும் இடங்கள் எல்லாம் தவிடுபொடிதான். எதுதான் இந்த ஊழித்தீமுன் எதிர் நிற்கும்? அதுபோகும் வழியில் ஊர், நீர்நிலை, மலை, கடற்கரை முதலியவற்றுள் எது அகப்பட்டாலும் அதனால் மூடப்பட்டு அது அழியவேண்டியதுதான். எரிமலையிலிருந்து சொறியும் மண்மாரியும் அக்கினிக்குழம்பும் சேர்ந்து அருகாமையிலுள்ள எல்லாவற்றையும் புதைத்துவிடும். இம்மாதிரிதான் கி. பி. 79-ல் உண்டான விஸூவியஸ் உற்பேதத்தில் அதன் அருகாமையிலிருந்த இரண்டு செழிப்பான பட்டணங்கள் மூடப்பட்டு அழிந்தன. ஆயிரவருஷங்களுக்குப் பின்பு இவ்வூர்கள் வெட்டி வெளியாக்கப்பட்டன. கோரமாய் வழிந்தோடும் அக்கினிக்குழம்பு ஏராளமாக எட்னா உற்பேதத்திலும் ஹெக்ளா உற்பேதத்திலும் காணப்படுகின்றது. இதை கண்ணுறுவோருக்கு நரகத்தையே கண்ணுற்றபயம் உண்டாகி மூர்ச்சை வந்துவிடும். இவ்வாறு வழிந்தோடும் அக்கினிக்குழம்பு சீக்கிரம் குளிர்ந்துபோவதில்லை; உள்சூடு 4 அல்லது 5-வருஷம் இருக்கும். மேற்பாகங்கள் குளிருங்கால் அங்கு பிளவுகள் உண்டாகும். அதன்மேல் நடப்பவர்கள் எளிதில் தமது காலடியில் கொதிக்கும் அக்கினிக்குழம்பை பிளவுகள் வழியாகக் காணலாம். சிற்சில அமெரிக்கா எரிமலைகளின் உற்பேதங்களில் மீன்கள் ஏராளமாக வந்து விழுவது வழக்கம். இவை மலையில் உள்ளவைகளே. இதுதான் நிலத்தில் உள்ள எரிமலைகளில் உண்டாகும் உற்பேதங்களின் இயற்கை.

பட்டணத் தருகாமையில் கடலில் மூழ்கிக் கிடக்கும் எரிமலையில் எவ்வாறு பிற்காலத்தில் உற்பேதம் உண்டாகலாம் என்ற சங்கை நமக்குவரலாம். 1866௵ ஜனவரி மாதம் க்ரேக்க தீவுக் கூட்டங்களில் உள்ள ஓர் தீவின் அருகாமையாய் மூழ்கிக்கிடந்த ஓர் எரிமலையில் உற்பேதம் உண்டானது. அநேக பீரங்கிகள் வெடித்தசப்தம் முதலில் உண்டானதாம். கொஞ்ச நாழிகைக் கெல்லாம் அவ்வெரிமலையின் வாயிலிருந்து அக்கினிஜ்வாலை உண்டாகி கடல் நீருக்கு மேல் 15 அடி வரையில் கிளம்பியது. இவ்வாறு 20 நாள் வரையில் இருக்க, கடலில் மிகுந்த குழப்பம் உண்டாயிற்று. அநேக விடங்களில் புகை வேகமாகக் கிளம்பி வெகு உயரம் சென்றது, சப்தம் உண்டாயிற்று, அக்கினிஜ்வாலை கிளம்பியது. இதில் உண்டான அக்கினிக்குழம்பால் ஒருதீவு திடீரென்று கடல் மத்தியில் உண்டாக அருகாமையிலிருந்த தீவொன்று கடலில் மூழ்கிவிட்டது. இவ்வாறு கடலில் மூழ்கிக் கிடக்கும் எரிமலை உற்பேதங்களால் புதியதீவுகள் உண்டாகலாம், இருந்ததீவு போய் விடலாம், சேர்ந்திருந்த பூமிகள் பிரிந்துவிடலாம், சேராதிருந்த பூமிகள் சேர்ந்துவிடலாம். இம்மாதிரியான மாறுபாட்டைக் கடலிலுள்ள எரிமலைகள் உண்டாக்குகின்றன.

அடுத்த சஞ்சிகையில் எரிமலைகள் உண்டாவதற்குக் காரணம் என்ன என்ற விஷயத்தைப் பற்றி விசாரிப்போம்.

தேக ஆரோக்கியம்

HEALTH

"நோயற்ற வாழ்வே வாழ்வு"

யௌவன திசையில் பல மடச்செயல்களைப் புரிந்து முதுமையில் அவற்றைப்பற்றி நினையுந்தோறும் வீண்வருத்தமும் அருவருப்புங் கொள்வது மானிட இயற்கையா யிருக்கிறது. இத்தகைய மடமைகளில் சரீரசௌக்கியத்தை அலக்ஷியஞ்செய்வது ஒன்றாகும். இத் தவறைக்குறித்து யாரேனும் எச்சரிக்கை செய்தாலும் அது பயன்படாமற் போகிறது. நம் தேகக்கருவிகளின் மூலாதாரங்கள் வலுவுடன் இயங்கும்பொழுதும், இந்திரியங்களைத் தம் இரத்த ஓட்டத்தால் போஷிக்கப்பட்டு வரும்பொழுதும், செல்லும் ஒவ்வொரு நாழிகையும் நம் தேகபலத்தைக் குறைக்கிறதென்பதை நாம் அறிந்து நடப்பது கடினம்; இப்பொழுது இவ்வளவு உறுதியுடன் இறுகியிருக்கும் நாடி நரம்புகளும், இவ்வளவு விரைவுடன் எளிதில் இயங்கும் அவயவங்களும், காலத்தின் கொடிய கைப்பிடிப்பால், தம் வலுக்குன்றி சோர்வடைந்து தடுமாறுமென்பதை நாம் நம்புவதும் துர்லபம்.

உலக வாழ்க்கையின் துன்பங்களைப்பற்றி முறையிடுதல் வீண் என்பதைச் சாதிக்கவேண்டி தத்துவ சாஸ்திரிகள் பல காரணங்களை எடுத்துக் காட்டியிருக்கின்றனர். அதுவிஷயமாய், முறையிடுவோன் வெளியிடும் துன்பங்களைக் கேட்கின்றவர்கள் அவற்றை முற்றும் நம்புவதில்லையென்ற காரணத்தையும் சேர்த்துக்கூற தத்துவஞானிகள் மறந்தனர் போலும். கண்ணீர் சொரிந்து முறையிடுவோரின் நோக்கமென்னவோ யாமறியேம். பிறர் பார்த்து பரிதபிக்கவேண்டும் என்பதானால், விருத்தரும் பலஹீனர்களும் தங்கள் குறைகளைக் கூறிக்கொள்வது பயனற்றது; ஏனெனின், பரிதாபம் உதிக்கப் பரோசிந்தை அவசியம். ஒரு நோயை அனுபவியாதவர் அந்நோய் தம்மை எவ்வாறு வருத்தும் என்று பாவனை செய்து கொள்வது அசாத்தியம். இவ்விஷயம் யாரும் எளிதில் அறியக்கூடியதே. ஒவ்வொரு மனிதனும் சிறிது ஞாபக சக்தியினால், தான் இளவயதில் விருத்தர்களைக் கண்டு ஏசியதையும், அவர் கூறிய நன்மொழிகளை இகழ்ந்ததையும், அவர் பூண்ட கோபத்தைத் தவறென்று எண்ணியதையும் நினைத்தல் கூடும். ஆனால், அந்தோ, தான் பிறருக்குச் செய்த அவமதிப்பைத் தன் விருத்தாப்பியத்தில் தானே அனுபவிக்க வேண்டிவருகிறதை அவன் அறிகிறான்.

லோபி, திரவியம் சேர்ப்பதைத் தன் இச்சைகளில் ஒன்றாயன்றி தன் வாழ்க்கையின், ஒரே நோக்கமாகக் கருதிவருவதால் எப்படி 'செட்டு' என்னும் நற்குணமும் இகழ்ச்சிக்கு இடமாகிறதோ, அப்படியே நோயாளி தேக ஆரோக்கியமே மற்றெதையும் விட விசேஷமானதென்று எண்ணிவருவதால், சரீர சௌக்கியத்தின்மேல் சிந்தை செலுத்துவதும் நகைப்புக் கிடமாகிறது. இவ்விருதிறத்தாரும் ஒரேவாறாய் மூலத்தை முடிவென்றெண்ணி மதிமயங்குகின்றனர். லோபிகள் செல்வராக மாத்திரம் வேண்டி பணஞ் சேர்ப்பதுபோல் இவர்கள் நோயற்று மாத்திரம் வாழவேண்டி தேகசௌக்கியத்தை நாடுகின்றனர். இவ்வாறு நடந்துவருவதில், அவர்கள், இவ்வுலகத்தில் நாம் அடையக்கூடிய சம்பத்தின் பிரயோஜனமெல்லாம் அதை நல்வழியில் பிரயோகிக்கும் சக்தியை நாம் அடைவதே என்பதை மறந்து விடுகின்றனர்.

வாழ்க்கையின் சுகானுபவத்துக்கு மாத்திரமேயன்றி நம் கடமைகளுக்கும் தேக ஆரோக்கியம் அத்தியாவசியமானது. ஆதலால் தேகத்தைப் பற்றி அஜாக்கிரதையா யிருப்பது மடமை மாத்திரமன்றி பெருங் குற்றமுமாகிறது. சிறிது இன்பத்தை அபேக்ஷித்து பலஹீனத்தையும் வியாதியையும் சம்பாதித்துக்கொண்டும், விளையாட்டின் வெம்மையிலும் களிப்பின் கோலாகலத்திலும் சில வருஷங்கள் அனுபவிக்க விரும்பி முதிர்ந்த அறிவின் காலமாகிய தன் நிரம்பிய வயதெல்லாம் தன் வீட்டறையிலும் படுக்கையிலும் செலுத்திவரும் மனிதன் தனக்குரிய சுகத்தை கெடுத்துக்கொண்டதுமன்றி பொதுஜன சமூகத்தையும் கொள்ளை கொண்டவனாகிறான். ஏனெனில் அவன் தன் பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுதற்கு வேண்டிய தேகபலத்தைத் தானாகவே போக்கடித்துக் கொண்டு, பொதுஜன சமூகத்துக்குரிய உழைப்பின் தன் பங்காகிய கடமையையும் செய்யத் தவறுகிறான்.

விசேஷ சக்தி அமைந்து இடைவிடாது இயங்கும் மனம், நோயால் பீடிக்கப்பட்ட சரீரத்தில் கட்டுப்பட்டுத் தத்தளிப்பதைவிட பரிதாபமான காக்ஷி வேறில்லை. அத்தகைய மானிடரின் வாழ்நா

ளனைத்தும் வீண் ஆலோசனையிலேயே கழிந்துவிடுகின்றன; அவர் வல்லமை எல்லாம் பயனற்ற ஏற்பாடுகள் செய்வதிலும் வீண் நம்பிக்கைகளிலும் அழிந்துபோகிறது; தாம் நினைத்ததைச் செய்து முடிக்கும் சமயம் அவர்களுக்கு நேர்வதேயில்லை. அவர் நாள்தோறும், மறுநாள் செய்யக்கருதியதை நினைந்து களித்து உறங்குகின்றனர்; தாம் இனி யடையப்போகும் கீர்த்தியையும் புகழையும்பற்றி மனோராஜ்ஜியஞ் செய்து தம் ஆவலைத் திருப்திப்படுத்திக்கொள்ளுகிறார்கள்; தாம் பிறருக்குச் செய்யப்போகும் நன்மைகளைக் குறித்து நினைந்து தம் மனதைத் தேற்றிக்கொள்ளுகின்றனர். ஆனால் மறுநாள் பொழுதுவிடிந்தாலோ, உடம்பு பளுவாயிருக்கிறது, மனம் அமைதியின்றி பலவிஷயங்களின்மேல் பாவுகின்றது; தம் அசௌக்கியத்தைவிட்டு வேறு எதன்மேலும் கவனம் செல்வதில்லை.

காலன் எவ்வாறு உயர்வு தாழ்வு வேற்றுமை பாராது எல்லாரையும் கவருகின்றானோ, அவ்வாறே நோயும் எல்லாரையும் சமமாகப் பீடிக்கிறது. நோய் பற்றிய மாத்திரத்தில், உற்சாகத்துடன் பேசும் வழக்கமுடைய மனிதரும் உல்லாசமற்றிருக்கிறார்கள்; கல்வியிற் சிறந்த மகா பண்டிதரும் தம் போதனா சக்தியை யிழந்துவிடுகின்றனர்; தைரியமும் கீர்த்தியும் மறைந்துபோகின்றன; தத்துவம் பேசும் ஞானியும் பேசத்தத்தளிக்கிறான்; மானிடர் அனைவரும் தம் பேதமையையும் எளிமையையும் வெளியிட்டு வருந்தி ஏங்குகின்றனர்.

தேகம் ஆரோக்கியமாயிருந்தாலன்றி மற்றெந்த சௌக்கியமும் அடைந்து சுகப்பட முடியாது; வாழ்க்கையின் சாரமே வற்றிப்போம். எப்படி சூரிய வெப்பமின்றேல், புற் பூண்டுகள், செடி மரங்கள் வளராவோ, அப்படியே தேக சௌக்கியமில்லாவிடின் மற்றெந்த சுகானுபவமும் உண்டாவதில்லை. இவ்வளவு உபயோகமானதும் அவசியமானதும், தவறின்றிப் பெற்ற நல்வரன் போன்றதுமான தேக ஆரோக்கியத்தை ஜனங்கள் பெரும்பாலும் புத்திகெட்டோ, அசட்டையினாலோ, அல்லது தம் தேகதிடத்தைப் பரிசோதனை செய்யவேண்டுமென்ற மடத்தனமான இச்சையினாலோ, இழந்துவிடுகின்றனர். அதன் மகிமையை யறியாமலும், அறிந்தால் அதைப் பிறருக்கு வெளிப்படுத்தத் தூண்டும் தம் ஆவலினாலும், ஜனங்கள் தேக ஆரோக்கியத்தை அழித்துக் கொள்ளுகின்றனர். சில வேளை துர்நடத்தையும் தற்செயலும் ஆரோக்கியத்தை ஆண்டு வருகின்றன; சிலவேளை கொண்டாட்டத்துக்கும் விபசாரத்துக்கும் சரீர சௌக்கியம் விலைக்கு விற்கப்படுகிறது.

இன்பநுகர்ச்சியினால் மதிமயக்கியே மானிடர் தம் தேகபலத்தை யிழக்கின்றனரென்று சொல்வதற்கிடமில்லை. உலகத்தின் பற்பல வியாபாரங்களில் பாடுபடுவோரும் பற்பல கலைகளைக் கற்போரும், தங்கள் உழைப்புக்கும் ஜீவனத்துக்கும் ஆதாரமாகிய யாக்கையை அலக்ஷியஞ் செய்கிறார்கள். சிலர் இடைவிடாத சிற்றின்ப நுகர்ச்சியால் திடமிழந்தால், மற்றுஞ் சிலர் மிதமீறிக் கல்வி கற்பதனால் வலிகுன்றி ஆரோக்கியத்தை அழித்துக்கொள்ளுகின்றனர். சிலர் தம் சரீரத்தை அதிகப் பிரயாஸத்துக்கு உட்படுத்தி அதைக் கெடுக்கின், மற்றஞ் சிலர் தேகப்பயிர்ச்சியின்மையால் அதைக் கெடுக்கின்றனர்.

சரீர சௌக்கியத்தை யிழந்தால் சுகவாழ்க்கையின் சுவையே கைத்துவிடும் என்பதை நிரூபிக்க விசேஷ சக்தி வேண்டியதில்லை யெனினும், மதுபானிகளாகிய மாக்களுக்கு மதி கூறுதல் பயனற்றதாகும். அவர்கள் செய்யும் விகார சந்தடியில் நாம் அவர்களுக்கு ஓதும் உபதேசம் ஏறமோ? அவர்கள் மதுபான வாழ்க்கையைத் தடுக்க ஞானோபதேசமும் சக்தியற்றது.

மேலும், ஆயிரத்தோடு ஆயிரம் சேர்க்க விரும்பி, ஓய்வின்றி உழைக்கும் மனிதரும் தாங்கள் கருதியதை யடைய நிதானமுடன் செல்லும்படி நாம் வழி காட்டினும், நமது வார்த்தையை லக்ஷியஞ் செய்யமாட்டார்கள். ஆயினும், பணத்தின்மேல் ஆசைவைப்பவர் சாதாரணமாய் தீர்க்காலோசனையும் நிதானமு முடையவர்களாதலால், அவர்களாவது பெரிய நன்மையை நாடி சிறிய நலனைக் கைவிடக்கூடாதாவென்று நினைக்கலாம். செல்வத்தைவிட தேக ஆரோக்கியம் ஆக்ஷேபணையின்றி சிலாக்கியமானதே. ஏனெனின், தேகதிடத்தால் தான் பணம் சேகரிக்கக்கூடும். அன்றியும், ஆயிரக் கணக்காய் பணத்தை வாரியிறைத்தாலும்; வாயுப்பிடித்தத்தின் நீடித்த கொடும் வலியைத் தணிக்கவும், கெட்டுப்போன ஐம்புலக்கருவிகளை ஒழுங்குபடுத்தவும், அவிந்துபோன ஜீரண சக்தியை உயிர்பெறச்செய்யவும் சாத்தியமாகா. தரித்திரம் என்னும் கொடும்புலியின் வாயினின்றும் தப்பிப் பிழைக்க நாம் எத்தனிப்பது நியாயந்தான்; ஆனால் ஒரு எதிராளிக்கு அஞ்சி ஓடுவதில், மற்றொரு பகைவன்

கையில் அகப்பட்டுக் கொள்ளாமலும், நோய் என்னும் கொடியவனைச் சரணமடையாமலும் காத்துக் கொள்ளவேண்டியதும் அவசியமே.

சிலர் கலைகள் கற்பதில் பேராவல்பூண்டு காலக்கிரமமின்றி இரவும் பகலும் உழைத்து வருகின்றனர். இவர்கள் இவ்வாறு செய்தல் பெருந்தவறேயாகும். சரீரசக்திக்கு மீறி வேலைசெய்தால் அதனாலுண்டாகும் பலனைவிட நஷ்டம் அதிகம். இளைப்புக்கும் களைப்புக்கும் சேரவேண்டிய காலத்தை எவனொருவன் தன் உபயோகத்துக்கு வாங்கிக்கொள்ளுகிறானோ அவன் அவ்வளவு காலத்தை மாத்திரமன்றி, கடும் வட்டியுடன் சேர்த்துத் திருப்பிக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப் படுவான். ஏதோ ஒருவாறு அனுபவித்த சில மாதங்களுக்கு பதிலாக பல வருஷங்கள் பலஹீனத்துடனும் வருந்தவேண்டி வரும். அப்படி மனப்பயிற்சியை நாடி உழைப்பவர், அப்பயிற்சி யாக்கையைப் பீடிக்கும் நோயால் குந்தகப்படுவதுமன்றி அபாய மடைகிறதென்றும், பல ஹீனத்தாலும் நோயாலும் உண்டாகும் துக்கம், கோபம் முதலியவைகளால் அறிவே அழிந்து விடுகிறதென்றும் நாளடைவில் அறியினும், அவ்வறிவினால் அவர்கள் பிரயோஜனம் அடையக்கூடாமல் போய்விடுகிறது.

C. சுந்தரமய்யர், B. A.

நவம்பர் எரி நக்ஷத்திரமழை.—இந்தமாதத்தில் இரண்டு நக்ஷத்திரமழை உண்டு. அவை முறையே 13-ம் தேதியிலும், 27, 28 தேதிகளிலும் வருவன. முன்பின்னாக இரண்டொரு நாளுக்குள்ளாகவும் வரலாம். நவம்பர் 13-தேதியில் வரும் மழை ஸிம்மராசியிலிருந்து வருவது போலக் காணப்படும். இந்த மழையில் வரும் நக்ஷத்திரங்கள் எல்லாம் கிழக்கே இருந்து மேற்கு நோக்கி ஓடுவதால் அதிகப் பிரகாச முள்ளன வாகவும் வேகமாக ஓடுவன வாகவும் காணப்படும். இதற்குக் காரணம் பூமி மேற்குப் பக்கத்திலிருந்து கிழக்கு நோக்கிச் சுற்றுவதே. இந்த மாதம் ஞாயிற்றுக்கிழமை 15-ம் தேதி ஒரு மிகுந்த பிரகாசமான எரி நக்ஷத்திரம் இரவு ஒன்பதரை மணிக்குக் காணப்பட்டதாம். அது மின்போல உள்ளே விளக்கண்டை இருந்தவர்களுக்கு ஒரு பிரகாசமான மின்னலாகத் தோற்றி இருக்கலாம். நான் ஒரு அவுட் என்று எண்ணி அதன் சப்தத்தை எதிர்பார்த்திருந்து சப்தம் வெகு நாழிகை வரை, வந்து எட்டாததால் அதை கவனியாது இருந்து விட்டேன். அந்த ஸமயத்தில் ஒரு பெரிய நக்ஷத்திர மழை உண்டாய இருக்கலாம். அது இந்தமாதிரி ஒரு பிரகாசமான எரி நக்ஷத்திரமாகத் தோன்றியது. 13-ம் தேதி நக்ஷத்திரமழை 33 வருஷத்திற்கு ஒரு தரம் ஸிம்மராசியிலிருந்துகிளம்பும். இயற்கை அற்புதங்கள் என்ற பாகத்தில் பின்னர் இந்நக்ஷத்திர மழையின் ஸ்வரூபம் காரணங்கள் இவைகளைப்பற்றி நன்கு விவரிப்போம்.

பொறுமை

PATIENCE

அறிவினும் பொறுமையே சிறந்தது. பிடியளவு பொறுமை கூடையளவு மூளையினுங் கனமுள்ளது. பொறுமையை வாழ்த்தாதார் யார்யாருமில்லை; ஆனால் அதிற் பழகிப் பயில்பவரோ சிற்சிலரே. அது எந்நோயையுந் தீர்த்தற்குக் கைகண்ட ஔஷதமாதலின் அதைக் கைக்கொள்ள உலக அனுபவமுள்ளவர் யாரும் உபதேசிப்பார்கள். ஆயின் அவ்வவுஷத முறைக்கு வேண்டிய மூலிகைகள் வளரும் புலங்கள் தாம் அரியன. காலுந்தலையும் வலித்து உடம்பெல்லாம் குத்தும் நோவும் வருத்தும்பொழுது முக்கி முணுகுதல் சகஜந்தான். ஈக்கள் மொய்த்துக் கடிக்கும் பொழுது தலையை யசைக்காத குதிரையுண்டோ? ஓட்டைச் சக்கரம் ஓசை செய்யாமல் ஓடும் வண்டிதானுமுண்டோ? பொறுமையென்னும் பதத்துக்கும் பொருளுக்கும் புவிக்கெல்லாம் பொய்யா விளக்காய்ப் பொலியும் இப்பாதகண்டத்துள்ளோரும் ஏனையோரைப்போலவே பொறுமையைப் போற்றாராயின் பெரியோருக்கும் சிறியோருக்குமுள்ள ஏற்றத்தாழ்வு என்ன? இந்துமதத்தின் ஏற்றம்தான் எங்கே? இடையனைப்போலவே படைவீரனும் சண்டைக்குப் பின்னிட்டால் அவனைப் பட்டாளத்திலிருந்து பறக்கடித்தலே பயனுடைத்தாம். காட்டுக்களாமரத்திலும் தோட்டமாமரத்தில் கனிகள் கணிசமாய் காய்க்கவேண்டுமென்று எண்ண இடமுண்டு. படுபோர்க்களத்தில்,

“கௌந்தேய! இந்திரியஸ்பர்சங்களே குளிர்
“வெப்பத்தையும் இன்பதுன்பங்களையும் கொடுத்
“துத் தோன்றிமறையுந் தன்மையனவாய் அநித்தி
“யமா யிருக்கின்றன; ஆகையால் பாரத! அவற்
“றைப் பொறுக்கக்கடவாய்”

என்று பகவத்கீதையில் போதித்தருளிய பகவான் பாதகமலங்களைப்பற்றி யொழுகும் பாக்கியம் பெற்றோர் பொறுமை சாதித்தல் பொருந்திய கடமை. ‘பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக் கொண்டிரு’ என்பது பெண்டிர்சொல்லும் பழமொழி ஆயினும் ‘சிரித்துப் பொறுத்துக்கொள்’ என்பது அதனினும் ஏற்றமுடைத்து. உற்றுநோக்கில் உலகத்தில் நாம் செய்யும் துஷ்கிருத்தியங்களுக்குத் தக்குந்தபடி கஷ்டங்கள் விளைகின்றன என்பதற்கும்

இல்லை. தோளின்மேல் தொண்ணூறு அடி விழுந்தாலும் துடைத்துவிட்டால் ஒன்றுமில்லை என்று திரிகிறோம். ஆனாலும் துன்பத்துக்குப் பின்விளைவது இன்பமே. மேலும் "பட்டால்தான் தெரியும் பார்ப்பானுக்கு." திரவியந்தேடிக் கொணர்தல் திண்ணமாயின் திரைகடலோடத் தயங்குதல் தகாது.

பொங்குங்குணமுள்ளபூரியர் துன்பங்களுக்கே அன்புடன் நீர்பாய்ச்சி வளர்த்துப் பயிர் செய்து இன்பங்களைக் களைகளாகக் கழிப்பர். விசனங்களை வருந்தி யழையாமலே வாசல்தேடிவரும் வம்பர்கள். அப்படியிருக்க எப்பொழுதும் குறைகூறுங் குணத்தைக்கொள்ளல் அவ்விசனங்களையேற்றி எதிர்கொண்டு வீட்டுக்கு அழைத்துவர வண்டிகளையனுப்புதலாம். மக்களிற் பலர் அழுதுகொண்டே பிறந்து, குறைகூறிக்கொண்டே வாழ்ந்து, மனம் முறிந்து சாகிறார்கள். அவர்கள் கசப்புமாத்திரையைக் கடித்துத்தின்பவர்கள். கடிக்காமல் பொறுமையென்னும் ஜலத்தில் ஒருகிண்ணம் வாயில்விட்டுக்கொண்டு மாத்திரையை முழுதாய் விழுங்கும் புத்தி மாத்திரம் இருக்குமேல் தாங்கள் சாப்பிட்டது கசப்பு மாத்திரையென்றுகூட அவர்களுக்குத் தெரியக் காரணம் இராது. அவர்கள் கண்களுக்குப் பிறர் சுமக்கும் பளுவெல்லாம் இலகுவென்றும் தங்கள் தோளிலேறிய மயில் தோகைக்கட்டே பாரமுள்ளதென்றும் புலப்படும். தங்களுக்குமட்டுமே கஷ்டம் உண்டாகிறதென்பது அவர்கள் தேற்றம்.

அவர்களைக் கேட்டால் தங்கள் வீட்டண்டைதான் வெயிலின் வெப்பம் அதிகம் என்பார்கள். அடிக்கும் வாடைக்காற்றெல்லாம் தங்கள் வாசல் திண்ணையிலேயே என்பார்கள். ஆனால், உண்மையுரைக்கும் அளவில், அவர்களுக்கு இடுக்கண்கள் விளைவிப்பன அவர்கள் வாழ்வினையல்ல, மனப்பேயே. தாங்கள் சுகம் அனுபவிப்பதாய் எண்ணம்மாத்திரம் கொள்ளட்டும்: அநேகருக்கு ஆத்மானுபவமும் அப்படியே அமையும்.

•

"இன்னா இயைக இனிய ஒழிகென்று

"தன்னையே தான்நிரப்பத் தீர்வதற்கு —என்னை கொல்" என்ற முதுமொழிப்படி திருப்தியென்னுந் தெண்ணீரைக் கலந்துகுடிக்கும் கஞ்சி அமரர்நாட்டு அமிழ்தினும் இனிதானதே.

வறுமையெப்பொழுதும் இன்புடைத்தன்று; ஆயினும் அதனினும் கொடியனவும் உண்டு. சிறுபாதுகைகள் காலைக் கடிக்கச்செய்தல் இயல்பே; ஆனால் சிறுபாதங்களில் தரித்தால் கடித்தல் இல்லை. வருவாய் சிறுகினால் ஆசையும் சிறுத்தல் நலம். வறுமையில் இளிவரவில்லை; அதுகண்டு மனம்புழுங்கல் இளிவரவே. சில விஷயங்களில் பணக்காரனினும் ஏழையேமேல். ஏழை வயிற்றுக்குச்சோறு தேடித்திரிந்தால் சோறுகிடைப்பது திண்ணம். ஆனால்சோற்றுக்குப் பசிதேடித்திரியும் பணக்காரனுக்குப் பசி வாய்த்தல் இல்லையாம். ஏழைக்கு வேண்டிய உப்பும், புளியும், அரிசியும், பருப்பும் எளிதிற் கிடைக்கும். வெண்ணெயும் சர்க்கரையும்வெல்லமும் செய்யும் தேடிச்செல்லவேண்டிய அலுவல் அவன்மட்டில் வேண்டாதாயிற்று. வயிறு நிறைந்தவனுக்கு வெல்லமும் கசக்கும். பசித்தவனுக்கோ புளிங்காடியும் இன்னடிசிலாம். கடும்பாடு படுபவனுக்கே கட்டமைந்த பலமும் ஆரோக்கியமும் உண்டாகும். கோடிவைடூரியக் குவியல்களினும் ஆரோக்கியமே ஆசைப்படத்தக்கது. நம்மைச் சுகப்படுத்துவது நம்மிடம் இருக்கும் பொருட் குவையல்ல; பொருளை யனுபவிக்கும் பண்பே. பானை நிறைந்த புளிங்காடியினும் சிறு சர்க்கரைக் கட்டியே சுவையுடைத்து. பண்டங்கள் பெருத்திருப்பதனாலேயே பணக்காரராகக்கொள்வதற்கில்லை; அப்பண்டங்கள் பகவான்கொடுத்த பாக்கியம் என்று கொண்டால்தான் பாக்கியசாலி என்பது உண்மை. முழுப்பூசணிக்காயினும் பலாவின் ஒரு சிறு சுளையே மேம்பட்டது. அக்காரம் பாலோடு அடியும் பிடியுமாய் அருந்துதலினும் அன்போடு அளாவிய கூழும் அவாவறுத்தலோடு கலந்த அடகுமே ஆக்கம் அளிப்பவாம். குடிக்கக் கஞ்சிகாய்ச்சச் சிறு சுள்ளிகள் போதுமாயிருக்க காட்டிலுள்ள கட்டையெல்லாம் கொள்ள வில்லையேஎன்று ஏக்கமுறுதல் ஏழைமை.

•

துன்பங்கள் அடுத்துவருங்காலத்தில் கடவுளைக் கண்டபடிக்கெல்லாம் நோதலில் உறுபயன் ஒன்றும் இல்லை. அப்படி நோதல் வசியின்மேல் காலையுதறி யுதைத்துப் புண்ணாக்கிக்கொள்வதை யொக்கும். கடுங்காற்றுக்கு மரங்கள் வளைந்து நிமிர்தல்போல நாமும் துன்பங்களுக்குப் பொறுத்து நிமிர்தல் வேண்டும். ஆடு தான் கதறும் ஒவ்வொருவேளையும் ஒருவாய் உணவை யிழத்தல்போல நாமும் குறைகூறும் ஒவ்வொருவேளையும் கடவுளின் அனுக்கிரகத்தை இழந்தவர்கள் ஆகிறோம். குறைகூறல் என்றைக்கும் நல் வியாபாரமன்று; அதில் லாபம் ஏதும் இல்லை. பொறுத்தலோ பொன்னும் பூஷணமும் பொலிவது. பொறுத்தவரே பூமியாள்வார். மழையும் மந்தாரமும் கழிந்த மேல் பகலவன் ஒளி பளிச்சென்று பரக்கின்றது. நமக்கு வேண்டா விருந்தான கருங்காங்கைக்கும் பறந்து ஓடிப்போகச்

சிறகுகள் உண்டு; பனிக்காலமேகப் பலம்பூவிரைக்கும் வசந்தகாலம் விரைவில் வரும். காரிருளுக்குப் பின்சூரியோதயமே வரும். ஒரு துறை மூடப்பட்டிருந்தாலும் வயிறுவளர்க்க வேறுவழி கடவுள் காட்டுவார். நன்செய் விளையாவிட்டால் புன்செய்விளையும். ஒவ்வொரு பொருளுக்கும் ஒருபக்கம் பளபளப்புண்டு. கடவுளோ எங்கும் நிறைந்திருக்கிறார். எவ்வளவு கஷ்டகாலத்திலும் எங்கேபாவது ஒரு மூலையில் ஓடி ஒதுங்க ஏற்ற இடம் இருக்குமேயொழிய இல்லாமற்போகாது. அப்படியில்லாவிட்டாலும் கஷ்டங்களைக் கடந்துசெல்லக் கடவுள் ஆற்றல் அளிப்பர். ஆகையால் பொறுமையைக் கைக்கொண்டு கஞ்சி குடித்துக் காலத்தை இனிது செலுத்துவோமாக. துஷ்டர்களோடும் பேராசைக்காரரோடும் சேர்ந்து வீணுக்குக் கடவுளை நொந்து பாவத்தை ஈட்டுதலினும் இது எத்தனையோ மேலானது. பொறுக்கமுடியாத் துன்பத்திற்கு மருந்து பரம்பொருளின் ஆணைக்குப் படிந்திருப்பதே. தடுக்கமுடியாத பாரத்தை எடுத்துத்தான் தொலைக்கவேண்டும். பாலும், தெளிர்த்தேனும் பாகும், பருப்பும் கிடைக்கவில்லையேனும் பழங்கஞ்சியாவது கிடைத்தற்குப் பரம்பொருளை மனதார வாழ்த்தல் வேண்டும். "அப்படித்தானிருந்துதீரவேண்டும்" என்பது கடித்தற்குக் கடினமான கொட்டையேனும் உள்ளிருக்கும் பருப்பு உண்மையில் இனிப்புள்ளதே. கடவுளைக் கடைப்பிடித்துள்ளோர்க்கு வரும் கஷ்டங்கள்கூடப் பின்னுக்குச் சுகத்தை விளைவிப்பதற்கே. விசும்பினின்று வீழும் எதுவும் என்றைக்கேனும் நிலத்துக்கு நன்மை விளைவிப்பதே. அதுபோலவே கடவுள் விதிக்கும் எதுவும் நமக்கு நன்மைபயத்தற்சே.

சுபாவத்தில் நாம் எவரும் கஷ்டத்தை விரும்புதல் இல்லை. புலிக்கும் பசுவுக்கும் தோழமை உண்டாகுமேல் மனிதனுக்கும் துன்பங்களில் விருப்பமுண்டாகலாம். ஆனால் துன்பங்களையேற்று வனம்புகுந்த பாண்டவரும், இராமசந்திரனும், துன்பங்களின் ஏற்றத்தைச் செவ்விதில் விளக்கியுள்ளார்கள்.

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
"யிகழ்வார்ப் பொறுத்த றலை"

என்றும்

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்
"பொன்றுந் துணையும் புகழ்" [குப்

என்றும்

வாய்மைகூறினர் பொய்யா மொழியார்.

ஐ. வே. சுப்பிரமண்யம்.

மக்பெத் கதை

STORY OF MACBETH

இங்கிலாந்துதேசத்திற்கு வடக்கிலுள்ள ஸ்காட்லண்ட்தேசத்தில் ஸுமார் 1000 வருஷங்களுக்கு முன் டங்கன் என்ற அரசன் அரசாண்டுவந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களுள், மூத்தவனுக்கு மால்கம் என்று பெயர். அவ்வரசன் மிகுந்த மிருதுவான சித்தம் உடையவனாதலின் பிரஜைகளுக்கு அவனால் மிகுந்த ஸுகம் உண்டானது. அதனால் அவனுக்கு ஸாத்மீகி என்ற பெயர் ஏற்பட்டது. அவனுக்கு மக்பெத், பாங்கோ என்ற இரண்டு தளகர்த்தர்கள் உண்டு; அவர்களுள் மக்பெத் அவனுக்குக் கிட்டின பந்து, மிகுந்த வல்லமையுடையவன். அவனுக்கு கிளாமிஸ் பிரபு என்ற பட்டப்பெயர் உண்டு. அவனுக்கு மேலானநிலையில் காடார் பிரபு ஒருவனிருந்தான்.

டங்கன் நெறிவழுவாது அரசாண்டுவருகையில் அருகாமையில் உள்ள நார்வேதேசத் தரசன் ஸ்காட்லண்ட்மேல் படையெடுத்துவர, அவனோடு காடார் பிரபு சேர்ந்துகொண்டான். அப்பொழுது அரசன் உத்தரவின்படி மக்பெத்தும் பாங்கோவும் நால்வகை ஸேனைகளோடு சென்று யுத்தந்தொடங்கி, அன்றுமாலைக்குள் நார்வே அரசனை தோற்று ஓடும்படி செய்து, காடார் பிரபுவையும் கொன்றுவிட்டார்கள். மக்பெத்துக்கும் அரசனுக்கும் காடார் பிரபுவின் நம்பிக்கைமோசம் தெரியாது. ஆனால் யுத்தத்திலிருந்து அடிபட்டு ஓடிய ஒரு ரணவீரன் டங்கனிடம் யுத்தகளத்தில் நடந்தவிசேஷங்களையும், காடார் பிரபுவின் நம்பிக்கைத் துரோகத்தையும், மக்பெத்தின் போர்ச்சிறப்பையும் எடுத்துச்சொல்ல, மேலான காடார்பிரபு என்ற பெயரை மக்பெத்திற்கு இட்டு அழைக்கும்படி இரண்டொரு பிரபுக்களை அவன் உடனே யுத்தகளம்நோக்கிப் போகும்படி அனுப்பிவிட்டான்.

இதற்குள் மக்பெத்தும் பாங்கோவும் யுத்தகளம்விட்டு ஸாயக்காலவேளையில் ஊர்நோக்கித் திரும்பிவிட்டார்கள். வரும்வழியில் ஒரு சம்பம்புல் வெளியில் மூன்று கருத்த கோரரூபங்கள் அவர்கள் கண்ணில் பட்டன. அவைகள் பெண்ணுருப்போலவும், தாடி உடையனவாயும், கிழவிகள் போலவும் காணப்பட்டன. இவைகளின் ரூபவைசித்திரியத்தைக்

கண்டதும் பாங்கோவிற்கு ஆச்சரியமுண்டாக அவைகளை நீங்கள்யார் என அவன் நிர்ப்பயமாக வினவ, பேசாதே என்று பொருள்படும்படி அவைகள் குச்சி போன்ற தமது விரல்களை தம் வாயின்மேல் வைத்தன. அப்பொழுது மக்பெத் அவைகளைப் பேசும்படி கேட்க அம்மாயினிகளுள் ஒன்று 'கிளாமிஸ்பிரபுவே வாழ்க !' என்றும், இரண்டாவது 'காடார்பிரபுவே வாழ்க !' என்றும் மூன்றாவது 'நீ அரசனாகி வாழ்வையே !' என்றும் மக்பெத்தைநோக்கி ஆசீர்வதித்தன. அப்பொழுது பாங்கோ விளையாட்டாக, 'என் தோழனுக்கு மாத்திரம்தானா இவ்வளவு வாழ்வும்? எனக்கொன்றுமில்லையா? உங்களுக்கு ஜோஸ்யம் தெரியுமாகில், உங்கள் வார்த்தையின் குணாகுணங்களை மதியாத எனக்கு என்னவரப்போகிறது சொல்லுங்கள் பார்ப்போம்?' என்றான். அப்பொழுது ஒருமாயினி 'மக்பெத்தைவிடக் குறைவுதான், ஆனாலும் உனக்கு மேன்மையுண்டு என்றும்' இரண்டாவது, 'நீ அவ்வளவு ஸுகியாகமாட்டாய் ஆயினும் உனக்கு நிரம்ப ஸுகம் உண்டு,' என்றும் மூன்றாவது, 'நீ, அரசனாகாவிட்டாலும் நீ அரசர்களைப்பெறுவாய்,' என்றும் விடுகதையைப்போலக் குறிச்சொல்லிவிட்டன. அப்பொழுது தான் கிளாமிஸ் பிரபுவென்று அக்கிழங்கள் எவ்வாறறிந்தன என்ற ஆச்சர்யம் ஒருபக்கம், காடார் நல்ல பிரபுவாக இருக்க தனக்கு அந்தப்பெயர் எவ்வாறு வருமென்ற ஸந்தேகம் ஒருபக்கம், அரசன் நிலை தனக்கு ஒருக்காலும் வாராது என்ற நிச்சயம் ஒருபக்கம், கிடந்து வருத்தத்தை உண்டாக்க இவைகளின் உண்மையை மேலுங் கேட்டறிய மக்பெத்திற்கு ஆசை உண்டாயிற்று. அதற்குள் மாயினிகள் மறைந்தன. பாங்கோ 'நீர்க் குமிழிபோல இவைகள் மறைந்துவிட்டன' என்று ஸாதாரணமாகப் பேச, மக்பெத் ஆழ்ந்த யோசனையோடு 'உனக்கென்னப்பா! உன் பிள்ளைகள் அரசர்களாவார்கள்' என்று மனம்பதைத்துச் சொன்னான். அதற்கு பாங்கோ 'நீயே அரசனாகப்போகிறாய் அப்பா!' என்று பரிஹாஸஞ்செய்து வாய்மூடும் முன் டங்கன் அனுப்பியிருந்த பிரபுக்கள் வந்து மக்பெத்திற்கு காடார்பிரபு என்ற பட்டத்தைக் கொடுத்து அதன் வரலாற்றை எடுத்துரைத்தார்கள். ஸுகத்திலிருப்பவர் மனம்பித்து, அதிலும் மக்பெத்துக்கு வரவேண்டிய சிறப்பு இன்னும் மேலானதாக இருக்கிறது. உடனே 'அரசனாவோம்' என்ற எண்ணம்வர, பாங்கோவைநோக்கி 'உன் பிள்ளைகள் அரசர்களாவார்கள் என்பதற்கு என்ன ஸந்தேகம்'? என்றான். தன் நண்பன் மாயினிகளின் ஜோஸ்யத்தின் வாய்ப்பட்டு வீணே கொடிய தொழிலில் இறங்கிவிடுவான் என்று பயந்து 'மாயினிகள் வாக்கை நம்பி ஒன்றுஞ் செய்துவிடாதே. அவைகள் உன்னை எளிதில் மீளாநரகிற்கு ஆளாக்கும்' என்று எச்சரிக்கைசெய்தான். இதைக்கேட்டும் மக்பெத் மனம் மாயினிகளின் வாக்கைவிட்டு திரும்பவேயில்லை. ஸாத்மீகியாகிய டங்கனிடமிருந்து அரசாட்சி எவ்வாறு தனக்குவரும் என்ற ஏக்கம் அவனுக்கு பிடிக்க, ஒவ்வொரு ஸமயங்களில் டங்கனைக் கொலைசெய்தே அதைப் பெறவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. முதலில் அது அவனுக்கு பயங்கரமாகத்தோன்ற ஒருவாறு அதைத் தள்ளப் பார்த்தான். அது மறுபடியும் எழ அவன் மனதில் குழப்பம் பிறந்தது.

இந்த மனக்குழப்பத்தை வெளிக்காட்டாது மறைத்துக் கொண்டு மக்பெத் டங்கன் ஸபைக்கு பிரபுக்களால் வழிகாட்டப்பட்டுவந்தான். அவன் உள்ளே வந்ததும் டங்கன் காடார்பிரபுவின் கொடிய நடத்தையைப்பற்றி 'கொடியவாது அகத்தை முகத்திற்காண எப்படிமுடியும்? அவன் (காடார்பிரபு) இப்படி இருப்பான் என்று யார்தான் எண்ணியிருப்பார்கள்?' என்று சொல்லி வாய்மூடும் தருணமாக இருந்தது. இந்த ஸமயத்தில் வந்த மக்பெத்தைக் கண்டு டங்கனுக்கு ஸந்தோஷம் உண்டாக அவன் அவனை மிகக் கொண்டாடினான். பின்பு பாங்கோவின் வல்லமையைப் புகழ்ந்துவிட்டு அந்த ஸபையிலேயே டங்கன் தன் பிள்ளை மால்கமிற்கு இளவரசுப் பட்டங் கட்டினான். இந்தக் கோலாஹல ஸங்கதியின் பின்பு டங்கன் மக்பெத்தைநோக்கி 'உன் வீட்டிற்கு நாங்கள் எங்கள் பரிவாரங்களோடுவந்து உன்னையும் உன் மனைவியையும் கனம்படுத்துகிறோம்' என்று ஆஞ்ஞாபிக்க, மக்பெத் அரசனுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தனது அரண்மனை நோக்கிப் புறப்பட்டான். போகையில், அவனுக்கு 'டங்கனை இனிமேல் கொலைசெய்தாலொழிய மாயினிகள் சொல்லியபடி எனக்கு இராஜ்யம் கிடைக்காது' என்ற எண்ணம் திடப்பட்டது.

இவன் தன் அரண்மனைக்குப் போவதற்கு கொஞ்சம் முன்னமே தன் மனைவிக்கு ஒரு ஆள்மூலமாக மாயினிகள் விஷயத்தையும் தன் அபிப்பிராயத்தையும் எழுதி அனுப்புவித்திருந்தான். மக்பத் மனைவிக்குத் தன் கணவன் குணம் நன்றாகத் தெரியும். அவனுக்குக் கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

என்பதுபோல டங்கனைக்கொன்று அரசாளவும் ஆசை, கொலைத்தொழிலால் கெட்டபேர் வரக்கூடாதென்றும் ஆசை என்பது அவள் அறிந்த விஷயமே. மாயினிகள் ஸங்கதியை அவள் அறிந்தது முதல் எப்படியாவது தன் கணவன் இராஜ்யம் அடைந்து ஸுகிக்கவேண்டுமென்ற ஆவல் அவளுக்கு மேலிட்டது. அவன் கொலைத்தொழிலுக்கு அஞ்சாது இருப்பதற்கு தான் வேண்டுமான அளவு புத்திசொல்லி அவன் மனதை திடப்படுத்துவதாக அவள் தீர்மானித்துவிட்டாள். இப்படி இருக்கையில் ஒரு தூதன் ஓடிவந்து டங்கன் அன்றிரவு அங்கு விருந்தாக வரப்போகிற ஸங்கதியைத் தெரிவித்தான். உடனே அன்றிரவே கொலையை மக்பெத்மூலமாக நடத்திவிட்டால் நலமாக இருக்குமென்று அவள் தீர்மானித்துவிட்டாள். இதுதான் மக்பெத்தை ஸுகப்படுத்தும்வழி என்று அவள் அறியாமையால் எண்ணி இருந்தாள். இந்த பாபத்தின் பலனை அவள் பின்பு அனுபவிக்கவேண்டிவந்தது. இதற்குள் மக்பெத்தும் அங்கு வந்துவிட்டான். உடனே அவள் தனது தீர்மானத்தை அவனுக்குத் தெரிவித்தாள். பின்பு அன்றிரவு அவர்கள் டங்கன்விஷயத்தில் மிகுந்த மரியாதையாய் இருப்பதுபோல வேஷம்போடவேண்டிய விஷயத்தைப்பற்றிப் பேசினாள்.

இதற்குள் டங்கனும் அங்கு வந்துவிட்டான். மக்பெத்தும் அவன் மனைவியும் தாம் கொண்ட கருமம் முடிப்பதற்காக மிகுந்த அன்பு உடையவர்போல நடித்தனர். அப்பொழுது டங்கன் சாப்பாட்டிற்காக வேலைக்காரர்கள் சாப்பாட்டுக்கூடத்தில் ஓடியாடி வேலைசெய்துகொண்டிருந்தார்கள். டங்கன் வேறோரிடத்தில் காற்று வாங்கிக்கொண்டு உல்லாஸமாக இருந்தான். இந்த ஸமயத்தில் மக்பெத் தனிமையாக ஓரிடஞ்சென்று 'கொலையோடு எல்லாம் முடிந்து ஸுகம் மாத்திரம் உண்டாகும் ஆகில் இக்கொலையைச் செய்வது நலம். ஆனால் இதைச் செய்துவிட்டபின்பு நமக்கு என்ன கெடுதிவருமோ? டங்கனே நமக்கு உறவு. நான் அவனது பிரஜைகளுள் ஒருவன். எப்படி நான் அவனைக்கொலை புரிவது? மேலும் இங்கு அவன் அதிதியாக வந்திருக்கிறான். அவனைக் காக்கவேண்டியது என் கடமையாகவிருக்க நான் எப்படி அவனைக் கொல்லத் துணிவேன்? மேலும் அவனே ஸாத்மீகி. அவனைக் கொன்றால் எல்லோரும் அவன்விஷயத்தில் துக்கம் பாராட்டி உருகுவர். அப்பொழுது எனக்கு என்ன ஸுகம்? ஆகையால் கொலைசெய்யத்தக்க முகாந்திரங்கள் ஒன்றும் காணோமே. ஆனாலும் எனக்கு இருக்கும் பேராசைமாத்திரம் கட்டுக்கு அடங்காதுபோலக் காண்கிறதே'! என்று எண்ணமிட்டுக் குழம்பிக்கொண்டிருந்தான். அந்த ஸமயத்தில் அங்கு தற்செயலாய் அவன் மனைவி வந்து அவனுக்கு ஸுகம் உண்டாக்கவேண்டும் என்ற ஆவலோடு அவனைக் கொலைசெய்யத் தூண்டினாள். அவன் மனச்சஞ்சலத்தை இகழ்ந்துபேசி, தான் ஒரு கொடியகாரியம் செய்தே தீரவேண்டுமென்று தீர்மானித்திருந்தால் அதை எப்படியாவது செய்துமுடிக்க, தனக்கிருக்கும் தைரியங் கூட அவனுக்கு இல்லையென்று பரிஹாசஞ்செய்தாள். பின்பு டங்கனைக்கொன்று ரக்தத்தை அவனருகே தூங்கும் காவலாளர்களின் கன்னத்தில் தடவிவிட்டால் எல்லா ஸந்தேகமும் அவர்கள் மேல் போக, தாம் ஸுகமாக வாழலாம் என்பதாகவும் அதற்காக காவலாளிகளுக்கு அன்றிரவு அதிக சாராயங் கொடுப்பதாகவும் சொன்னாள். தன் கொலைத்தொழிலை மறைத்து ஸுகம்பெற வழிஅறியாது மயங்கிய மக்பெத்திற்கு இது நியசயமாகப் பட அவன் கொலைசெய்வதாகத் தீர்மானித்துவிட்டான்.

டங்கன் சாப்பாடு முதலியன நடந்தன. அந்த ஸமயத்தில் தனக்கு வந்த ஸந்தோஷத்தால் அவன் மக்பெத் மனைவிக்கு ஓர் வைரம் வெகுமதிகொடுத்தான். அவள் மிகுந்த விநயமுடையவள்போல நடித்தாள். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் டங்கன் பள்ளியறை சென்றான். காவலாளர்கள் இருவரும் மக்பெத் மனைவி அன்புடன் அதிகமாக அளித்த சாராயத்தை வயிறுவீங்கக் குடித்துவிட்டு அரசன் அரைக்கு எதிர் அரையில் வந்து சாய்ந்தனர். மக்பெத் மனைவி நடுநிசியில் மணி அடிப்பதாகச்சொல்ல மக்பெத் தூக்கம்பிடிக்காதவனாக வெளியேவந்து முற்றத்தில் பாங்கோவைக்கண்டு வெகுநாழிகை மாயினிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். இதற்குள் எங்கே தன் கணவன் பயத்தால் கொலைசெய்யாது வீண்பழிக்கு ஆளாகிப் பின் வருந்தப்போகிறானோ என்ற ஸந்தேகம் மக்பெத் மனைவிக்கு உண்டாக அவளே காடாரியை எடுத்துக்கொண்டு டங்கனைக் கொல்வதாகப் புறப்பட்டாள். என்ன ஆவலிருந்தாலும் பெண்தானே! டங்கன் படுக்கையண்டை போனதும் அவன் முகத்தில் தன் தகப்பன் முகஜாடை இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. கொல்ல மனது வாராமல்போக அவள் திரும்பிவிட்டாள். இதற்குள் நடுநிசியாக அவள் பரபரப்புடன் மணியை

அடித்தான். அப்பொழுது மக்பெத் முற்றத்தில், பாங்கோ போய்விட, தனிமையாக இருக்க, அப்பொழுது ஒரு கத்தி முனையிலிருந்து ரத்தம் சொட்டுவதுபோன்ற உறு வெளித் தோற்றத்தைக் கண்டு பயந்துகொண்டிருந்தான். கொஞ்சநாழிகையில் அவன்தேறிவர சுடுசிசியின் பயங்கரம் அவனுக்குத்தோன்றியது. இத்தருணத்தில் அவன் மனைவி அடித்த மணி காதில்பட வேகமாக டங்கன் பள்ளிஅறைசென்று அவனை ஒரே வீச்சாய் வீசிக்கொன்றான். அப்பொழுது பிரக்ஞை தவறியிருந்த காவலாளிகளில் ஒருவன் 'கொடுங்கொலை' என்று உளறினன். மற்றவன் சிறித்தான். முன்னவன் 'கடவுள் கிருபை கூர்வாராக' என, மற்றவன் 'ததாஸ்து' என்றான். இருவரும் விழுந்து உறங்கினர். உடனே மக்பெத் 'ததாஸ்து' என்று சொல்ல முயன்றான். அவன் கொடிபசிலை அவனை அவ்வாறு சொல்லவிடவில்லை. இம்மாதிரியான விஷயங்களைக் கண்டு பயந்து நடுநடுங்கிக்கொண்டு கத்தியுங்கையுமாய் மெதுவாகத் தன் மனைவியிருக்கும் இடம்நோக்கி வருகையில் அவன் காதில் 'மக்பெத் தூங்குபவரைக் கொன்றதால் அவனுக்கு தூக்கம்பிடிக்காது' என்ற சப்தம் கணீர் என்று விழுந்தது. இதைக்கேட்டதும் பயம் அதிகமாக மக்பெத் கேசாதிபாதபரியந்தம் நடுங்கிக்கொண்டு தன் மனைவி முன்வந்து நின்றான். அப்பொழுது அவளும் எங்கே நமது கணவன் கொலை செய்யாது திரும்பிவிடுகிறாரோ என்று குழம்பிக்கொண்டிருந்தாள். மக்பெத்தைக் கண்டதும் அவள் பயந்தெளிந்தது. அவன் தான் கேட்டவைகளைச் சொல்ல அவள் கத்தியை காவலாளிகள் பக்கத்தில் வைத்து அவர்கள் கன்னத்தில் ரத்தத்தைப் பூசிவிட்டு வரும்படி அவனை ஏவினள். அவன் மறுபடியும் போகப் பயப்படுவதைக்கண்டு அவனைக் குற்றங்கூறிவிட்டு, அவளே கத்தியைக்கொண்டுபோய்ச்செய்யவேண்டியவைகளை எல்லாம் செய்தாள். இவள் போய் இருக்கையில் பொழுதுவிடியத்தொடங்க வாயிலில் யாரோ கதவைத்தட்டினார்கள். ரத்தமும் கையுமாக இருந்த மக்பெத்துக்கு பயம் அதிகரித்தது. இதற்குள் அவன் மனைவிவர இருவரும் கைகளை ஜாக்கிரதையாகக் கழுவிக்கொண்டு இரவு உடுப்பைப் போட்டுக்கொண்டு ஒன்றும் அறியாதவர்கள் போல நடித்தனர்.

இப்படி இருக்க வாயிலில் இருந்த வாயிற் காப்போன் தூங்குங்கால் தான் நரகவாயில் காப்போனாகவும், அங்கு ஒவ்வொரு பாவிகளாக உள்ளேவிடும் அதிகாரத்தில் இருப்பதாகவும் ஸ்வப்னம் கண்டுகொண்டிருந்தான். கதவை இடிக்க இடிக்க அவனுக்குத் தான் ஒவ்வொரு பாபியாக உள்ளே விடுவதாகத் தோன்றிக்கொண்டிருக்க, கதவைத்திறக்காமலே அவன் ஸ்வப்னம் கண்டுகொண்டு வெகுநாழிகை இருந்து விட்டான். வெகுநாழிகைக்குப் பின்பு சப்தம் அதிகமாக, விழித்துக்கொண்டு அவன் கதவைத்திறக்க, மக்டப் பிரபுவும் வேறொரு பிரபுவும் உள்ளே நுழைந்து மக்பெத்தைப்பற்றி விசாரித்தனர். அப்பொழுது மக்பெத் வெளியே வந்துசேர்ந்தான். அதிகாலையில் தன்னை வந்து சீக்கிரம் எழுப்பும்படியாக அரசன் தனக்குக் கட்டளையிட்டிருப்பதாக மக்டப் சொல்ல மக்பெத் அவனை அரசன் பள்ளி அறைக்கு அழைத்துப் போவதாகச் சொன்னான். 'வீண்சிரமம் உமக்கு எதற்கு? என்வேலையை யானே செய்கிறேன்' என்று மக்டப் அரசன் பள்ளியறை சென்று அங்கு நடந்திருந்த அலங்கோலத்தைக் கண்டு நடுங்கிப்போய் தேகம் தெரியாதவனாக 'கொலை! கொடுங்கொலை!' என்று கதறிக்கொண்டு ஓடிவந்தான். மக்பெத் ஒன்றும் தெரியாதவனைப்போல மற்றப்பிரபுவை அழைத்துப்போய் பார்த்துவிட்டு மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்தவன்போல வீரிட்டு அழுதுகொண்டு மக்டப்பிடம் வந்துசேர்ந்தான். இதற்குள் மக்டப்பின் தடபடலாய் அபாயமணி அடிக்க எல்லோரும் வெருண்டெழுந்து வந்துவிட்டனர். மக்பெத் மனைவி ஸங்கதி கேட்டதும் மூர்ச்சைபோனாள்! பாங்கோ மனதார உருகினான். மால்கம் பாவம்! மதிமயங்கி நின்றான். எல்லோரும் காவலாளர்களே கொன்ற கொடியவர் என்று அப்பொழுது தீர்மானித்தனர். மால்கம் பயத்தால் இங்கிலாந்திற்கு உடனே ஓடிப்போய் விட்டான். மற்றைப் பிள்ளை அயர்லாண்டிற்குப் போனான். ஆகவே பட்டத்திற்கு உரியவர் ஒருவரும் இல்லாமற்போக மாயினிகள் வாக்கின்படி மக்பெத் அரசனானான். முதலில் எல்லோரும் காவலாளர்களே டங்கனைக் கொலை செய்தவர்கள் என்று எண்ணியிருந்தபோதிலும் வர வர கொலையால் அதிக நன்மையை அடைந்தவன் மக்பெத் ஆகையால் அவனே கொலைக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டனர்.

இனிமேல் இக்கொடுந் தொழிலால் மக்பெத் பட்டபாட்டை அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேச சாஸ்திரியாரால்மொழிபெயர்ப்பு

16. இவ்வாறு தேவர்கள் வெகு உண்மையாகவும் மனப்பூர்வமாகவும் தோத்திரம் பண்ணினதை பிரமதேவர் கேட்டு அவர்களுக்கு அனுக்கிரகம்பண்ண விரும்பியவராய் பின்வருமாறு மறுமொழி சொல்லலானார்.

17. வெகு புராணபுருஷராய் கவிதாவாயிருக்கும் அந்தப்பிரமதேவருடைய நான்குவாய்களாலும் சொல்லப்பட்ட சொற்கள் நான்கு அடங்கு பயன் அமைந்தவைகளாய் வெளிக்கிளம்பின.

18. எல்லாவித பல பராக்கிரமமும் பொருந்திய தேவர்களே. உங்கள் அதிகாரங்களை உங்கள் சாமர்த்தியத்தால் நீங்கள் அடைந்து இப்பொழுது ஒரேகாலத்தில் இங்குவந்திருக்கும், நீண்டகையுடைத்தவர்களே! உங்கள் வரவு நல்வரவாகுக.

19. ஏ, தேவர்களே! பனியால் மறைக்கப்பட்டிருக்கும் நக்ஷத்திரங்கள் காந்தி குறைந்திருப்பது போல் ஏன் உங்கள் முகங்கள் முன்போல இயற்கையான காந்தியுடன் விளங்கவில்லை.

20. தேவேந்திரனுடைய வச்சிராயுதம் காந்தி குன்றி பின்னமிருக்குங்காரணத்தால் முனை மழுங்கிப்போனது போல காணப்படுகின்றது.

21. சத்துருக்களால் ஒருபொழுதும் அணுக முடியாத வருணபகவானுடைய கைகளிலிருக்கும் பாசமென்ற கயிறு காருடமந்திரத்தில் தனது வல்லமையையிழந்த ஸர்ப்பத்தின் பேதைமையான நிலைமையிலிருப்பதாகக் காணப்படுகின்றது.

22. தன்னு கதாயுதத்தைக் கைவிட்டு அக்காரணத்தால் கிளைகள் எல்லாம் தறிக்கப் பெற்ற மரம்போல் காணப்படும் குபேரன்கை அவனது மனத்தில் அம்பு போல் குத்தும் ஏதோ ஒருவித அவமானத்தை வெளியிடுகின்றது.

23. ஒளியற்ற தனது தண்டாயுதத்தால் யமன் பூமியில் கோடு இழுத்துக்கொண்டிருப்பதால் ஒருநாளும் வீண்போகாத தனது யமதண்டத்தை ஒரு கொள்ளிக்கட்டையைக் கருதுவதுபோல் கருதியிருக்கின்றான்.

24. தங்களுடைய ஒளிகுன்றிய காரணத்தால் இப்பன்னிரண்டு ஆதித்தியர்களும் சித்திரத்தில் எழுதப்பட்ட ஆதித்தியர்கள்போல் மற்றவர்கள் நன்முகக் கண்களைத்திறந்து தங்களைப் பார்க்கக்கூடிய நிலைமையை ஏனடைந்தார்கள்.

25. மேட்டை நோக்கிப்பாயும் தண்ணீரின் வேகம் குறைவதுபோல், வாயுக்கள் ஏதோ குழம்பி நிற்பதால் அவர்களுடைய வேகம் குன்றியிருப்பது போலுங் காண்கின்றது.

26. வாடித்தொங்கும் சடைகளின் நடுவில் நழுவிக்கொண்டு நிற்கும் சந்திரலேகைகளையுடைய இப்பதினொரு ருத்திரர்களுடைய முகங்களும் "ஹுங்காரம்" தங்களைவிட்டு அகன்றது என்பதை சொல்லுவதுபோலும் காண்கின்றன.

27. இதற்குமுன் நற்பதவியிலிருந்த நீங்கள் பொது விதிகளை அவற்றின் சிறப்புவிதிகள் தள்ளுவன போல உங்களைவிடப் பலமானவர்களால் உங்களிடங்களிலிருந்து ஓட்டப்பட்டீர்களா என்ன?

28. என் குழந்தைகளே, எல்லாரும் ஒன்றுசேர்ந்து என்னிடம் என்னவேண்டி வந்தீர்கள். உலகத்தைப் படைப்பதுமட்டும் என் வேலை என்றும் அவ்வுலகத்தை ரக்ஷிப்பது உங்கள் பாடு என்றும் உங்களுக்குத் தெரியாதா?

29. இவ்வாறு பிரம்மதேவன் கேட்டதும் இளங்காற்றால் அலைக்கப்படும் தாமரைக்குளம் போல விளங்கும் தனது ஆயிரம் கண்களினால் தனது குருவாகிய பிரகஸ்பதியை மறுமொழி சொல்லும்படி இந்திரன் சாடை காட்டினான்.

30. இந்திரனுடைய ஆயிரங்கண்களுக்கும் மேம்பாடுள்ள இரண்டு கண்களை அமையப்பெற்ற இந்திர பகவானுடைய (ஆயிரத்தோராவது) கண்ணான பிரகஸ்பதியும் அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு பிரமதேவரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்.

31. எல்லாவித ஐசுவரியங்களையும் பெற்ற தெய்வமே! நீங்கள் சொன்னது உண்மையே. எங்கள் பதவிகள் சத்துருக்களால் அபகரித்துக் கொள்ளப்பட்டன. ஒவ்வொருவர் மனத்திலும் புகுந்துபார்க்கும் வல்லமைபடைத்த உங்களுக்கு இது ஏன் இதுவரையில் புலப்படவில்லை.

32 தங்களிடமிருந்து வரம்பெற்றுச் செருக்கடைந்திருக்கும் தாரகன் என்ற பெயருள்ள ஓர் பெரும் அசுரன் ஓர் வால்வெள்ளிபோல் இவ்வுலகத்தை நாசஞ்செய்யவேண்டுமென்றே தோன்றியிருக்கின்றான்,

33. அவனுடைய பட்டணத்தில் சூரியபகவான் தான் எவ்வளவுமட்டும் வெயிலடித்தால் அவனுடைய தாமரை ஓடைகளிலிருக்கும் தாமரைப் புஷ்பங்கள் மலருமோ அவ்வளவுமட்டுந்தான் வெயிலை அடிக்கின்றான்.

34. சந்திரபகவானே எந்நாளும் தனது எல்லாக் கலைகளோடும் அத் தாரகாசுரனைச் சேவித்து வருகின்றான். ஈசுவரனுடைய தலையில் ஆபரணமாய் விளங்கும் அந்த ஒரு கலையைமட்டும் சந்திரன் தன்னிடம் வரவழைத்துக் கொள்ளுகின்றதில்லை.

35. மலரைத் திருடினவனென்று எங்கே தன்னைத் தாரகன் தண்டிப்பானோ என்று நடுங்கி அவன் தோட்டத்துக்குள் நுழைய வழியேயின்றி அவனருகாமையிலிருந்துகொண்டு ஒரு வீசிறியினால் வீசினால் எவ்வளவு காற்றுண்டாகுமோ அவ்வளவு காற்றுக்குமேல் உண்டாகாதபடி பயந்து வாயுபகவான் அடித்துக்கொண்டு வருகின்றான்.

36. ஆறு ருதுக்களும் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இயற்கைபோல் தோன்றுவதைவிட்டு எப்பொழுதும் மலர்கள் கொய்துகொண்டுவந்து கொடுப்பதிலேயே கவனமுள்ளவர்களாய் தாரகனுடைய தோட்டக்காரர்கள்போல் அவனுக்குப் பணிவிடை செய்கின்றார்கள்.

37. நதிகளுக்கெல்லாம் நாயகனான சமுத்திர ராஜன் தாரகனுக்கு தான் காணிக்கையாகக் கொடுக்கவேண்டிய ரத்தினங்கள் எப்பொழுது நன்றாக முதிரும் என்று ஸமுத்திரஜலத்துக்குள் புகுந்து எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கின்றான்.

38. வாஸுகி முதலான சர்ப்பவேந்தர்களும் இரவுகளில் எப்பொழுதும் பிரகாசிக்கும் தங்கள் சிரோமாணிக்கங்களை ஒரேமாதிரி நின்றெரியும் விளக்குகளாக ஏந்திக்கொண்டு அத்தாரகனுக்குப் பணிவிடை செய்கின்றார்கள்.

39. இந்திரனும் அத்தாரகன் நமக்கு எப்பொழுது அநுக்கிரகம் பண்ணப்போகின்றான் என்று அவனுடைய தயவை எதிர்பார்த்துக்கொண்டு கற்பதருக்களிலுண்டாகும் மலர்களைக் கொய்து அவனிடம் தூரத்திலிருந்தபடியே கொடுத்துக்கொண்டு அத்தாரகனை தன்னிடம் நல்லவிதமாக நடக்கும்படி பண்ணிக்கொள்ளுகின்றான்.

40. இவ்வண்ணம் எல்லாராலும் பணிவிடை செய்யப்பெற்றபோதிலும் அத்தாரகாசுரன் மூவுலகங்களையும் இம்சிக்கின்றான். தீயன் தீமை செய்யப்பெற்றால் அடங்குவானேயன்றி நன்மை செய்யப்பெற்றால் ஒருபொழுதும் அடங்கமாட்டான்.

41. தேவமடந்தைகளும்கூட தங்கள் கைகளால் வெகு கருணையுடன் கொய்யும் இளந்தளிர்கள் அமைந்த இந்திரனுடைய சிங்காரவனத்திலிருக்கும் மரங்களோ இப்பொழுது தாரகன் கைவசப்பட்டு அவனால் வெட்டவும் முறிக்கவும்பட்டு அவஸ்தைப் படுகின்றன.

42. அத்தாரகாசுரன் தூங்கும்பொழுது அவனால் சிறைபிடிக்கப்பட்ட தேவஸ்திரீகள் சுவாஸத்துக்கொப்பான இளங்காற்றுண்டாகும்படி தங்கள் கண்ணீர்த் திவலைகளை வாரி இறைக்கும் விசிறியால் விசிறிக்கொண்டிருக்கின்றார்கள்.

43. சூரியபகவானுடைய குதிரைகளின் கால் குளம்புபட்டுத் தேய்ந்திருக்கும் மேருமலையின் சிகரங்களை அத்தாரகன் பிடுங்கி தனது மாளிகைக்குள் அழகான சிங்காரக்குன்றுகளாக வைத்துக்கொண்டிருக்கின்றான்.

44. தாரகாசுரனுடைய பொற்றாமரைக்கு ஏது ஓடையென்றால் முன்னர் திசைக்கரிகளுடைய மதத்தால் வாஸித்துக்கொண்டிருக்கும் மந்தாகினியின் ஜலமே.

45. சுவர்க்கலோகத்தி லிருக்கின்றவர்களுக்கு பூலோகத்தைப்போய்ப் பார்த்துவருவோமென்ற ஆசையே போய்விட்டது. தாரகன் எங்கு வழியில் வந்து விடுவானோ என்றபயத்தால் சுவர்க்கலோகத்தார்கள் விமானம் செல்லும் வழியும் புல் முளைத்துப்போயிற்று.

46. யாகம் பண்ணுகின்றவர்கள் தாங்கள் யாகஞ்செய்யும்பொழுது எங்களுக்குக் கொடுக்கும் அவிஸ்ஸை நாங்கள் கண்களைத்திறந்து உட்கார்ந்து கொண்டிருக்கும்பொழுதே எங்கள் முன்னிலையில் அக்கினிபகவானுடைய வாயிலிருந்தபடியே தாரகாசுரன் பிடுங்கிக்கொண்டு போகின்றான்.

47. அத்தாரகன் இந்திரபகவானுடைய உச்சைசிரவஸ் என்ற ஜாதிக்குதிரையை இந்திரன் வெகு காலமாய்த்தேடி தனது உடம்புடனுடம்பாக வைத்திருக்கும் புகழை அபகரித்துக் கொண்டு போவது போல் அபகரித்துக் கொண்டு போய் விட்டான்.

(இன்னும் வரும்.)

உழவுநூல்

AGRICULTURE

(86ம் பக்கத்தொடர்ச்சி)

இராஜதானியின் பொது அமைப்பு

கிழக்குத்தொடர்ச்சி மலையானது (Eastern-Ghauts) இராஜதானியின் வட எல்லையிலிருந்து ஆரம்பித்து தென்மேற்கு திசையாய்த் தொடர்ந்திருக்கிறது. கிருஷ்ணாநதிக்கப்பால் நேர் தெற்கே தொடர்ந்து (Coromandel Coast) கீழ் கடற்கரைக்கு சமமாக (Pulicat) புலிக்காடு ஏரிவரை ஓடி அதற்கப்புறம் முன்போலவே தென் மேற்காகத் திரும்பிக் கடைசியாக நீலகிரிமலையில் முடிந்து மேற்குத்தொடர்ச்சிமலையோடு (Western Ghauts) சேர்கிறது. கிழக்குத்தொடர்ச்சி மலையின் சராசரி உயரம் 3000 அடி ஆகும். அதிலுள்ள உன்னத சிகரம் 5000 அடி உயரமுள்ளது. சேர்வராயமலைத் தொடர்ச்சி 4000 அடி உயரமாகும். கிழக்குத்தொடர்ச்சிமலையானது இருபுறங்களிலும் நதிகள் ஓட நடுவில் தங்கியிருக்கும் பீடபூமியன்று. (Not a Watershed or water parting) ஏனென்றால் கோதாவரி, கிருஷ்ணா நதிகள் அதை ஊடுருவியும் ஓடுகின்றன.

மேற்குத்தொடர்ச்சிமலை.—இது பம்பாய் இராஜதானியின் கிழக்கு எல்லைவழியே தொடர்ந்து வந்து கன்னியாகுமாரிமுனையில் கடலுக்கு 10, 15 மைல் தூரத்திலே முடிகிறது. இது கிழக்குத் தொடர்ச்சிமலையைவிட விசாலமானது. முக்கியமாய் கீழ்ப்பக்கத்தில் அதிக செங்குத்தானது. இத்தொடர்ச்சியின் சராசரி உயரம் கிழக்குத்தொடர்ச்சி மலையினும் அதிகம். இது தன் இருசாரல்களிலும் நதிகளோட, நடுவே பீடபூமியாயிருப்பதால் நீர்ப்பிரிப்பு (Water parting) என்று சொல்லலாம். என்றாலும் நீலகிரிமலைக்குத் தெற்கே பிளப்பும் கணவாய்களுமிருக்கின்றன.

பாலக்காடு மலை பிளப்புக்குத் தெற்கேயுள்ள அண்ணாமலை, பழனிமலைத் தொடர்ச்சிகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிளைகளாகும்.

முக்கிய நதிகள்:—கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணையாறு, பாலாறு, காவேரி, வைகை, தாம்பரபரணி.

மழையும் பருவக்காற்றுகளும்

ஜூன்மாதம் முதல் செப்டம்பர்வரை தென்மேற்குத் திசையிலிருந்து இராஜதானியின் இடையே வீசுகின்ற ஈரச்சத்து மிகுந்த பருவக்காற்றுகள் இராஜதானியின் பலபாகங்களில் இடத்துக்கு ஏற்றபடி மழையாகப் பெய்கின்றன. இவைதான் தென்மேற்கிலிருந்துவரும் பருவக்காற்றுகளாகும். இதற்குத்தான் தென்மேற்குப் பருவக்காற்றுமழையெனப் பெயர் (South West Monsoon).

அக்டோபர்மீ முதல் டிசம்பர்மீ வரை வடகிழக்குப் பருவக்காற்றுகள் மழையை ஏராளமாகக் கொண்டுவருகின்றன. இதற்குத்தான் வடகிழக்குப் பருவக்காற்றுமழையெனப் பெயர். ஜனவரிமாதமுதல் மார்ச்சமாதம்வரை வறண்டகாலமாகும். ஏப்ரல்மாதம் தொடங்கி மேமாதம்வரை இடி மின்னல்களோடு கூடின புயற்காற்றும், சூறையும் அடிப்பதோடு சொற்பமழையும் பெய்யும்.

வருஷத்தின் காலப்பிரிவுகள்

ஏப்ரல், மேமாதங்கள்—கோடைக்காலம்.

ஜூன்முதல் செப்டம்பர்வரை—தென்மேற்குப் பருவக்காற்று மழைகாலம் அல்லது சாரல்காலம்.

அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்று மழைகாலம் அல்லது காலமழைகாலம். (North East Monsoon).

ஜனவரி முதல் மார்ச்சு வரை வறண்டகாலம் (Dryweather).

இராஜதானியின் ஜில்லாக்கள்தோறும் மழை ஒரே அளவாய்ப் பெய்கிறதில்லை. பற்பல ஜில்லாக்களிலும் ஒரேஜில்லாவில் பலவிடங்களிலும் இடங்களுக்கேற்றபடி வெவ்வேறு அளவாய் மழை பெய்கிறது.

மேற்குக்கடலோரத்தில் சராசரி வருடாந்திர மழையளவு 100 முதல் 200 அங்குலமாகும். ஆனால் விடுபட்ட நாடுகளில் அதாவது கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தபூர், (Ceded districts.) ஜில்லாக்களிலோ சுமார் 20 அங்குலமட்டுமேயாகும்.

மழையின் அளவை நிதானிக்கக்கூடிய முக்கிய காரணங்கள்

(1) உஷ்ணத்தின் அளவு அதிகரிப்பதற்கேற்ப ஈரச்சத்தை (Saturation point) அதிகமாகக் கொள்ளக்கூடியது.

(2) நிலத்தின் சரிவும் காற்றின் திசையும்.

(3) குளிர்ந்தகாற்றும் நிலமும்.

இராஜதானியில் பெய்கின்ற மழையின் அளவு

முன் சொன்னபடி மேற்குக் கடற்கரை யோர நாடுகளில் தென்மேற்கிலிருந்துவரும் பருவக்காற்றுகள் ஏராளமான மழையைக் கொட்டுகின்றன. அவ்விடங்களில் சராசரி மழையின் அளவு 100 சுழி. கடப்பை, கர்னூல், பல்லாரி, அநந்தப்பூர் ஜில்லாக்களில் 20 சுழி. ஜெய்ப்பூரில் 50 முதல் 70 சுழி வரை பெய்கிறது.

வடகிழக்குப் பருவக்காற்றுகளில் அவ்வளவு ஈரச்சத்தில்லை. பெரும்பாலும் கடற்கரைக்குச் சமீபத்திலேயே பெய்துவிடுகின்றன. மேற்குறித்த பருவக்காற்றுகள் அடிக்க ஆரம்பிக்கவும் விதைப்பு காலம் தொடங்குகிறது. அவ்வக்காலத்திற் பெய்யும் மழைக்குத் தக்கபடி பயிர் விளைவிப்பார்கள். கோடைகாலத்தில் போதுமான மழைபெய்தால் அப்போதே புன்செய்களை உழுது பயிரிட ஆரம்பித்துவிடுவார்கள். பொதுவாய் அக்காலத்தில் விளைவாகும் பயிர்களாவன.—பெரும்பான்மை எள்ளும், சிறுபான்மை சோளமுமே.

தென்மேற்குப் பருவக்காற்று மழையை எதிர்பார்த்தே பெரும்பாலும் விதைக்கவும் சற்று மணற்பாங்கான (Light classes of soil) நிலங்களை உழுது பயிரிடவும் ஆரம்பிக்கிறார்கள்; இப்பருவக்காற்றுகள் இராஜதானி முழுமையுமே உபயோககரமாயிருக்கின்றன. பருவந்தப்பிப் பெய்தால் குறித்தகாலத்தில் விதை விதைக்க முடியாது. அக்காலத்தில் வழக்கமாய் பயிராகவேண்டிய பயிர்களை சரியானபடி பயிர்செய்ய இயலாது. ஆகையால் அவற்றிற்குப் பதிலாக தகுதியான வேறுபயிரை விளைவிக்கவேண்டியதுதான். மழைகாலந் தப்பிப்பெய்தாலும் பெய்யவேண்டிய காலமுழுவதிலும் அமோகமாகப் பெய்யுமானால் களிப்புற நிலங்களுக்கு பாதகமில்லை. ஏனென்றால் அவை ஈரத்தைக் காத்துக் கொள்ளக் கூடியவையாதலாலும் அந்நிலங்களில் அக்டோபர் மாதத்தில் மழைபெய்ய ஆரம்பித்ததற்குப் பின்னரே விதைக்கிறதாலுமேயாம். தென்மேற்குப் பருவக்காற்று மழை இராஜதானியின் எல்லைக்குப் புறம்பாகப் பெய்யுமானால் மிக்க உபயோககரமாயிருக்கிறது. ஏனென்றால் அப்படிப்பெய்வதால் கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, தாம்பிரபரணி முதலிய பெரும் நதிகளில் வெள்ளம் ஏராளமாக வருகிறது. வடகிழக்கு பருவக்காற்றுகள் மாகாணத்தின் மற்ற பாகங்களில் வியவசாயம் நடப்பதற்கு இன்றியமையா. அம்மழையினாலேயே ஏரிகளுக்கும், கண்வாய்களுக்கும், குளங்களுக்கும், ஜலம் பெருகவேண்டியிருக்கிறது. அவற்றின் உதவியினால் புன்செய் நிலங்களில் பயிர்செய்கிறார்கள். மிகவும் தெற்கேயுள்ள இடங்களில் அவற்றை எதிர்பார்த்தே களிப்புநிலங்களிலே பருவ ஆரம்பத்தில் பயிர்செய்துவிடுகிறார்கள். அவ்விடங்களில் இரசலான பூமியில் சீக்கிரம் விளைவாகக்கூடிய பயிர்களை செய்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலும் மதுரை, கோயம்புத்தூர் ஜில்லாக்களின் சில பாகங்களிலும் புன்செய் சாகுபடிக்கு இப்பருவமழை இன்றியமையாதது. மேலும் களிப்பு நிலங்களுக்கும் (Heavy soils) அப்படியேயாகும்.

ஜனவரிமுதல் மார்ச்சுவரை (கோடைகாலத்தில்) சிறுதூத்தல்மட்டும் எப்போதாவது தூறுவதால் அம்மாதங்களில் வியவசாயம் நடத்துவதற்கு உதவியாகமாட்டாது.

அத்தூத்தல்களால் புல் வளர்ந்து மேய்ச்சல் நிலம் அதிகரிக்கும். போட்டதும் சீக்கிரம் விளையக்கூடிய பயிர்கள் செய்வதற்கும் ஒருவாறு உபயோகமாயிருக்கின்றன. நீர்ப்பாய்ச்சி உண்டாக்கின பயிர்களுக்கும் உபயோகமானவை. இராஜதானியின் சில பாகங்களில் மே மாதம் முடிவுக்குள் பருவமழை பெய்ய ஆரம்பிக்கிறது. முக்கியமாய் மேற்குக் கரை நாடுகளிலேதான் அவ்வாறு பெய்கிறது.

எப்பிரல், மே, ஜூன் இம்மாதங்களில் அடிக்கடி சுழற்காற்றுகளும் வீசுகின்றன. மே மாதம் ஆரம்பிக்கிற பருவமழை பெரும்பான்மை பருவக்காற்றுகளாலும் ஒரு சிறிது வேறுகாரணங்களாலும் கிடைக்கிறது ஜூன்மாதத்தில் பருவக்காற்றுகள் மழையைக் கொணர்ந்துவந்தாலும் ஆகஸ்டு, செப்டெம்பர் மாதங்களில்தான் ஏராளமான மழை வருவிக்கிறது. செப்டெம்பர் இறுதியில் மேற்குத் திசைக் காற்றுகள் நின்றுவிடுகின்றன. இப்பொழுது கீழ்கரைநாடுகளில் கனத்தமழை பெய்ய ஆரம்பிக்கிறது. இம்மழைதான் வடகிழக்குப் பருவகாற்று மழை என்பது.

(இன்னும் வரும்.)

By a Specialist.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லார்
தொழுதுண்டு பின் செல்பவர்.

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழலவர்.

இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.——குறள்.

சுகாதாரவிளக்கம்

HYGIENE

(பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது)

ஐந்தாவது அத்தியாயம்

வாஸஸ்தலம்

57. சௌக்கியமான வாஸஸ்தலம்.—நாம் எல்லாவிதத்திலும் சௌக்கியமான ஒரு வாஸஸ்தலத்தை அமைத்துக்கொள்ள வேண்டுமானால் அடியிற் சொல்லப்படும் நிபந்தனைகளை நாம் நன்றாகக் கவனிக்கவேண்டும்:—

முதன்முதல், உலர்ந்த தரை; இதில் விஷக்காற்றுக்கு இடமேயிருக்கக்கூடாது. இந்தவிடத்தில் பரிபூர்ணமான வெளிச்சமும் காற்புறமும் சுற்றிப் பார்த்தால் உற்சாகமும் இருக்கவேண்டும்.

இரண்டாவது, பரிசுத்தமான தண்ணீர் நமக்கு ஏராளமாகக் கிடைக்கக்கூடிய இடமாகவும் அத்தண்ணீர் நமக்கு உபயோகப்பட்டபிறகு நமது வீட்டைவிட்டு வெளியே செல்ல ஏற்பாடுகள் அமைந்தவிடமாகவு மிருக்கவேண்டும்.

மூன்றாவது, நமது வீட்டின் உத்விருஷ்டங்களும் சாக்கடை வண்டல்களும் அப்போதைக்கப்போது அடிக்கடி அகற்றப்படுமிடமாக நமது வாஸஸ்தல மிருக்கவேண்டும்.

நான்காவது, நமது சுவாசாசயத்திலிருந்து வெளிப்படும் கரிமலவாயு நமது வாஸஸ்தலத்தைச் சூழ்ந்து நிற்காதவண்ணம் எப்பொழுதும் காற்றோட்ட மிருக்கும் வீடாக நமது இருப்பிட மிருக்கவேண்டும்.

ஐந்தாவது, நமது வாஸஸ்தலத்தின் கட்டிடம் அஸ்திவாரம், சுவர், கூரைமுதலிய ஒவ்வொருபாகத்திலும் ஈரந்தாங்கி நிற்காதவண்ணம் எப்பொழுதும் உலர்ந்தவைகளாகவே யிருக்கவேண்டும்.

இவ்வாறு நாம் குறிப்பிட்ட எல்லாவித நிபந்தனைகளையும் நன்றாகக் கவனித்துப் பார்க்கும்பொழுது முக்கியமாக நமது வாஸஸ்தலத்தின் வாயு பரிசுத்தமான வாயுவாக இருக்கின்றதா என்பதுதான் பிரதானமாகும். அதை நாம் கவனிக்கும் பக்ஷத்தில் மற்றெல்லாவற்றையும் கவனித்தவர்களாவோம்.

தனவான்களின் மாளிகைகளும் ஏழைகளின் குடிசைகளும் காய்ந்த தரையுள்ள விடங்களிற் கட்டப்பட்டு நீர்வளம் பொருந்தியவைகளாக விருக்குமாயின் அவ்விரண்டு வாஸஸ்தலங்களுள்ளும் ஒருவித வித்தியாசமுமிருக்கமாட்டாது. பெரும்பாலும் ஏழையின் குடிசையே அதிக சாக்கடையில்லாத காரணத்தால் தனவான் மாளிகையைவிட அதிக சௌக்கியமாயிருக்கும். ஆனால் அக்குடிசையில் அதிக ஜனசங்கம் வசிக்கும்படி வந்தால் சரியான காற்றோட்டத்துக்கு வழியில்லாமையால் அவ்வாஸஸ்தலம் கெட்டுவிடும்.

58. வாஸஸ்தல மிருக்கவேண்டிய விதம்.—சிறு வீடுகளிலும் குடிசைகளிலும் வசிப்பதாலேயே நோய்கள் உண்டாகமாட்டா. அஸ்திவாரமும் அடித்தரையும் காய்ந்தவைகளாகவிருந்து உத்விருஷ்டங்களும் சாக்கடைக் கும்பிகளும் நிற்காமல் அகற்றப்பட்டு இரவில் தூங்கும்பொழுது சாக்கடை நாற்றம் சம்பந்தித்த மலவாயுவை முகராமல் சிறுவீடுகளிலும் குடிசைகளிலு மிருப்பவர்கள் நித்திரை செய்வார்களேயானால் அவர்களுடைய தேகசௌக்கியத்திற்குக் குறைவுண்டாகமாட்டாது.

59. காய்ந்ததரை.—காய்ந்ததரை நமது வீடுகளுக்கு எப்பொழுதும் இருக்கவேண்டுமானால் நமது வீடுகளின் அஸ்திவாரங்களுக்கு 4-5 அடி கீழேயுங்கூடக் கசிவில்லாதவண்ணம் நாம் பார்க்கவேண்டும். அஸ்திவாரத்து அடியில் களிமண் தட்டுப்படுமேயானால் அக்களிமண்ணின்மேல் சுண்ணாம்பு செங்கல் இவைகளாற் றளம்பரப்பி நமது வாஸஸ்தானத்துக்கு எப்பொழுதும் உலர்ந்ததரை கிட்டும் சுகத்தை நாம் அடையவேண்டும். நமது வீட்டைச்சுற்றி நாம் எடுக்கும் சுவர்கள் ஈரம் பற்றாதவண்ணம், கூரைகளிலிருந்து வழியும் தண்ணீர் சுவரிலிறங்கி அச்சுவரை ஈரமாகச் செய்யாதவண்ணம் வீடு கட்டவேண்டும். சிலவிடங்களில் சுவரைச் சிமிட்டிபூசி ஈரம் பிடிக்காதவண்ணம் பாதுகாக்கின்றார்கள். வீட்டின் தளம் சரிவர உலர்ந்திருக்கும் நிலைமையை நாம் எப்பொழுதும் கவனிக்கவேண்டும். வீட்டின் தளத்தின்மேல் எப்பொழுதும் காற்றோட்டமிருக்கின்றதா என்பதை நாம் நன்றாகக் கவனிக்கவேண்டும். தளத்தில் ஏதாவது ஓட்டைகள் அல்லது வங்குகளிருந்தால் அவைகளின் வழியாய் பூமிக்குள்ளிருந்து மலவாயு கிளம்பி வீட்டை அபரிசுத்தமாக்காதவண்ணம் நாம் அவ்வங்குகளையும் ஓட்டைகளையு மடைக்கவேண்டும். மழைபொழியும்பொழுது அம்மழை நீர் பூமியிலேயே ஆழ்ந்துவிடாதவண்ணம் தாராளமாய் ஓடி வெளியே சேரும் வழிகளை

நாம் வசிக்கும் வீட்டில் உண்டாக்கி வைக்க வேண்டும்.

60. வீட்டுச்சாக்கடை.—நாம் ஒரு வீட்டிற்குள் புகும்பொழுது நாற்றமிருக்குமாயினும் அந்நாற்றத்துடன் பூமியின் கசிவுமிருக்குமாயின் அவ்விருவித அடையாளங்களும் அவ்வீட்டின் சாக்கடை சரியான ஸ்திதியிலில்லை என்பதற்குப் பெரும் அடையாளங்கள். நாம் குடியிருக்கும் வாஸஸ்தலங்களில் ஒவ்வொரு அறைக்கும் எதிரும் எதிருமாக இரண்டு விசாலமான ஜன்னல்கள் இருந்தே தீரவேண்டும்.

61. தூங்கும் அறை.—நாம் இரவிற்படுத்து நித்திரைசெய்யும் அறைகளிலோ அல்லது மற்ற இடங்களிலோ அதிக அடைசல் எப்பொழுதுங்கூடாது. காற்றோட்டம் எப்பொழுதும் இருக்கவே வேண்டும். குளிர் காலத்திலும் பனிக்காலத்திலுங்கூடக் குளிரும் பனியும் நம்மைப் பாதிக்காவண்ணம் நாம் பாதுகாத்துக்கொண்டு காற்றோட்டம் போதுமானவரையில் வைத்தே நமது வாஸஸ்தலங்களை அமைக்கவேண்டும். அன்றியும் அப்படுக்கை அறையிலுள்ள மெத்தை, பாய், தலையணை, போர்வை இவைகளை எல்லாம் அடிக்கடி நாம் வெயிலில் போட்டுத் தட்டி எடுத்தும், துணிகளையும் போர்வைகளையும் உறைகளையும் தோய்த்தும் மாற்றியும், வைத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் நமது வியர்வை முதலியவைகளால் நமது படுக்கைமுதலியவைகள் கெட்டு அந்நாற்றத்தால் நமது படுக்கை அறையின் வாயு விஷவாயுவாக மாறும். தூங்குமறைக்குள் விளக்கெரிவதாகவிருந்தால் அதனால் வெளிவிடப்படும் விஷவாயு நமது சுவாசத்துக்கு சாதனமாகும் வாயுவுடன் கலக்காமல் அகன்றுபோகும் வண்ணம் அவ்விளக்கை ஒதுக்கிவைக்கவேண்டும். நாம் தூங்கும் அறையில் வண்ணான் அழுக்குகள் அல்லது உலருவதற்காகக் கொடிகளில் விரிக்கப்பட்ட ஈரவேஷ்டிகளிருக்கக்கூடாது. நமது அறைக்குச் சமீபத்தில் விஷவிருக்ஷங்கள் அல்லது விஷவாயுவை கக்கும் செடிகளிருந்தால் அவைகளால் தேகத்துக்கு அசௌக்கியமுண்டாகும். நமது வீட்டுக்கு நான்கு பக்கங்களிலேயும் வெயிற் படும்படிக்கும் காற்று சஞ்சாரமிருக்கும்படிக்கும் கட்டிக்கொள்ளவேண்டும்.

ஒருவீட்டில் வசிக்கும் நாமும் நம்மைச் சேர்ந்தவர்களும் இரவில் இரண்டொருதடவை எழுந்திருந்து தேக பாதையைத் தீர்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். நமது உத்விருஷ்டங்களால் நமது வாஸ ஸ்தலத்துக்கு வாயு கெடாதவண்ணம் அவைகளை ஜலம் கொட்டி அலம்பியோ அல்லது சாம்பலைப்போட்டு மூடியே வைக்கவேண்டும். நாம் தூங்கும் அறைகளில் அதிகமாகத் தட்டு முட்டுப் பெட்டி முதலிய சாமான்களிருக்கக்கூடாது. இவைகளிருப்பின் நமது ஆரோக்கியத்துக்காக அவ்வறையிலிருக்கவேண்டிய சத்தாகாயத்தை இவைகள் குறைப்பதுடன் இவைகளிற் சில குறைவாயிருக்கும் அவ்வாகாயத்தையும் கெடுத்துவிடுகின்றன. நாம் படுத்துக்கொண்டு தூங்கும் அறையில் நமது புசிப்புக்கு என்று ஒருவித ஆகாரத்தையும் ஒருபொழுதும் வைக்கவேகூடாது. அவைகள் கெட்டு விஷமாய்ப் போவதுடன் நமக்கு வேண்டிய காற்றையும் கெடுக்கும். ஒருகால் நேராதவண்ணம் வைத்துக்கொள்ளும்படி சம்பவித்தால் அவ்வாகாரத்தை ஒரு பாத்திரத்தில் நன்றாக மூடிவைத்து உபயோகிக்கவேண்டும்.

62. வீடுகட்ட உதவாத இடங்கள்.—பூமி மட்டத்துக்குக் கீழேயிருக்கும் நிலவறைகள், சதுப்பு நிலங்கள், அதிக மரங்களடர்ந்து வெகு நெருக்கமாகவிருக்குமிடங்கள் நாற்றங்கள் வெளிக்கிளம்பும் தொழில்கள் நடக்குமிடங்கள்.

63. பள்ளிக்கூடங்கள் கட்டப்படவேண்டிய இடங்கள்.—பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் பெருந்தெருக்களுக்கும் அதிக சத்தமுண்டாகுமிடங்களுக்கும் ஒதுங்கியிருக்கவேண்டும். பள்ளிக்கூடத்திற் பல அறைகளிருக்குமாகையால் ஒரு அறையிலுண்டாகும் சத்தம் மற்ற அறையில் ஏகமாகக் கேட்கப்படாமலிருக்கும்படியாக ஒவ்வொரு அறையும் அமைக்கப் பட்டிருக்கவேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கென்று ஏற்பட்டிருக்கும் அறையில் நாற்பது பிள்ளைகளுக்கு மேலுட்காரக்கூடாது.

64. ஆசுபத்திரி முதலியவை கட்டுதல்.—ஆசுபத்திரி கட்டுதல், கைதிகளை அடைக்கும் சிறைச்சாலை கட்டுதல் இவைகளை வேண்டிய முறைகளைப் பற்றி அதிகாரிகள் சுகசந்தர்சன விதிப்பிரகாரம் நிபந்தனைகளை உண்டாக்கியிருப்பதுமல்லாமல் அவ்வாறு அக்கட்டிடங்கள் கட்டப்படும்படியும் விதித்திருக்கின்றார்கள். அந்நிபந்தனைகளை நாம் இங்கு எடுத்துரைப்பது அனாவசியம்.

65. சரியான வாஸஸ்தலமில்லாதகாரணத்தால் விளையும் நோய்கள்.—வாய்ப்புண் அல்லது தொண்டைக்கட்டு - (Sore throat) - தொண்டைச்சதைவளர்ச்சி (Diphtheria) சிவப்பம்மை (Scarlet fever) இரத்த விஷஜென்னி (Blood poisoning) சூதிகவாயு ஜென்னி (Puerperal fever) - கபஜ்வரம் (Pneumonia) பேதி (Diarrhœa) விஷஜ்வரம் (Enteric fever.)

நீலி வசீகரம்

TAMING OF THE SHREW

அங்கம் II.

களம் 1. மதுரை ரகுநாததேவரின் வீட்டிலோர் அறை.

(கௌதமிதேவியும் வசிதேசுவரியும் வருதல்.)

வசி.—அக்கா! என் என்னை இம்மாதிரியெல்லாம் துன்பப்படுத்துகின்றனை? உன்னுடைய வேலைக்காரியாக நினைத்து அற்பவேலைகளையெல்லாம் செய்யச்சொல்லுகிறாயே! இதைச்சகிக்க முடியவில்லை. என் கைக்கட்டை அவிழ்த்துவிடு; அதற்குப்பிறகு நீ சொன்னவைகளையெல்லாம் செய்கிறேன்.

கௌ.—அது கிடக்கட்டும்; நீ யாரைக் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறாய்? ஒளிக்காமல் பதில் சொல்லு.

வசி.—அக்கா! உன்னிடத்தில் உண்மையை ஏன் ஒளிக்கவேண்டும்? நான் இன்னும் ஒருவர்மீதும் காதல் கொள்ளவில்லை.

கௌ.—பட்டி முண்டை! பொய் சொல்லுகிறாயா? பிரதாபருத்திரதேவரை நீ காதலிப்பதில்லையா?

வசி.—அக்கா! உனக்கு அவர்மேல் விருப்பமாயின், வேண்டுமானால் நானும் உனக்காகப் பரிந்துபேசுகிறேன்.

கௌ.—ஓகோ! அப்படியானால் நீ இன்னும் பணக்காரனைப் பார்க்கிறாய் போலிருக்கிறது, பொன்னம்பலத்தேவரோ?

வசி.—நான் அவரைக் கல்யாணஞ்செய்துகொண்டு விடுவேன் என்பதாக நீ பயப்படுகிறாயா? நீ என்னைப் பரிகாசஞ் செய்கிறாயென்று தோன்றுகிறது; அக்கா! கைக்கட்டை அவிழ்த்துவிடு; கெஞ்சிக் கேட்கிறேன்.

கௌ.—ஆமாம்; உன் கிட்டத்தான் எனக்குப் பரிகாசம் பண்ணவேண்டும்! அதெல்லாம் பரிகாசமாகவிருந்தால், இதுவும் பரிகாசமாக விருக்கட்டும். (வசிதேசுவரியை அடித்தல்).

ரகுநாததேவர் வருதல்

ரகு.—என்னடி, யிது? என்ன அமளி? ஒரு நாழிகைப்பொழுதாவது சும்மாவிருக்கமாட்டாயா? வசிதே, அப்போ:—பாவம்! அழுகிறாளே:—உள்ளேபோய்ப்படி; இவளோடு ஒன்றும் பேச வேண்டாம். கௌதமி! உனக்கு வயதாயிற்றே! உன்னோடு அவள் சண்டைக்கு வருகிறாளா? நீ ஏன் அவளை அடிக்கிறாய், இந்தத் துஷ்டத்தனம் என்றைக்குத்தான் உன்னைவிட்டு நீங்குமோ?

(வசிதேசுவரி போதல்)

கௌ.—இப்போதுதான் தெரிகின்றது; உமக்கு அவள்தான் அருமைப்பெண்; நான் எக்கேடு கெட்டுப்போனால் உமக்கென்ன? வேலைகள் செய்வதற்கு நான்; செல்வமாய்ச் சீராட்டப்படுவதற்கு அவள். உமக்கு இத்தனை அசூயை ஆகாது. நான் இங்கே இருக்கவில்லை; போகிறேன், போம். (போதல்)

ரகு.—அட, அப்பா! எனக்கு இப்படித் துன்பம் நேரவேண்டுமா? இதோ வருகிறவர் யாவர்?

(எளிய வேஷம்பூண்ட விஜயராகவ உடையாருடன் பொன்னம்பலத்தேவரும், பாடகவேஷம் பூண்ட பிரதாபருத்திர தேவருடன் நாராயணதேவரும், கேசவன் தலையில் புஸ்தகங்களையும் ஒரு வீணையையும் வைத்து அழைத்துக்கொண்டு சுப்பராயனும் பிரவேசித்தல்.)

பொ.—தேவர்வாள்! நமஸ்காரம்; சௌக்கியமா?

ரகு.—யார்? பொன்னம்பலத் தேவரா? வாருங்கள்; இவர்கள் யாவர்?

நா.—ஐயா! நமஸ்காரம்; தங்களுக்கு அழகிலும் குணத்திலும் சிறந்த கௌதமியென்றொரு பெண்ணிருக்கிறாளல்லவா?

ரகு.—ஆமாம்; என் பெண் ஒருத்திக்குக் கௌதமி தேவியென்று பெயர்.

பொ.—ஐயா! நீர் திடீரென்று குறுக்காகப் பாய்கிறீரே! வழியோடே போம்.

நா.—நீர் வாயைமூடிக்கொண்டிரும்;—ஐயா, பெரிய தேவர்காள்! நான் இருப்பது உறையூர்; தங்கள் குமாரத்தியின் அழகையும் சாமர்த்தியத்தையும், நற்குணங்களையும், சாந்தத் தன்மையையும் நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன்; இப்போது நேராகப் பார்த்து அறிந்துகொள்வதற்காகவே இங்கு வந்தேன்; உமது பெண்ணுக்கு சங்கீதத்திலும் கணிதத்திலும் விற்பத்தி யுண்டென்று கேள்வி; அவைகளை விருத்திசெய்வதற்காக நான் ஒருகெட்டிக்கார உபாத்தியாயனை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். (பிரதாபருத்திரதேவரைக்

காட்டி) இவரை நீங்கள் வேலையில் அமர்த்திக் கொள்ளலாம். இவர் பெயர் கோவிந்தவாத்தியார் என்பது.

ரது.—நீங்கள் இரண்டுபேரும் வந்ததைப்பற்றி நிரம்பவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால் என் மகள் கௌதமி மாத்திரம் உமக்குத் தகுந்தவள் ஆகமாட்டாளென்பதை நினைக்க எனக்கு வருத்தமாக விருக்கிறது.

நா.—அப்படியானல், அவளை விட்டுப்பிரிய உங்களுக்கு இஷ்டமில்லைபோ விருக்கிறது; இல்லாவிட்டால் என்னைக்கண்டால் பிடிக்கவில்லையோ?

ரது.—ஐயோ! அப்படியெல்லாம் தப்பு அர்த்தம் பண்ணிக்கொள்ளக்கூடாது; இருப்பதைச் சொன்னேன். நீங்கள் இருக்குமிடம் எது? உங்கள் பெயர் என்ன?

நா.—என் பெயர் நாராயண தேவன் என்பது; என் தகப்பனார் பெயர் உறையூர் முத்துராமலிங்கத் தேவர் என்பது; அவரை அறியாதவர் இந்தத் தமிழ்நாட்டில் இல்லவேயில்லை.

ரது.—எனக்கு அவரைத் தெரியாதா? நாங்கள் இருவரும் வெகுநாளைய நண்பர்களாயிற்றே! நீர் வந்தது நிரம்ப சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

போ.—நாராயணத்தேவரே! உமது காரியத்தைச் சொல்லிவிட்டீர்; எங்கள் காரியத்தையும் சொல்லிவிடுகிறோம்; சற்று தயவு செய்யும்.

நா.—தாராளமாய்ச் சொல்லும்; நானு வேண்டாமென்கிறேன்?

போ.—தேவர்வாள்! நல்ல கெட்டிக்கார உபாத்தியாயன் ஒருவனை அழைத்துவரச் சொன்னீர்களே; அப்படியே அழைத்துவந்திருக்கிறேன்; (விஜயராகவ உடையாரைக்காட்டி) இவர் மகா கெட்டிக்காரர், காவியம், சாஸ்திரம் முதலியவற்றில் அசாமான்ய விற்பத்தியுண்டு. இவர் பெயர் சாமிநாதவாத்தியார்; இவரையும் வேலையில் அமர்த்திக் கொள்ளலாம்.

ரது.—மிகவும் நல்லது; சாமிநாதவாத்தியாரே! நிரம்பவும் சந்தோஷம்;--(சுப்பராயனை நோக்கி) ஐயா! நீர் தனியாக நிற்பதைப்பார்த்தால், அந்நியர்போலத் தோற்றுகின்றதே. வந்த காரியத்தைச் சொல்லலாமோ?

சுப்.—கேட்காமல் வந்து விட்டதற்கு மன்னிக்கவேண்டும்; இந்த ஊருக்கு நான் புதியோன்; வந்ததும், உமது இளைய குமாரத்தி ரூபலாவண்ய குணவதி வசிதேசுவரியைப்பற்றிக் கேள்விப்பட்டேன்; ஒருவேளை கல்யாணத்துக்கு இயைந்தால் பார்க்கலாமென்று வந்தேன். ஆனால் இதற்குப் பிரதிபந்தகமாக உமது மூத்தபெண்ணின் கல்யாணம் இருக்கிறதென்பது எனக்குத் தெரியாததல்ல; ஆனால் என்னுடைய குலம் கோத்திரங்களைக் கேட்டால், நீங்களே வலிய வந்து உங்கள் பெண்ணைக் கொடுப்பீர்கள். உமது பெண்ணுக்காகவே, இந்த வீணையையும், இந்தப் புஸ்தகங்களையும் கொண்டுவந்திருக்கிறேன். அங்கீகரிக்கவேண்டும்.

ரது.—உமது பெயர் என்ன?

சுப்.—விஜயராகவ உடையார்.

ரது.—எந்த ஊர்?

சுப்.—தஞ்சை நல்லநாயக உடையாரின் மகனல்லவா நான்?

ரது.—அடே, யப்பா! அந்த மகாநுபாவரைப்பற்றி விசேஷமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். நிரம்பவும் சந்தோஷம்.—(பிரதாபருத்திரரை நோக்கி) நீர் இந்த வீணையை யெடுத்துக்கொள்ளும். (விஜயராகவ உடையாரைநோக்கி) நீர் இந்த புஸ்தகங்களை யெடுத்துக்கொள்ளும். நீங்கள் பாடஞ் சொல்லிக்கொடுக்கப் போகவேண்டும்.—யாரடா, அங்கே?

(ஒரு சேவகன் வருதல்.)

அடே! இவர்களை யழைத்துக்கொண்டுபோய், குழந்தைகளிடம் விட்டுவா; இவர்கள்தாம் அவர்களுக்கு உபாத்தியாயர்; ஜாக்கிரதையாக விருக்கச் சொல்.

(சேவகன், பிரதாபருத்திரதேவன், விஜயராகவ உடையார், கேசவன் போதல்.)

அவர்கள் போகட்டும், நாம் தோட்டப்பக்கம் போய் உலாவிவிட்டு வருவோம்; நல்ல காற்று அங்கே யடிக்கும். நீங்கள் அனைவரும் சங்கோஜப்படாமல் சொந்தவீடுபோல நினைத்து நடக்கவேண்டும்.

நா.—ஐயா! தேவர்வாள்! எனக்குச் சில அவசரமான காரியங்கள் உள்ளன; வழக்கு வியாஜ்யங்கள் சில தீர்க்கப்படவேண்டியிருக்கின்றன. ஆதலால் நான் சீக்கிரமாகவே ஊருக்குப் போய்விடவேண்டும்.—நான் உமது பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொண்டால், அவளுக்குச் சீதனம் என்ன கொடுக்க வுத்தேசம்?

ரகு.—என் ஆயுளுக்குப்பிறகு எனது ஆஸ்தியில் பாதி கொடுத்துவிடுகிறேன்; இப்பொழுது ரொக்கத்தில் இருபதினுயிரம்பொன் கையில் கொடுத்துவிடுகிறேன்.

நா.—நான் போடுகிற நகை முதலியவைகளைப் பற்றி நீர் விசாரப்படவேண்டியதில்லை. ஏராளமாக என் தாயார் நகைகளிருக்கின்றன.

ரகு.—ஆமாம்; அதெல்லாம் சரிதான்; அவள் அடங்காப் பிடாரியாயிற்றே. அவளை எப்படி வழிக்குக் கொண்டுவருவீர்?

நா.—இது ஒரு பிரமாதமா? அவளுக்கு எவ்வளவு அகம்பாவம் இருக்கிறதோ அதற்குமேலாக என்னிடம் கண்டிப்பு இருக்கிறது; இரண்டு பெருநெருப்பு ஒன்ருகச் சேருமானல், சீக்கிரம் அவைகளுக்கு உணவாயிருந்தபொருள் தீய்ந்துவிடும்; சிறிய நெருப்புடன் சிறியகாற்று சேர்ந்தால் பெருந்தீயாகும்; பெருங்காற்றடித்தால் நெருப்பு அவிந்துபோகும்; நான் வெகு முரடனும் கண்டிப்பானவனும் இருப்பேன்; தானே அவள் அடங்கிப்போய்விடுவாள்.

ரகு.—இதைக் கேட்கச் சந்தோஷந்தான்; ஆனல் இரண்டொரு கடும் வார்த்தைகளைச் சகிக்க முடியுமா?

நா.—கவலைப்படவேண்டாம்; காற்று எவ்வளவு பலமாக அடித்தபோதிலும், மலைகளை அசைக்கமுடியவில்லையே.

(உடைந்த மண்டையுடன் பிரதாபருத்திரதேவர் திரும்பிவருதல்.)

ரகு.—என்ன சங்கதி? முகமெல்லாம் வெளுத்துப் போயிருக்கிறதே!

பிர.—போதும், போதும்; உமது பெண்ணைப்பற்றி இதுவரையில் நான் சாமான்யமாக நினைத்திருந்தேன்; அவள் ஒரு போர்வீரனுகலாம்போலிருக்கிறது. எப்போதும் முகத்தைச் சுளித்துக்கொண்டிருப்பது நன்றன்று என்று மாத்திரம் சொன்னேன்; உடனே ஆவேசம் வந்தவள்போலச் சீறி எழுந்து, என்கையிலிருந்த வீணையைப்பிடுங்கி, அதனலேயே என் மண்டையில் ஓங்கியடித்துவிட்டு, அடித்ததற்கு வட்டியாக ஓயாமல் வாயில் வந்தபடியெல்லாம் திட்டினுள். எனக்குப் பயமாகவிருந்தது; ஓடிவந்துவிட்டேன்.

நா.—ஆகா! பேஷ், பேஷ்! அவள்மீது எனக்குள்ள காதல் முன்னையைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாகிவிட்டது; அவளுடன் வார்த்தையாட மிகுந்த ஆவலுள்ளவனுனேன்.

ரகு.—போனது போகட்டும்; நான் அழைத்துக்கொண்டு போகிறேன், வாரும்; சின்னக் குழந்தைக்குப் பாடஞ்சொல்லிக்கொடும்; அவள் நன்ருய்ப் படிப்பாள்; நாராயணதேவரே! நீர் எங்களுடன் வருகிறீரா, நான் கௌதமியை இங்கே உம்மிடம் அனுப்பட்டுமா?

நா.—நிரம்பவும் சந்தோஷம்; அப்படியே. அனுப்புங்கள்; இங்கேயே இருக்கிறேன்.

(ரகுநாததேவர், பொன்னம்பலத்தேவர், சுப்பராயன், பிரதாபருத்திரதேவர் போதல்)

நாராயணதேவர்.—(தனிமையில்). அவள் வந்ததும், இனிய வார்த்தைகளால் மயக்கிவிடவேண்டும்; வைதாளானல், குயில் கூவுவதுபோலப் பேசுகிருள் என்று நேர்படச் சொல்லுகிறேன்; கோபக்குறியுடன் பார்ப்பாளானல், அன்றலர்ந்த தாமரைப்பூப்போல முகமிருக்கிறதென்கிறேன்; ஊமையைப்போல வார்த்தை யொன்றும் பேசாது மௌனமாகவிருப்பாளானல், சரமாரியாய்ப் பிரசங்கிப்பதுபோல் பேசுகிருள் என்று ஸ்தோத்திரம் செய்கிறேன்; ஓடிப்போவென்று சொல்வாளானல் இன்னும் ஒருவாரம் தங்கியிருக்கச் சொன்னற்போல அவளுக்கு நன்றி கூறுவேன்; கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன் என்பாளானல், முகூர்த்த நாள் என்றைக்கு வைத்துக்கொள்ளுகிறதென்று கேட்கிறேன்—இதோ வந்து விட்டாளே! இனி ஜாக்கிரதையாக விருக்கவேண்டும்.

(கௌதமிதேவி வருதல்.)

இந்துலேகை

(ஒரு மலையாள நாவல்)

இரண்டாவது அத்தியாயம்.

(முன் தொடர்ச்சி)

இந்துலேகை கிருஷ்ணமேனவனுடன் தாமசித்துக்கொண்டிருந்த காலத்திற்கூட, அவன் மாதவனை அடிக்கடி காண்பதுண்டு. கிருஷ்ணமேனவனுக்கு மாதவனிடத்தில் அத்தியந்த பிரீதி இருந்தது. மாதவன் மிக்க புத்திசாலியான வாலிபனென்று பலதடவையும் பலரோடும் அவர் பேசிக்கொண்டிருக்கும்போது சொல்வதை இந்துலேகை கேட்டிருந்தாள். ஆனால் அதற்குமேல் மாதவனைக் குறித்து அவர் அதிகமாய் ஒன்றும் பேச அவள் கேட்டதில்லை. மாதவன் இந்துலேகைக்குத் தகுதியானவனா யிருக்கக்கூடுமென்று கிருஷ்ணமேனவன் மனதில் எண்ணியிருந்தாரோ இல்லையோ அது ஒருவருக்கும் நிச்சயமாய்த் தெரியாது. கொச்சு கிருஷ்ணமேனவன் காலஞ்சென்றதன்மேல் இந்துலேகை பூவரங்கில்வந்து வசிக்கத் தொடங்கினது முதல்தான், அவளுக்கும் மாதவனுக்குமிருந்த நட்பு விசேஷமாய் வளர்வதாயிற்று. மாதவன் சென்னப்பட்டணத்திலிருந்து ஊருக்குத் திரும்பிவரும் சமயங்களில் எப்போதும் அவ்விருவரும் தமக்குள் பேசியும் விளையாடியும் களித்தும் உல்லாசமாய்க் காலங்கழிப்பார்கள். இப்படி சிலகாலங் கழிந்தபின், அவர்களுக்குள் பரஸ்பரம் காதலுண்டாகத் தொடங்கியது. ஆனால் அதை ஒருவரேனும் செய்கையாலாவது இங்கிதத்தாலாவது சிறிதாகிலும் வெளிப்படுத்தினார்களில்லை. மாதவனுடைய படிப்புக்கு எங்கே விக்கினம் உண்டாய்விடுமோவென்று பயந்து இந்துலேகை தன் ஆசையை வெளிப்படையாய்க் காட்டவில்லை. மாதவனும் தன் ஆசையை வெளிப்படுத்தாமல் மௌனமாயிருந்ததற்குக் காரணம் முதலில் லஜ்ஜையும், பிறகு, தனக்கு இந்தக்காரியம் பிரயாசையில்லாமல் கைகூடுமோவென்ற நம்பிக்கைக் குறைவுமேயாம். அப்படி அவன் சங்கிப்பதற்குத் தக்க ஆதாரமில்லாமற் போகவில்லை. ஏனெனில் இந்துலேகையானவள் ஸ்திரீகளுக்குட் சிறந்த ரத்தினமென்று அவளுடைய பெயரும் புகழும் மலையாள நாடெங்கும் பரவியிருந்தது. அதையறிந்த மகாராஜாக்கள் முதல் பலரும் இந்தக்குட்டியை மணக்கவேண்டுமென்று ஆவல்கொண்டிருந்தார்களென்ற சங்கதி பஞ்சுமேனவனுக்கு அடிக்கடி வந்துகொண்டிருந்த கடிதங்கள்மூலமாக மாத்திரமல்லாமல் பூவரங்கிலுள்ளவர்கள் தமக்குள் இதைப்பற்றிப் பேசிக்கொள்ளும் வதந்திகளாலும் மாதவனுக்குப் பரிஷ்காரமாய்த் தெரிந்திருந்தது. விவகாரம் இப்படியிருக்கையில் கேவலம் ஸ்கூல் பிள்ளைகளாகிய தனக்கு இது எப்படி சாத்தியமாகப் போகிறதென்று அவன் சிலசமயம் தனக்குள்ளேயே தர்க்கிக்கலானான். முதலில் அவனுக்கு இவ்வாறே யோசனையுண்டான போதிலும், படிப்படியாய் இந்துலேகையினிடம் அவனுக்குக் காதல்வளர்ந்துகொண்டேவந்தது. ஆகவே அவன் சென்னைமாநகரத்திலிருந்து ஊரில் வந்திருக்கும்போதெல்லாம் பகல் முழுவதும் இந்துலேகையுடனேயே கழிப்பான். அவர்கள் ஒன்றாகப் படித்தும் பாடியும் பியானோ வாசித்தும் சதுரங்கமாடியும் காலத்தை விநோதமாய்ப் போக்கி, இரவுவேளையில் பிரியவேண்டிவரும்போது, இவ்வளவு சீக்கிரத்தில் பகற்பொழுது போய்விட்டதேயென்று அவ்விரு காதலரும் விசாரமுறுவார்கள். இவ்வாறு சிறிதுகாலம் மாதவன் சென்னப்பட்டணத்திலிருந்து ஊருக்குவந்திருக்கும் சமயமுழுவதும் அவ்விருவர்களுக்குள்ளும் பரஸ்பரம் விநோதத்திலும் வேடிக்கையிலும் சரசசல்லாபத்திலும் கழிந்துகொண்டிருந்தது.

இந்துலேகைக்கும் மாதவனுக்கும் பரஸ்பரமிருந்த ஒருவிதமான உறவின்முறை ஒருபுறமிருக்க, ரூபசௌந்தரியத்திலும் கல்வியறிவிலுங்கூட அவர்கள் சிறந்து அந்யோந்யப் பொருத்தமுள்ளவர்களா யிருந்தபடியால், அவ்விருவரும் இவ்வாறு ஒருவர்மேலொருவர் ஆசைவைத்திருந்த தனது ஏதோ அசூயைக்குணமுள்ள சிலருக்குத்தவிர மற்றெல்லோருக்கும் மகிழ்ச்சியை யளித்தது. ஆனால் இந்துலேகை மாதவனுக்கு மனைவியாய்க் கிட்டுவளோவென்று பின்னும் ஒருசங்கை எல்லோருக்கும் உண்டாயிற்று. மலையாளநாட்டின் சம்பிரதாயங்களை யறிந்தவர்களுக்கு இந்த சங்கையுண்டாவது சகஜமேயென்பது தோற்றுமற்போகாது. ஏனெனில் திருவாங்கூர் மஹாராஜா (பொன்னுதம்புரான்)கூட இந்துலேகையைத் தம் பட்டமஹிஷியாக்கிக்கொள்ள வேண்டுமென்று ஆலோசித்துக்கொண்டிருந்தாரென்று அக்காலத்தில் பஞ்சுமேனவன் வாயிலிருந்தே வெளியாயிற்று. ஆகவே மேலேசொன்னபடி சங்கை உண்டானதில் அற்புதமொன்றுமில்லையல்லவா?

இப்படி யிருக்கையில், நம்முடைய கதை ஆரம்பிப்பதற்குமுன்பு மாதவன் பி. எல். பரீக்ஷைக்குப் போனான். பரீக்ஷை முடிந்தவுடனே, அவன் ஊருக்குத் திரும்பிவந்து, வழக்கம்போலவே, இந்துலேகையுடன் வேடிக்கை விநோதங்களில் காலங்கழித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு இந்துலேகையின் மேலுள்ள காதலானது நாளுக்குநாள் விருத்தியடைந்து கடைசியில் பொறுக்கமுடியாத காமஜ்வரமாய்க் காயத்தொடங்கியது.

"திருவாங்கூர் மகாராஜாவானா லென்ன? ராஜாவானால் எனக்காகவேண்டியதென்ன? என் இந்துலேகை எனக்குத்தான் பெண்டாட்டியாவளேன். அப்படி யாகாவிட்டால் என்னால் உயிர்வைத்திருக்கவே முடியாது" என்று மாதவன் தனக்குள்ளேயே வெதும்பினான். அது முதல் அவனுக்கிருந்த சங்கை நீங்கி திடநிச்சயம் அவன்மனதில் குடிகொள்ளலாயிற்று.

இந்த சமயத்தில் இந்துலேகையின் மனதில் என்னென்ன எண்ணங்கள் உண்டாயிருக்கின்றனவோவென்றறிய மாதவன் பெரிதும் ஆவலாயினான். அவனிடத்தில் தோன்றிய இந்தப் புதிய காதலுணர்ச்சியைக் கண்டு இந்துலேகையும் முன்னிலும் அதிகமாக அவன் மேல் ஆசைகொண் டிருக்கக்கூடுமாயினும் தன் மனோபாவம் அவனுக்குத் தெரியும்படி அவள் எத்தகைய குறிப்பாலும் சிறிதும் காட்டிக்கொள்ளவில்லை. அவள் எப்போதும்போலவே உல்லாசமாயும் உற்சாகமாயு மிருந்துகொண்டு வழக்கம்போலவே அவனோடு படிப்பதும் பாடுவதுமாயிருந்தபடியால் அவள் தன்னிடம் நடந்துகொண்ட மாதிரியினின்றும் யாதொன்றும் கண்டுகொள்ள மாதவனால் முடியவில்லை. மாதவன் மாத்திரம் கள்ளங்கவடற்ற சுபாவமுடையவனானபடியால் தன் மனோபாவங்களை இனிச் சிறிதேனும் மறைத்துவைக்க அவனாலாகவில்லை. அம்மனோபாவங்கள் இந்துலேகைக்கு எவ்விதத்திலும் அருவருப்பை யுண்டாக்கவில்லையென்று கருதக் கூடுமாயினும் மாதவன்மேல் தனக்கிருந்த இரகசியமான காதலை அவனுக்குத் தெரியவொட்டாமல் வெகு ஜாக்கிரதையாக மறைத்துவைத்தாள்.

இவ்வாறிருக்கையில், மாதவனும் இந்துலேகையும் ஒருநாள் சதுரங்கம் விளையாடிக்கொண்டிருக்கும்போது, மாதவன் தான் வைக்கவேண்டிய காயைக் கையிலெடுத்துக்கொண்டு அதற்குமேல் விளையாடாமல் எதைப்பற்றியோ நினைத்துக்கொண்டு இந்துலேகையின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கலாயினான்.

"என் ஆடவில்லை? நீ ஆடவேண்டியதாயிற்றே?" என்று கேட்டாள் இந்துலேகை,

அதற்கு விடையாய்: "ஆடுவதில் இன்றென்னவோ எனக்கு அவ்வளவு புத்தி செல்லவில்லை" என்றான் மாதவன்.

"இதுவரையிலும் உன் எண்ணங்கள் எங்கெங்கேயோ அலைந்துகொண்டிருந்தன. ஒருவேளை உன் பரீட்சையின் முடிவைப்பற்றி கவலைப்படுகிறாய்ப்போலிருக்கிறது. ஆனால் அதைப்பற்றி இப்போது நினைப்பதில் பிரயோஜனமில்லை. வீணாக மனதுக்கு வேதனை வைத்துக்கொள்ள வேண்டாம்" என்றான் இந்துலேகை.

"பரீட்சையைப்பற்றி நான் நினைக்கவேயில்லை. ஒருவனுக்கு சுகமுண்டாவதற்கும் துக்கமுண்டாவதற்குமான காரணங்கள் அவன் வசத்திலில்லாதிருக்கும்போது அவன் எப்படி வேதனைப்படாமல் மனதை சுவாதீனமாக்கி வைத்துக்கொள்ள முடியும்?" என்றான் மாதவன்.

"வைக்கத்தான் வேண்டும். அதில்தானே புருஷனுடைய யோக்கியதை இருக்கிறது."

"ஸ்திரீயின் யோக்கியதையோ?" என்றான் மாதவன்.

"மனதுக்கு நிம்மதியில்லாததால் ஆட்டத்தில் புத்திசெல்லவில்லை யென்று இப்போது சொன்னது ஸ்திரீயல்லவே. அப்படி சொன்னது யாரோ மாதவனென்னும் பெயருடைய புருஷனென்று நான் நினைக்கிறேன்" என்றாள் இந்துலேகை.

"ஒருவேளை இந்துலேகையால் தான் எப்போதும் மனதை சுவாதீனப்படுத்தி வைத்துக்கொள்ள முடியும்போலும்" என்றான் மாதவன்.

"நான் அதை ஒருபோதும் பரீட்சித்ததில்லை. மனது சுவாதீனத்திலில்லாதபோது தானே அதை சுவாதீனப்படுத்த முயலவேண்டும். இதுவரையிலும் என்மனம் அப்படி என் சுவாதீனத்துக் குட்படாமல் போகவில்லை. இந்தவிதமாய் நீ இவ்விஷயத்தை யோசித்துப் பார்க்கும் பட்சத்தில், மனதை ஸ்வாதீனப்படுத்தவேண்டிய பிரயத்னத்தை இதுவரையிலும் நான் செய்யவேண்டிய பிரமேயமே ஏற்படவில்லையென்று தெரியவரும்" என்றாள் இந்துலேகை.

(இன்னும் வரும்.)

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

புருஷார்த்தங்கள்.—உலகில் உள்ள மனிதர்களால் விரும்பக்கூடியவைகளை எல்லாம் ஒழுங்குபடுத்தினோக்கின் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கனுள் அடங்கும். ஆகையால் இவை நான்கனுக்கும் சதுர்வித புருஷார்த்தங்கள் என்று பெயர். (அர்த்தம் என்ற பதம் இதே பொருளில் வித்தியார்த்தி அர்த்தார்த்தி என்பவைகளில் காணப்படுகிறது.) இவற்றிற்கு முறையே அறம், பொருள், இன்பம், வீடு என்று தமிழில் பெயர்.

இவைகளுள் தர்மம் அல்லது அறம் என்பது மனு தர்மசாஸ்திரம், ஸ்மிருதிகள் முதலிய விதிவிலக்கு சாஸ்திரங்களில் ஒவ்வொரு ஜாதிக்கும் செய்யத்தக்கவை என்று விதித்துள்ளவைகளைத் தவறாது அந்தந்த சாதியார் செய்வதும், செய்யத்தகாதவை என்று விலக்கியுள்ளவைகளைச் செய்யாமல்விடுவதுமேயாம். அர்த்தம் அல்லது பொருள் என்பது முற்கூறியதர்ம வழியில் இருந்து கொண்டு ஸம்பாதிக்கும் பொன், தான்யம் முதலியன. காமம் அல்லது இன்பம் என்பது தர்மவழியில் ஸம்பாதித்த பொருளை தர்மசாஸ்திரங்களில் காட்டியிருக்கும் வழிகளின்படி உபயோகப்படுத்தி அடையும் இஹலோகஸுகங்களேயாம். இவைகள் எல்லாவற்றையும் தாழ்ந்தவையெனத் துறந்து உலகப்பற்றுகளிலிருந்து விடுபட்டு அடையப்படும் நிரதிசய ஆனந்தநிலைக்கு மோக்ஷம் அல்லது வீடு என்று பெயர். நீதிநூல்கள் எழுதியிருக்கும் பெரியோர்கள் இவைகளையே தம்நூலுக்குப் பாகங்களாகக் கொண்டு விவரித்திருக்கின்றனர். அவர்களுள் தெய்வப்புலமைத்திருவள்ளுவனார் தாம் எழுதிய திருக்குறளில் தர்மம் அல்லது அறம் என்பதை ஜாதிகள்தோறும் பேதப்படும் விதிவிலக்கின்படி அனுஸரித்து நடத்தல் எனக் கொள்ளாது எல்லோருக்கும் பொதுவாயும் அங்கீகரிக்கத்தக்கவையாயும் உள்ள கார்ஹஸ்தியம் அல்லது இல்லறம், ஸந்நியாஸம் அல்லது துறவறம் என்று கொண்டு விவரித்திருக்கின்றனர். மேலும் மோக்ஷம் அல்லது வீடு என்பது

> 'சிறுகாலையிலா நிலையோதிரியா
> குறுகா நெடுகா குணம் வேறுபடா
> வுறுகால் கிளர்பூதமெலா முகினும்
> மறுகாநெறி

ஆதலால் அதைப்பற்றி நேராக நூல்களில் சொல்லமுடியாதாயினும் அதை துறவறம் என்றதுள் காணவகையாகச் சொல்லிருக்கிறார். ஆதலால் புருஷார்த்தம் நான்காயிருப்பினும் அவற்றை திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பாகங்களுள் அடக்கி இருக்கின்றது. இது போலவே மற்றைய நீதிநூல்களிலும். புருஷார்த்தங்களின் ஸ்வரூபத்தை ஔவை என்ற கவிமாது

> 'ஈதலறம், தீவினை விட்டீட்டல் பொருள், எஞ்ஞான்றும்
> காதலிருவர்கருத்தொருமித்—தாதரவு
> பட்டதே யின்பம், பரனை நினைந்திம் மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு.

என்று ஒருபாட்டில், தடையின்றி கொடுத்தலே தர்மம், நல்லவழியில் ஸம்பாதிப்பது அர்த்தம். இருவர் மனம்ஒத்து வாழ்தலே இன்பம், பரம்பொருளை எண்ண, இம்மூன்றிலிருந்து விடுபடுவதுவே மோக்ஷமென்று சுருக்கமாகச் சொல்லிவிட்டாள்.

மேலும் தர்மத்திற்கு இம்மை, மறுமை, வீடு முதலிய மூன்றையும் கொடுக்கும் சக்தியும்; பொருளுக்கு இம்மை, மறுமை இவ்விரண்டையும் கொடுக்கும் சக்தியும்; தர்மம் இன்பம் ஆகிய இவைகளுக்கு ஸஹாயமாகும் சக்தியும், இன்பத்திற்கு இம்மை ஒன்றைக்கொடுக்கும் சக்திமாத்திரமும், உண்டு. இவைகளிலிருந்து விடுபடுவதே வீடு ஆகையால் புருஷார்த்தங்களை அறம், பொருள், இன்பம், வீடு என்ற ஒழுங்கில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இப்புருஷார்த்தங்களை அடைய முக்கிய ஸாதனங்கள் யாவை? அறத்தை நன்குநடத்த நல்லொழுக்கமும், பொருளை ஸம்பாதிப்பதற்கு உண்மையாக உழைப்பதும், இன்பத்தை ஸம்பாதிப்பதற்கு கிடைத்தபொருளை நியாயமார்க்கங்களில் செலவிட்டு, வியஹாரங்களில் அறநெறிதவறாது நடப்பதும், வீடு அடைவதற்கு பரம்பொருளது உயர்வையும், உலக விஷயங்களின் தாழ்வையும் அறிதலுமே தகுந்த ஸாதனமாகும். ஆனால் இவைகள் எல்லாவற்றிற்கும் முக்கியஸாதனம் கல்வி ஒன்றே. நன்றாக கல்விப் பயிற்சி செய்பவர்.

> 'கற்க கசடற, கற்பவைகற்றபி
> னிற்க வதற்குத்தக'

என்ற கோட்பாடை மறவாதிருப்பார்களாயின் அவருக்கு நான்கு புருஷார்த்தங்களும் தடையின்றி ஸித்திக்கும். இதுபற்றியே குமர குருபரஸ்வாமிகளும் தமது நீதிநெறிவிளக்க ஆரம்பத்தில்,

> 'அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
> * * *
> கல்வியினூங்கில்லைச்
> * * *
> சிற்றுயிர்க்குற்றதுணை'

என்று வற்புறுத்தியிருக்கிறார்.

கடவுள் தியானம்.—திரை செறிகடற் சூழ்ந்த இப்பூவுலகத்தின் கண்ணுள்ள சராசரப் பிரபஞ்சங்களனைத்தும் படைத்து அவைகட்குரிய வினைப்போகங்களை யூட்டி யாட்டுபவர் கடவுளேயாம். கொஞ்ச தூரத்திலுள்ள அக்னி நமது கண்ணுக்குப் பிரத்தியக்ஷமாகப் புலப்படா விடினும் அவணிருந்து மேலே கிளம்பும் புகையினல் அங்கு அக்னியிருத்தல் வேண்டுமென்று நாம் ஊகித்தறிவதுபோலவும் நாம் காற்றை நேரே பார்க்கமுடியா விடினும் அதன்ஸ்பரிசவுணர்ச்சியினனும்செய்கையினனும் அத்தகையப் பொருள் ஒன்றிருத்தல் அவசியமெனக் கருதுதல்போலவும் நாம் கடவுளைக் கண்கூடப் பார்க்காவிடினும், அவரின் ஆக்கினையினலேயே இவ்வூரிலுள்ள சேதன சேதனப்பொருள்கள் இயங்கிவரும் விசித்திரத்தினல் அப்படிப்பட்டப் பொருளொன்று இருத்தல் வேண்டுமென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஐயமற துணிவுடனறிந்து கொள்ளலாம். நாம் ஒரு புத்தகத்தை அசசியற்றக் கருதி அதைக் காகிதத்திலெழுதி ஓர் அச்சியந்திரசாலையில் ஓர் புறத்து வைத்துவிட்டு வருவோமாயின், அப்புத்தகத்திற்குவேண்டிய எழுத்துக்கள் யாவும் குறைவின்றி அவண் கிடப்பினும் எவ்வாறு அவையாவும் புத்தகரூபமாக தாமே யமையாதவாறு போல் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் எனும் பஞ்சபூதங்களும் இவற்றின் ரூபமாகிய மற்றப் பொருள்களும் இவ்வுலகத்திலே குறைவின்றி நிறைந்திருப்பினும் சர்வஞ்ஞராகிய கடவின் ஆணையின்றி அவைகள் ஒருபொழுதும் ஒழுங்காக நடவா. நாம் வசிக்கின்ற இவ்வுலகமும் இதையொப்ப கணக்கிலாப் புவனங்களும் ஆகாயத்திலே யந்தரமாய் இயங்குவதும் அதிக வாழமும் விஸ்தீரணமு முள்ள கடல் இப்பூமண்டலத்தைநாற்புறமுஞ் சூழ்ந்திருந்தும், யாதொருவித வரம்பின்றி தனக்கு வரையறுக்கப்பட்டுள்ள வெல்லைக்குட்பட் டிருப்பதும், சூரியசந்திர கிரகங்களியாவும் தத்தமக்கு வரையறுக்கப்பட்ட காலக்கிரமத்தில் இம்மிவழுவாது ஒழுகிவருவதும், நாமும், இன்னும் மற்றப் பிராணிகளும் அவ்வவ்விடத்தில் தத்தமக்கேற்ற வழிகளினின்று சுகமாய் வாழ்வதற்குத் தக்க சாதனங்கள் அமைந்திருப்பதும் கடவுளின் கருணையினனும் வல்லமையினனுமே.

அத்தகைய கடவுளுக்கு எட்டுக்குணங்களுள. அவையாவை யெனின்:—தன்வயத்தனதல் (சுவதந்திரத்துவம்) தூயவுடம்பினனதல் (விசுத்ததேகம்) இயற்கை யுணர்வினனதல் (நிராமயான்மா) முற்றுமுணர்தல் (சருவஞ்ஞத்துவம்) இயல்பாகவே பாசங்களினீங்குதல் (அநாதிபோதம்) பேரருளுடைமை (அலுப்தசத்தி) முடிவி லாற்றலுடைமை (அநந்த சத்தி) வரம்பி லின்பமுடைமை (திருப்தி). அல்லாமலும் அணிமா,மகிமா, கரிமா, லகிமா,பிராப்த்தி, பிராகாமியம், ஈசிதை வசிதை முதலிய வெட்டும் எண்குணங்களென்றும் கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், கடையிலாவின்பம், நாமமின்னம், கோத்திரமின்னம், ஆயுவின்மை, அழியாவியல்பு முதலிய வெட்டும் எண்குணங்களென்றும் கூறவாறுமுளர்.

தெய்வபக்தியுள்ள வொருவனுக்கும் அஃதில்லா வொருவனுக்குமுள்ள பேதம் கண்ணுள்ளவனுக்கும் இல்லாதவனுக்கு முள்ளபேதமே. எழுத்துக்கள் எவ்வாறு அகரத்தை முதலாகவுடையனவோ அது போல் உலகம் ஆதிபகவனை முதலாகவுடையது. கடவுளைத் தொழாவிடின் எத்துணைக் கல்விமானயினும் பயனில. விருப்பு வெறுப்பிலா கடவுளைத் தியானித்தவர்கள் என்றும் சுகமுற்றிருப்பார்கள்; அல்லாமலும் பரலோகவின்பத்தை யடைவார்கள்.

நாம் சுகத்தை யனுபவிக்கச் செய்வதும், துக்கத்தை யனுபவிக்கச் செய்வதும் கடவுளே யானதினல், சுகமனுபவிக்கும் போது கடவுளிடத்து நன்றிபாராட்டுவதுபோல் துக்கமனுவிக்கும் போதும் வந்தனை வழிபாடுகள் செய்து நன்றிபாராட்டுவது நமது கடமையே. துன்பம்நேரிட்டபோது கடவுளை நிந்திப்பது மூடத்தனமே. அத்துன்பங்கள் யாவும் நம்முடைய மாசையகற்றவே ஆகையான் நாம் என்றும் கடவுட்டியானஞ் செய்யவேண்டும்.

∴

அச்சாணி அன்னதோர் சொல்.—'வேதாந்தம் ஒரு சிறந்த சாஸ்திரமென்று பலர் கூறுகின்றனர். ஆனல் என்னமோ தெரியவில்லை, என்மண்டையில் அது ஏறவேமாட்டேன் என்கிறது,' என்றார் ஒருபிரபு மிகவும் அலக்ஷியமாக. அவரோ, மேல் மேலும் தமக்கு உலகசசிறப்பு வந்து கைகூடுமென்ற எண்ணத்தோடு ஸுகத்தில் மூழ்கிக் கிடப்பவர். இதைக் கேட்டுக்கொண்டு அருகாமையிலிருந்த அவர் ஸ்நேகிதன் ஒருவன் 'உமக்கு வேதாந்தம் படிக்கும்படியான நிலை என்னய்யா வந்துவிட்டது! அதுதான் உமக்கு அது விளங்கவில்லை' என்று ஆணி அறைந்தாற்போல் மறுமொழி கூறினன். உண்மையிலேயே வீண் மனோராஜ்யமாம் உலக இன்பங்களில் மூழ்கித்ததளிக்கும் பாமரர்க்காக வேதாந்தம்உண்டாகவில்லை. அவைகளின் நிலையாமையையும் இழிவான தன்மையையும் அறிந்தவருக்காகவே உண்டானது அச்சாஸ்திரம்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பழமொழி. தினை அளவு நல்லது செய்தால் கூட அதை பனை அளவாகக் கொள்வது பெரியோர் சுபாவம். நன்றி செய்தவரை மதியாதிருப்பது மூடத்தனமல்லவா? அது பெருமை ஆகுமா? தெரிந்தும், செய்தவரை அலட்சியம் செய்வது பெரும் தப்பிதமாகிறது. "அந்தமாதிரி நான் செய்யமாட்டேன். எனக்கு சௌக்கியமுண்டாக்கிய என் தலைவனுக்கென்றும் காலாலிட்ட வேலையை தலையாலே நான் செய்வேன். அவர் எனக்கு வேண்டியதைக் கொடுக்கின்றார். அவருடைய பெருமையால்தான் நிலைத்திருக்கிறேன். அவருக்கு என்றுங் கடமைப்பட்டவளாயிருக்கிறேன். அவருக்கு செய்யவேண்டியதைக் காட்டிலும் எனக்கு வேறு என்ன வேலை. என் கொழுநனுக்குவேண்டியவெலாம் நானே செய்வேன். நானே ஆதரிப்பேன். இது நிச்சயம்" என்று எவள் மனதிலுதித்தவ்வாறு நடக்கிறாளோ அவள் பெருமை அடையாமலிருக்க முடியுமோ?

***

பெரியோரது தரிசனமாத்திரமே உலகத்திற்கு சுகமுண்டாகிறது. பெரியோரில்லாத நாட்டுப்பெருமை கெடுகிறது. நாடுகெட நிலமும்கெடுகிறது. ஜனங்களும் கீழ்மை அடைகிறார்கள். நியாயம் நிலைதவறி போகின்றது. இதற்கெல்லாம் ஆதிகாரணம்—பெரியோர் இல்லாம லிருப்பதல்லவா? பெரியோரிருத்தலும் ஜனங்களின் வளர்க்கையினாலுண்டாகிறது: வளர்த்தலும் தாய்த்தந்தை வேலை. அதிலும் தாய்தான் தன் மகனிடத்து அதிகமாகப் பழகுவது. ஆனதினால் தாயினால்தான் சிறுவரெல்லாம் பெரியோராகவேண்டும். ஒவ்வொரு பெண்டிரும் இதைக் கொஞ்சம் கவனமாகயோசிப்பாராக!

***

"பேய்கொண்டாலும் கொள்ளலாம் பெண்கொள்ளலாகாதே" என்று பாடினார் ஒருகவிராயர். இம்மாதிரியானப் பட்டம் வந்ததைக் குறித்து சரியானப் பெண்கள்கேட்டும் பிழைத்திருப்பாரென்பது சந்தேகம். "சரியாக நடந்து நல்லபெயர் எடுத்து வாழ்வதுதான் எனக்கு பெருமை. நான்வந்த குலத்திற்குப் பெருமை. நான் புகுந்த வீட்டிற்கும் பெருமை" என்று எவள்மனதிலுதிக்கிறதோ அவள்தான் சரியான பெண்.

தண்டவாளத்தின் மேல் சென்றால் தான் புகைவண்டி சரியாக ஓடும். இல்லாவிடில், தடைப்பட்டு நின்றுவிடுவதும் அல்லாது உள்ளிருப்பவர்களுக்கும் கஷ்டத்தை உண்டாக்குகிறது. தண்டவாளமும் சக்கிரமும் ஒத்திருந்தால் எல்லார்க்கும் சௌக்கியம்—அதுபோல், வீட்டுவேலை முதலியவைகளைச் சரியாய்ச் செய்துக்கொண்டிருந்தால் பெண்களும் சரியான வாழ்க்கையை அடைவார்கள், இல்லாவிடில், தானுங்கெட்டு, தன்னை பெற்றார் உற்றார் பேரையும் கெடுக்கிறார்கள். அவ்வாறு நடவாமல் சரியாக நடப்பதே பெண்டிர்களுக்கு முதல்முதல் வேலை.

***

கவரிமான் ஒரு மயிரை இழந்துவிட்டால் கூட பிராணனை விட்டுவிடுகிறது. மானத்தை இழப்பதைக் காட்டிலும் பிராணனை மாய்த்துக்கொண்டுவிடலாம். இது எல்லார்க்கும் சம்மதந்தான். பெண்டிருக்குமப்படியே. தன் மானம் போகாமல் பாதுகாத்துக் கொள்வதுதான் அவர்க்கு முதல்வேலை. தன் கணவனுக்கு ஒரு அவமானமுண்டாகும்படியானக் காரியத்தைத் தான் செய்யக்கூடாது. அவனுடைய மானம்தான் இவளுக்கு மானமாகிறது. அவனுக்கு அவமானம் வாராமலிருக்கும்படி நடக்கிறதுதான் இவளுக்கு மானமாகிறது.

***

"பானை தொட்டவள் பாக்கியவதி" என்றொரு பழமொழியுண்டு, அதாவது பானையைத் தொடுவதாவதென்ன? பானை - அதாவது மண்பானை அல்லது வெண்கலப்பானை, அது எதுவானாலுஞ் சரி - பானையில் அன்னஞ்சமைத்து தன் கணவன் முதலியோர்க்களித்தல். அதாவது தான் புக்கவீட்டில், தன்வீடென நினைத்து, கணவன் முதலியோருக்கு சோறு சமைத்திட்டு வாழ்தல். அவ்வாறு வாழ்வது அவளுக்கு பெருமை ஆனமையால் அவள் பாக்கியவதி ஆகிறாள். அவளுக்குப் பெருமைதான் செல்வம். செல்வம் வேறு என்ன வேண்டும்?

***

"மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்" என்றாள் ஔவை. பெண்ணும் தன் கணவனை மதியாதவர்வீட்டு நிழலில்கூட நிற்கக்கூடாது. அப்படி நின்றால் தன் கணவன் மனதிற்கு ஆயாசமுண்டாகும். தன் சௌக்கியமும் குறைந்துவிடும். ஆனதினால் தனக்குக் கஷ்டமுண்டாகும்படி காரியஞ் செய்வானேன்?

பனைமரத்தின்கீழ் பால்குடித்தாலும் கள்குடித்தானென்பது சுபாவமல்லவா? அது தெரிந்தும் அப்படி செய்வது தப்பல்லவா? தனக்கலுவலில்லாதவிடத்தில் ஓர் பெண் சென்றாலும் சந்தேகத்திற்கிடமுண்டாகும். அதை விட்டுவிடுவதே அவளுக்கு பெருமையை உண்டாக்கும்.

* * *

கல்லைக்குத்தினால்கைநோகுமேயொழியவேறில்லை; ஆனதனால் கெட்டவர்களை திருத்தவ தசாத்திய மென்பார் சிலர். ஆனால் கல்லையும் குத்தும் வழியால் குத்தினால் அழகமைந்த விக்கிரகங்கள் உண்டாகின்றன. ஆனதினால் கெட்டவன் திருந்தமாட்டான் என்பது சரியல்ல. அவனைத்திருத்தும் வழியாய்த் திருத்தவேண்டும். பெண்டிருக்கு மப்படியே. சரியாய் நடவாதவரை சரியான வழிக்குக் கொண்டுவர முயல்வதுதான் பத்தினிக் கழகு.

* * *

தான் சௌக்கியமாயிருப்பது பெருமை ஆகமாட்டாது; அநேகரை சௌக்கியமடையும்படி செய்வது தான் பெருமை ஆகும்.— தான் பதிவிரதையாக இருப்பது பெரிதல்ல. எல்லாரையுமப்படி இருக்கச்செய்வது உயர்ந்த பெண்களுக்கு பெருமை. இது அவர்களுக்கு தர்மம் என்க.

* * *

கோடுபோட்ட கட்டமில்லாமல் சதுரங்கமெப்படி ஆடமுடியும்? முடியாது. அதுபோல, தன் நேசபாசங்களைச் செலுத்த ஒரு லக்ஷியமில்லாமலெப்படி இருக்கமுடியும்? கணவனென்னும் லக்ஷியமல்லாமல் பதிவிரதையின் லக்ஷணமெப்படி இருக்கும்? இருக்கமுடியாது.

* * *

ஆற்றுமணலை வெறும்பொடியாகிய கற்களின் கூட்டமென்று எண்ணாமல் தோண்டினால், எவ்வளவு ஆழம் தோண்டுகிறோமோ அவ்வளவு அதிகமாக சுத்தமான தீர்த்தம் தோன்றி நமது தாகத்தை அடக்குகிறது. பெண்ணும் தன் கணவனை வெறும் ஆளென எண்ணாமல் அவன் சொற்படிநடந்து அவன் குணங்களை ஆராய்ந்தால் அவனிடத்து ஒரு தெய்வீகத் தன்மையைக்கண்டு அதனால் ஆனந்தமடைகிறாள். இதுதான் பதிவிரதையின் சுபாவம்.

* * *

விவாகம் பலபேர் பல எண்ணங்களோடு செய்துகொள்ளுகிறார்கள்; இதைப்போ விழிவானதெதுவுமில்லை. சிலர் ரூபலாவண்யத்தை அநுபவிக்கச் செய்துகொள்ளுகிறார்கள்; இது மத்தியமம். சிலர் குணங்களைப்பார்த்து பெண்ணை வரிக்கின்றனர்; இதுதான் உத்தமம். பெண்ணானவள் பொறுமையும் பெருமையுமுடையவளாக இருத்தல்தான் வீட்டிற்கழகு.

* * *

"இந்த பாழும்வீடு எப்படிபோனாலென்ன"? என்று வாய்விட்டு இரவும் பகலும் ஓயாமல் தகுந்த இடம் தகாத இடங்களில் நாய்போல் குரைப்பவள் பெண் ஆகமாட்டாள். நாயாகிலும் தானுண்ட வீட்டை இடைவிடாமல் காக்கிறது. இவள் நாயிலும் கடைகெட்டநாய்.

* * *

"இந்த இராவணனை 'சொல்லினால் சுடுவேன்' ஆனால் அது என் நாயகன் வில்லிற்கு பெருமையைக் குறைத்துவிடும் என்று எண்ணி செய்யவில்லை" என்றாள் சீதை அவளை ஹனுமார் வந்து அசோகவநத்தில் கணையாழியுடன் கண்டபொழுது. இதுதான் பதிவிரதையின் லக்ஷணம். கணவனது பெருமை லவலேசமும் குறையாமலிருக்கவேண்டுமென்பது அவள் கருத்து.

* * *

ஆலும் வேலும் பல்லுக்குருதி
நாலுமிரண்டும் சொல்லிற்குருதி
வாளும் வேலும் அடலுக்குருதி
பாலும் நெய்யும் உடலுக்குருதி"—என்பது
ஒரு பழமொழி.

"பல்லைத் தேய்த்துச் சுகமாகவைக்கவேண்டுபவர் ஆலங்குச்சியும் வேலங்குச்சியு முபயோகிப்பாராக! தமிழ்ச்சொல்லின் அருமையை அநுபவிக்க இஷ்டங்கொண்டவர்கள் திருவள்ளூர் எழுதிய திருக்குறளும், ஜைனமுனிவர்களியற்றிய நாலடியாரையும் படித்தறிவாராக! சண்டைசெய்து யுத்தம் ஜயிக்க விரும்புவோர் வாளையும் வேலாயுதத்தையும் பிரயோகிக்கக் கற்றறிவாராக! உடம்பைச் சரியாகக் காப்பாற்ற விரும்புவோர் பாலையும் நெய்யையும் அருந்துவாராக!" என்பது இதன் கருத்து. அதேமாதிரி வீட்டின் அழகைக் காணவிரும்புவோர் பத்தினிக்குரியகுணங்களை அடைவாராக.

* * *

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்றாள் ஔவை. சொற்றிறம்பாமையாவது என்ன? தனது நாயகன் மனதுகோணாமல் நிற்கு நிலை. அவர் ஒருவேளை சிலதப்பிதங்கள் செய்தாலும் அதைப் பொறுத்து நடப்பதுதான் பெண்களுக்குப் பெருமை. அவர் மனது கோணும்படி நடத்தல் தனது அகங்காரத்தைக் காட்டுகிறது. வணக்கம்தான் பெருமை உண்டாக்கும். வணக்கமடைந்து கணவனுக்கு தக்கமாதிரி நடக்க மனங் கொண்டு வாழ்வதுதான் பெண்களுக்கு பெயரை உண்டாக்கும். அப்படியே நடந்து பெருமை அடைவாராக.

வா. சேஷகிரி சாஸ்திரி.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

ஸமுத்திரத்தில் அடிக்கும் புயல் சென்று தாக்கும் ஆழம்.—ஸமுத்திரத்தில் அடிக்கும் பயங்கரமான புயல்காற்றுக்களின் வேகம் 15-அடி ஆழத்திற்குக் கீழே தெரிகிறதே இல்லை என்று பூதத்துவ சாஸ்திரிகள் பரிசோதனையின்மேல் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கு முக்கிய ஆதாரம் முத்து முதலியவைகளை எடுத்துவர குளிப்பவர்கள் ஸமுத்திரத்தின் அடியில் மேலே நடக்கும்படியான அல்லோலகல்லோலங்களை அறியாமலே தமது தொழிலை நடத்துவது ஒன்று. இன்னும் சிற்சில ஸமயங்களில் ஸமுத்திரத்தில் மூழ்குவோர் நல்ல இளங்காற்று வீசும் ஸமயங்களில் மூழ்கி வெளிவருங்கால் பெரும்புயல் அடிப்பதைக் கண்டிருக்கிறார்கள். வெளிவரும் வரையில் அவர்களுக்கு புயலடிப்பதாகத் தோன்றவே இல்லையாம். இது மற்றொரு ஆதாரம்.

*
* *

வர்ணக்கண்ணாடி போட்டுக்கொள்வதால் உள்ள குணாகுணங்கள்.—ஸாதாரணமாக கண்ணாடிகளில் நீலம், மஞ்சள், பச்சை ஆகிய இவ்வர்ணமுடைய கண்ணாடிகளே அதிகமாக உபயோகத்தில் இருப்பவை. இவைகளுள் நீலக்கண்ணாடி ஸூரிய வெளிச்சத்திலுள்ள உஷ்ணத்தையும் அதிலுள்ள கெட்ட குணத்தையும் எடுக்கும் சக்தியுள்ளது. ஆனால் அது ஸூர்யவெளிச்சத்தை அதிகமாக வளையும்படி செய்வதில் அதிகமாக தூரதிருஷ்டி குறைந்தவருக்கு அவ்வளவு உபயோகமாக இருக்கிறதில்லை. இதுபோட்டுக்கொண்டால் வெளிவஸ்துக்களின் பிரகாசம் அதிகமாகக் குறைவதில்லை. பச்சைக்கண்ணாடிக்கும் நீலக்கண்ணாடியின் குணங்கள் உண்டு. ஆனால் அதன் குற்றங்கள் ஒன்றும் இல்லை. வெளிவஸ்துக்கள் சற்றுமங்கலாகக்காணப்படும். ஆகையால் மிகுந்த பிரகாசமுள்ள வெளிச்சங்களைப் பார்த்து கண்ணில் ஓர்விதக் கூச்சம் உடையவர்களுக்கு இது அதிக உபயோகம். மஞ்சள் கண்ணாடிக்கு அதிப்பிரகாசமான வெளிச்ச பாகங்களைத் தடுக்கும் சக்தி இல்லாததால் அது போட்டுக் கொள்வதற்குத் தகுந்த கண்ணாடி அல்ல.

*
* *

சீமை பேரிக்காய் மூச்சுவிடுவது.—சீமையில் ஒரு வித்வான் பேரிக்காய் மூச்சுவிடுவதை பரிசோதித்து வெளியிட்டிருக்கின்றனர். பேரிக்காய்களை ஓர் இடத்தில் சேர்த்து வைத்திருந்தால் அவைகள் ஜந்துக்களைப்போலக் கரியமல வாயுவை வெளியே விடுகின்றனவாம். அவைகள் இவ்வாறு மூச்சுவிடுவதால் வரவர மிருதுவாக அவைகளின் கனமும் குறைகின்றதாம். அப்பேரிக்காய்களை அதிக குளிர்ச்சியான இடங்களில் சேர்த்துவைத்தால் அவைகள் அதிகமாக மூச்சுவிடுவதில்லையாம். ஆகையால் அப்பழத்தில் வியாபாரஞ் செய்வோர் அவைகளைப்பறித்த உடன் குளிர்ந்த இடங்களில் சேர்த்து வைக்கவேண்டும். இல்லாவிடில் அவைகளுக்கு நீடித்துக் கெடாதிருக்கும் சக்தி போய்விடும்.

*
* *

மாற்றி எழுதும் குழந்தை.—ஆறுவயதுள்ள ஒரு சுறுசுறுப்புள்ள பையன் ஒருவன் எழுதக் கற்றுக்கொண்டிருந்தான். எழுதியிருக்கும் எழுத்தைப்பார்த்து அவன் ஸரியாக எழுதுவான். அவனையே தனியாக எழுதும்படி விட்டுவிட்டால் அவன் காகிதத்தின் வலதுபாகத்தில் தொடங்கி இடதுபாகவரையில் வெகு லகுவாக மாற்றி எழுதிவிடுவான். அதை வாசிக்கவேண்டுமாகில் கண்ணாடிக்கு எதிரில் பிடித்து நிழல் மூலமாக அதை எளிதில் வாசித்து விடலாம். அவனுக்கு இரண்டுவிதமான எழுத்துக்களையும் எளிதில் வாசிக்கும் திறனுண்டு. எது ஸரியான எழுத்தென்று அவனைக் கேட்டால் வலது பக்கத்திலிருந்து இடது பக்கம்வரைமாற்றி எழுதும் எழுத்தே ஸரியானது என்பான். அவன் படம் எழுதும் ஸமயத்தில் படத்தை ஸரியாக எழுதிவிடுகிறான். ஒருதரம் ஒரு நீராவி வண்டிப்படம் ஒன்றைப் பார்த்து ஸரியாக எழுதிவிட்டான். ஆனால் அதில் இருந்த எழுத்துக்களைத் தலைமாற்றி எழுதிவிட்டான். ஆகவே இவனுக்கு எழுத்து விஷயங்களில் மாத்திரந்தான் இந்த குற்றம் போலத் தோற்றுகிறது காணப்படுகின்றது.

*
* *

இக்காலத்திய நாகரீகம்.—ஒரு பெரிய வித்வான் ஒருவர் 'இக்காலத்தில் பிரகிருதிசாஸ்திர ஞானம் நாகரீகம் முதலியன அதிகமாக இருந்தபோதிலும் நாம் முற்காலத்தவர்களைவிட மேன்மையான நிலையில் இல்லை. முற்காலத்தவர்கள் சரித்திரங்கள் அவர்கள் செய்திருக்கும் வேலைகள் முதலியவைகளால் அவர்களுக்கு இருந்த புத்தி விசாலமும் நற்குணங்களும் நம்மிடம் அதிகமாக இல்லையென்று தெரியவருகின்றது. ஆகையால் முற்காலத்தவர்கள் நம்மைவிட-

புத்திக்குறைவு உடையவர்கள் என்பது வீணான எண்ணமேயொழியவேறில்லை. அவர்களைபக்ஷபாதமின்றி, உள்ளபடி அறியவேண்டுமென்ற ஆவலோடும் அன்போடும் அவர்கள் விஷயங்களை ஆராய்வோமாகில் அவர்களுக்கும் நமக்கும் புத்திவிஷயங்களில் அதிக பேதங்கள் இல்லை என்பது வெளிவரும். உலகத்தில் உள்ள நாகரீகமற்ற ஜாதியார்களிடத்தும் காணப்படும் நற்குணம் ஸமூகவாழ்க்கை முதலியவைகளை உற்று நோக்கில் அவர்களுக்கு எவ்வளவுதான் நாகரீகம் இல்லையாயினும் அவர்கள் நம்மைப்போன்ற தேகம், புத்தி, குணம் முதலியவைகளில் சிறப்பை உடையவர்கள் என்பது தெரியவரும்' என்று அபிப்பிராயப்படுகிறார்.

* * *

பறக்கும் கப்பல்கள்.— அநேகம் பிரகிருதி சாஸ்திரிகள் ஆகாயத்தில் பறக்கும்படியான கப்பல்களை உண்டாக்கலாமென்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றிச் சிலர் கதைகளில் எழுதியும் வெளியிட்டிருக்கின்றனர். இக்காலத்தில் பறக்கும் கூண்டுகள் ஸம்பந்தமாக பெரிய கப்பல்களைச் சேர்த்து ஆகாயத்தில் கிளம்பும்படி செய்து அதில் ஜனங்கள் ஏறிச்செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது. இன்னும் சொஞ்சகாலத்தில் ஆகாயமார்க்கமாக நாம் எளிதில் யாத்திரைசெய்யத்தக்க ஸௌகரியங்கள் ஏற்பட்டாலும்படலாம். இப்பொழுது சிற்சிலஇடங்களில்ஆகாயயாத்திரைநடந்துகொண்டிருக்கின்றது. ஆனால் அது எல்லோருக்கும் உபயோகமாகும்படியான ஸ்திதிக்கு வரவில்லை. கூடிய சீக்கிரத்தில் அவ்வாறு வந்து விடும்போலக் காணப்படுகின்றது.

* * *

சண்டை வண்டிகள்.—இதுவரையில் நடந்த சண்டைகளில் காலாட்கள், குதிரை ஸேனை, பீரங்கி ஸேனை ஆகிய மூன்றுமே அதிகமாகக் காணப்பட்டன. இப்பொழுது சண்டையில் தாமாகவே ஓடும் வண்டிகளைஉபயோகிக்கத்தொடங்க ஏற்பாடுகள்நடக்கின்றன. முற்காலங்களில் இந்தஸ்தானத்தில் ரதசேனை இருந்தது ஆனால் அதற்கும் இந்தப் புதிய சண்டைவண்டிகளுக்கும் அதிக பேதமுண்டு. முற்காலத்து ரதங்களுக்கு ஸாரதி குதிரை முதலியன, வேண்டும். எதிரிவிடும் பாணங்களைத் தடுக்கத்தக்க ஏற்பாடுகள் அதில் இல்லை. இக்காலத்தில் ஏற்பாடு ஆகும்சண்டைவண்டிகளுக்குத் தாமாகவே நகரும்சக்தி உண்டு. அதில் பீரங்கி முதலியன வைக்க இடமுண்டு. அது ஒருசிறு கோட்டையைப் போன்ற பந்தோபஸ்த்துகள் உடையது. அது சண்டையுள் போகும்போது ஸேனைகளைச் சின்னாபின்னப்படுத்தும். மேலும் ஸேனாதிபதி இம்மாதிரியான வண்டிகளில் ஏறிக்கொண்டு சண்டை கோரமாக நடந்துகொண்டிருக்கும் பொழுதே எதிரிகளின் குண்டுகளை லக்ஷியஞ் செய்யாது தைரியமாகத்தனது ஸேனையை மேல்பார்வை பார்த்து வரலாம். கூடிய சீக்கிரத்தில் இவ்வண்டிகள் இக்காலத்து ஸேனைகளில் ஒரு அங்கமாகப்போக ஸேனைகள் ரதம், குண்டு, குதிரை காலாட் படைகள் ஆகிய சதுரங்கஸேனைகளாகிவிடும் போலத்தோற்றுகிறது.

* * *

ஊசிகள் தேகத்துள் பாய்ந்துபோவது.—மனித தேகத்துள் ஊசிகள்போய் இடம்விட்டு இடம் ஓடிப் போகின்றதாம். ஒருத்திக்கு இடது காலில் ஊசிகுத்தி உள்ளே ஏறிவிட்டதாம். அதுபோனது அவளுக்குத் தெரியாமற்போக அது அவள் தேகத்துள்ளேயே 30-வருஷம் இருந்ததாம். அது அதற்குப்பின் அவளது வலது முழங்கையில்தோன்ற அதை எளிதில் எடுத்து விட்டார்களாம். மற்றொருவளுக்கு இடது கட்டை விரலில் ஊசி குத்தி முறிந்து பாய்விட்டதாம். அப்பொழுதே அந்த ஊசியை எடுக்க வைத்தியர்கள் முயன்றும் அது அவர்களுக்கு அகப்படவில்லை. ஒரு வருஷம் கழிந்தபின் அவளுக்கு வலது சுண்டு விரலில் ஏதோ ஒரு குறு குறுப்புத் தட்ட அவள் சதையைக்கீறி அங்கிருந்து ஊசியின் ஒடிந்த பாகத்தை எளிதில் எடுத்து விட்டாள். 20-வயதுள்ள வேறொரு ஸ்திரீக்கு வாயில் குண்டூசியை வைத்திருக்கும் கெட்டவழக்கம் இருந்ததாம். அவள் வாயில் ஊசியோடு சிற்சில ஸமயங்களில் மெய்ம்மறந்து தூங்கிவிடுவாள். ஒரு ஸமயத்தில் அவளுக்குத்தான் 5ஊசிகளை விழுங்கிவிட்டதாகத்தோற்ற வைத்தியசாலை சென்று வாந்திக்கு மருந்து வாங்கிக்கொண்டு அவள் 5 ஊசிகளையும் வெளியில் கக்கிவிட்டாள். வீடுவந்ததும் அவளுக்கு வாந்திக்கு அடிக்கடி வருவது போலத்தோன்ற சிற்சில ஸமயங்களில் அவள் இதற்கு முன் அறியாது விழுங்கிய ஊசிகளை வாந்தி செய்தாள். அடுத்த ஒரு மாதத்திற்குள் அவள் ஸுமார் 23 ஊசிகளையும, அடுத்த பக்ஷத்தில் 13 ஊசிகளையும், மூக்கு, இடது காதின் பின்பாகம், வலது கையின் முன்புறம், ஆகிய இவ்விடங்களில் இருந்து வெளியாக்கினர். மேலும் 75 ஊசிகள் வெளிவரும்படி வாந்தியையும் செய்தாள். அதில் இரண்டில், மூன்று அங்குலம் நீளம் நூல்களும் கோர்க்கப்பட்டிருந்தனவாம்.

ஸ்ரீ ராம பட்டாபிஷேக மஹோத்ஸவம்

மயிலாப்பூர் பீ. எஸ். ஹைஸ்கூல் முதல் உதவிப் போதகரான ஸ்ரீமத் ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர், பீ. ஏ., எல். டி., அவர்களால் ஒழுங்குபடுத்தி எளிய நடையில் இயற்றப்பட்ட ஸ்ரீ ராமாயண வினாவிடையை இவ்வருஷம் முதல் வகுப்பில் வரிசையாய்ப் படித்துவந்த பிள்ளைகள் முடிவில் ஸ்ரீராம பட்டாபிஷேகத்தைக் கோலாகலமாய் கொண்டாடக் கருதி இம்மாதம் 15உ 3-மணிக்கு மேற்படி ஸ்கூலில் இந்த உத்ஸவத்தை யாரம்பித்து வெகு சிறப்பாய் நடத்தினார்கள். அப்போது மேற்படி ஸ்கூல் ஹெட் மாஸ்டராகிய ஸ்ரீமான் ஏ. பஞ்சாபகேசய்யர் எம். ஏ., எல். டி. அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். இன்னும் அநேக உபாத்தியாயர்களும் பிரபுக்களும் விஜயஞ் செய்திருந்தார்கள். ஆரம்பத்தில் பள்ளிக்கூடத்தில் வழக்கமான ஸ்தோத்திரங்கள் பாடப்பட்டபிறகு ஒரு பையன் வால்மீகி, ஹனுமார், ராமாயணம், ஸ்ரீ ராமர் இவர்களின் ஸ்தோத்திரங்களை வெகு நன்றாய்ச் சொல்லியவுடன் அக்ராஸனாதிபதியவர்கள் அந்த சுலோகங்களின் உட்பொருள்களைச் சிறுவர் முதலிய எல்லாரும் வெகு இலகுவாய்த் தெரிந்துகொள்ளும்படி சர்க்கரைப்பந்தலில் தேன்மழை பொழிந்தாற்போல் பிரசங்கஞ் செய்தார்கள். ஒரு பையன் மேற்படி புஸ்தகத்தி லுள்ள இராமாயணக்காண்டக் கதையின் சுருக்கத்தைப் படித்தான். பின்பு உதவி ஸம்ஸ்கிருதபண்டிதரான ஸ்ரீ ராமநாத சாஸ்திரிகளவர்கள் வால்மீகி ராமாயணப்படி ஸ்ரீ ராமபட்டாபிஷேக ஸர்க்கத்தை வாசித்துத் தமிழில் பிரசங்கஞ்செய்தார்கள்.

பிறகு ஒரு பையன் ராமாயணத்திலிருந்து வெளியாகும் நீதிகளை வினாவிடையில் உள்ளவாறு வாசித்தான். இதன்பின்பு அக்ராஸனாதிபதியவர்கள் அந்தச்சமயத்தில் வரவழைக்கப்பட்டிருந்த இராமாயண சம்பந்தமான படங்களின் அர்த்தத்தை விவரித்துச் சிறுவர்களுக்கெடுத்துரைத்தார்கள். அப்பொழுது வரவழைத்திருந்த படங்களாவன:—

1. மஹாவிஷ்ணு திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருத்தல்.
2. இராமலக்ஷ்மணனள் விசுவாமித்திரரிடம் அஸ்திராப்யாஸஞ் செய்தல்.
3. பகீரதன் கங்கையைக் கொண்டுவருதல்.
4. அஹல்ய உத்தாரம்.
5. இராமர் தனுஸை ஒடித்தல்.
6. பரசுராமர்.
7. குஹன் இராமருக்கு ஓடம் விடுதல்.
8. இராமர் வனவாஸம்.
9. ஸீதா ஸ்வர்ணமிருகம்.
10. இராவண ஸந்யாஸி.
11. தர்ப்ப சயனம்.
12. இராமர் ஸமுத்ரராஜனைக் கோபித்தல்.
13. ஹனுமார் ஸஞ்ஜீவிபர்வதம் கொண்டுவருதல்
14. இராம பட்டாபிஷேகம்.
15. இராம பஞ்சாயதனம்.
16. இந்திரஜித் விஜயம். ஆகிய இவைகளே.

இவ்வாறு நடந்ததும் ஒரு பையன் எழுந்திருந்த இவ்விதம் இராமாயணம் முழுமையும் தாங்கள் கற்றுக்கொண்டதால் தமக்குத் தோன்றிய நன்றியறிதலின் அறிகுறியாக ஸ்ரீ சீதாஸ்வயம்வரம், ஸ்ரீராமபஞ்சாயதனம் ஆகிய இரண்டு படங்களைப் பள்ளிகூடத்திற்குத் தானஞ் செய்திருப்பதாகக் கூறினான். பிறகு அக்ராசனாதிபதியவர்கள் இவ்விதம் சிறுபையன்களாகச் சேர்ந்து ஸ்ரீராம பட்டாபிஷேகத்தை வெகு விமரிசையாய் நடத்தியதுடன் தாங்கள் நன்றியறிதலோடு படதானஞ்செய்ததை வெகு அன்போடு அங்கீகரித்துத் தமது ஸந்தோஷத்தை வெளியிட்டார். பின்பு தீபாராதனம் முதலிய ஆராதனங்களோடும், ஜயகோஷத்தோடும், பிரஸாதம் முதலியவைகளின் விநியோகத்தோடும், வெகுநன்றாய் ஸ்ரீராம பட்டாபிஷேகம் நடந்தேறியது. எல்லாரும் வெகு சந்தோஷமடைந்தார்கள்.

இவ்விதம் ஆங்காங்கு பள்ளிக்கூடங்களில் நமது மத உண்மைகளை யுணர்த்தக்கூடிய ஸ்ரீராமாயண வினாவிடை, ஸ்ரீ மகாபாரத வினாவிடை முதலிய ஸத்கிரந்தங்களைப் பாடமாய் நடத்திப் பிறகு வருஷக் கடைசியில் ஸ்ரீ ராமபட்டாபிஷேகம் முதலிய உத்ஸவங்களைப் பிள்ளைகளைக்கொண்டு படிக்கச்சொல்லி நடத்தினால் நமது சிறுவர்களுக்கும் நாட்டிற்கும் க்ஷேம முண்டாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

"விவேக போதினி"

ஓர் முக்கிய அபிப்பிராயம்.

சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-௱-௱-ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்:—
"சிலமாதங்களாக வெளிவரும் விவேகபோதினி என்னும் பத்திரிகையிற் சில பகுதிகளைப் படித்துப்பார்த்தேன். மதஸம்பந்தமான விஷயங்களும், நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும் சில மொழிபெயர்ப்புக்களும், தற்காலத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளியநடையில் எழுதப்பெற்றிருக்கின்றன; சிறுவர்களும் பெண்பாலாரும் இதனால், பல விஷயங்களையும் எளிதாக அறிந்து தெரிந்துகொள்ளலாம்.

தமிழ்ப் பாஷாபிமானிகளாகிய பிரபுக்கள் இதனை ஆதரித்து, இதைப் பிரசுரஞ்செய்துவரும் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்."

V. Kalyanram Iyer & Co., BOOK-SELLERS, ESPLANADE, MADRAS.

மஹாபாரதம்
சாந்திபர்வம்.

கும்பகோணம்

பிரும்ம ஸ்ரீ பாரத சாமாசாரியாரவர்களால்

எளிய தமிழ்நடையில் மொழி பெயர்க்கப்பட்டு,

பிழையறப் பரிசோதித்து

நல்ல காகிதத்தில் பெரிய எழுத்தில் அச்சிட்டு காலிகோவில் நன்றாய்ப் பயிண்ட் செய்திருக்கிறது.

இப்பொழுது தயாராயிருக்கும்

1-ம் பாகம்	ரூ.	2	0	0
அச்சிலிருக்கிற 2-ம் பாகம் ...		2	0	0
இப்பொழுதே இரண்டாம் பாகத்துக்கும் சேர்ந்து முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு		3	0	0

"அதிப்பிரஸித்தர்களாகிய ஸ்ரீமத் பாகவதம் சாமண்ணாசார்யரவர்கள் தமிழில் மொழி பெயர்த்து வைத்திருக்கும் ஸ்ரீ மஹாபாரதம் சாந்திபர்வத்தின் வசன நடையிற் சில பாகங்களை படித்துப் பார்த்தேன். அவை பொருட் சிறப்புற்று மிக்க இன்பத்தை விளைவிக்கின்றன. இதுபோன்ற ஸரியான மொழிபெயர்ப்பைத் தமிழ் நாடு இதுவரையிற் பெற்றிலதென்று சொல்லலாம்.

பாரதத்தில் இப்பர்வமானது பலவகைப்பட்ட தருமங்களையும் உபாக்கியானங்களையும் தெரிவித்தும் ஸாரமான பகுதியென்பதும் அவற்றைத் தெரிந்து கொள்ளுதல் இரு பாலார்க்கும் பெரும் பயனை விளைவிக்குமென்பதும் யாவரும் அறிந்த விஷயங்கள். வடமொழிப் பயிர்ச்சியில்லாதவர்கள் மேற்கூறியவற்றைத் தெரிந்துகொள்ளுதற்கு இம்மொழி பெயர்ப்பைப் போன்ற சிறந்த கருவி வேறேயில்லையென்பது திண்ணம். * * *"

இங்ஙனம்,

19-10-1907. வே. சாமிநாதையன்,

Pundit Presidency College, Madras.

நாலாயிர திவ்யப்பிரபந்தம்.---640 பக்கம்	3	0	0

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிசசெய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்பும், (5) பாசுரங்களின் முதலடி அகராதியும் (6) பாடபேதக் குறிப்புகளும் சேர்த்துபலபிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப் பெற்றுளது.

மனுதர்மசாஸ்திரம் 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழி பெயர்ப்பும்—560 பக்கம் ...	2	4	0
ஸ்திரீ புருஷசாமுத்ரிகாலட்சணம்...	1	0	0

ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்

பண்டித-நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு,

தகுந்த தமிழ் வித்வான்களால் பார்வையிடப்பட்டு, பிழையறப் பரிசோதித்துப்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது. இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் பிழையறப் பரிசோதித்து, செவ்வையாய் அச்சிட்டு சேர்த்தியான காலிகோவில் அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

தயாராயிருக்கும் காண்டங்கள்

பாலகாண்டம்	ரூபா.	1	12	0
அயோத்தியாகாண்டம் ...	,,	3	0	0
ஆரணியகாண்டம் ...	,,	1	12	0
கிஷ்கிந்தாகாண்டம் ...	,,	1	12	0
4 காண்டமும் சேர்த்துவாங்கினால்	,,	7	4	0

மற்றய காண்டங்கள் இப்பொழுது விரைவாய் அச்சிடப்பட்டு வருகின்றன. சீக்கிரம் வெளிவரும்.

இதரத் தமிழ்ப் புத்தகங்கள்

நன்றாய்ப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

மூவர் தேவாரம்-பண் முறை---1044 பக்கம்	3	0	0

இப்பதிப்பில் (1) சம்மந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவாரவரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப்பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப்பொப்து பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச்செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்

வாசுதேவ மனனம்	1	0	0
சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம்	0	2	0
சுகர் கைவல்லியம்	0	2	0
வைராக்கிய சதகம்	0	2	0
ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபவள்ளலார் சாஸ்திரம்	1	8	0
மகாராஜா துறவு	0	6	0
தாயுமானவர்பாடல்	0	12	0
வேதாந்தபோதினி	0	8	0

வி கல்யாணராமய்யர் அண்டு கோ., புக்செல்லர்ஸ், எஸ்பிளனேட், சென்னை.